# கலைக்கப்பட்ட கூடு

குலாம் மஸீஹ் நாமான்



Kalaikkappatta Koodu
(TAMIL)

TORN NEST

By
Gulam Masih Naaman

All rights Strictly reserved. No Part of this publication may be transtated or transmitted on any form or by any means electronic or mechanical, including photocopy. recording or any information storage and retrieval system without permission in writing from the publisher.

## பொருளடக்கம்


1. இங்கிலாந்திலுள்ள நண்பர்கள்
2. துண்டு துண்டாகக் கிழிக்கப்பட்டது
3. கூடுகட்டுதலும் கல்வி புகட்டலும்
4. கட்டியெழுப்பும் அன்பு
5. நான் நினைவுகூரும் கூடுகள்
6. மேலதிகக் கூடுகளும் பிரச்சனைகளும்
7. வெள்ளை யானைகளும் கார்களும்
8. இதுதான் எனது கூடு
9. இதுதான் என் மகன்
10. நீங்கள் கட்டுவது எப்படி என்று கவனமாயிருங்கள்

பிற்சேர்க்கை:

தனது சொந்த வார்த்தைகளில் ஓபேதின் சாட்சி

அறிவுத் திறன் கேள்விகள்




# அத்தியாயம் 1

## இங்கிலாந்திலுள்ள நண்பர்கள்

நான் எனது எண்ணங்களுடனும் ஜெபங்களுடனும் தனிமையில் அமர்ந்திருக்கிறேன். நான் பாகிஸ்தானில் இருப்பதற்குப் பதிலாக இங்கிலாந்தில் உட்கார்ந்து கொண்டிருக்கிறேன். என் அன்பு மகன் ஓபேதின் திருமணம் நடைபெறவேண்டிய, என் குடும்பமே மகிழ்ந்து கொண்டாட வேண்டிய இத்தருணத்தில் நான் கண்ணீரோடு உட்கார்ந்திருக்கிறேன். நான் பணி ஓய்வு பெறும் நிலையில் என் மகன் உடனிருந்து குடும்பத்தைப் போஷிப்பவனாக உதவி செய்யும் பாக்கியமற்றவனாய் உட்கார்ந்திருக்கிறேன்.

ஆறு மாதங்களுக்கு முன்பு அதாவது 1990 ஜுன் மாதம் 2ம்தேதி அந்த மரண இரவில் என் மகன் ஒரு முஸ்லிம் தீவிரவாதியால் சுடப்பட்டான். நான்கு ஆண்டுகளுக்கு முன்பே எங்களை அச்சுறுத்திக் கடிதங்கள் வந்தன என்பதால் ஒரு அர்த்தத்தில் அதை நாங்கள் எதிர்பார்த்தே இருந்தோம். அது மெய்யாகச் சம்பவித்தபோது மிகவும் நாசகரமாக இருந்தது, ஆனாலும் அது ஒரு கிருபையின் சமயமாகவுமிருந்தது. அடுத்த நாள் எங்கள் ஆலயத்தில் அடக்க ஆராதனை ஹைதராபாத்திலிருந்து வந்த ரெவரெண்ட் ஜான்சன் அவர்களால் நடத்தப்பட்டது, என் சுகவீனத்தினிமித்தம் எனது மகள் கைத்தாங்கலாக என்னை ஆலயத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டேன்.

அங்கு சமாளித்து எழுந்து நின்று என் மகனைக் கொன்ற வர்களை நான் மன்னித்தேன்; இங்கு அவர்கள் வருவார் களானால் அவர்கள் கைகளை முத்தமிடவும் ஆயத்தமா யுள்ளேன் என்று சாட்சி கொடுத்தேன். ஜெபம் வேண்டி அடுத்த நாள் தந்திகளை அனுப்பவும், இங்கிலாந்தில் இருக்கும் எனது நண்பர்களுக்குக் கடிதம் எழுதவும் முடிந்தது. 'இந்தக் காயத்தை நான் நன்றியுள்ள விதத்தில் ஏற்றுக்கொண்டேன். எனக்கிருந்த விலையேறப்பெற்ற மகனை பாகிஸ்தானில் பலியாக்கினேன். இந்த துன்பக் கிண்ணத்தில் பருக நேர்ந்த நானும் என் மனைவி டெய்சியும் மிக அதிர்ஷ்டமான பெற்றோர். நமக்கு மிகுந்த வேதனையின் மத்தியிலும் மன்னிப்பதன் அர்த்தத்தை இப்போதுதான் உணருகிறோம்' என்பதே அதன் சாரம்.

அதே நேரத்தில் நாங்கள் முற்றிலும் உடைந்து போனோம். எங்கள் கூடு பிரிக்கப்பட்டுவிட்டது; அது உடைக்கப்பட்டது. எங்கள் உணர்விழந்த நிலையில் துக்கத் தில் பல நடைமுறைச் சிக்கல்களைச் சந்திக்க நேர்ந்தது. நாங்கள் சுக்கூரை விட்டு வெளியேற வேண்டியதாயிற்று. நான் என் மனைவி டெய்சியை அழைத்துக் கொண்டு போய் இன்னும் அதிகம் பாதுகாப்புள்ள சியால்கோட்டி லுள்ள அவளுடைய வீட்டில் விட்டேன். சுக்கூரில் உள்ள புனித இரட்சகர் ஆலயத்தில் பதினேழு ஆண்டுகள் பணி செய்தபின்பு என் பொறுப்புகளை ஒப்படைக்க இப்போது நான் ஆயத்தமானேன்; அக்டோபர் மாதம் முதலாம் தேதி பாகிஸ்தான் சிந்து மாகாணத்தில் 30 ஆண்டுகள் நியமன ஊதியம் செய்து முடித்தவனாகப் பணி ஓய்வு பெற்றேன்.



வெகு துரிதமாக டெய்சியும் நானும் இங்கிலாந்து நாட்டுப் பாதுகாப்பில் குறைந்தது ஆறு மாதமாவது வந்து தங்கவேண்டுமென என்னுடைய சிஎம்எஸ் நண்பர்கள் அழைத்தனர். அங்கு போவதற்குத் தேவையான நுழைவு அனுமதிகளை முயற்சித்து வாங்கினேன். ஆனால் டெய்சி தாங்கொணா துக்கத்திலிருந்ததால் சியால்கோட்டிலேயே தங்கிவிடத் தீர்மானித்தாள். கொரியாவில் இறையியல் கல்லூரியில் படிப்பை முடித்து எங்களது இன்னொரு மகன் வருகையை எதிர்பார்த்திருக்கவும் முடிவு செய்தாள். எங்களது மகள் குல்தா உணர்ச்சியகற்றும் மருத்துவ இயல் படிப்பை முடிப்பதற்காக கராச்சியில் இருந்துவிடத் தீர்மானித்தாள். ஆகவே 1990ம் ஆண்டு அக்டோபர் மாதம் 17ம்தேதி நான் இங்கிலாந்தில் என்ன செய்வேன் என்ற தீர்மானம் ஏதுமின்றி இலண்டன் ஹீத்ரூ விமான நிலையத்துக்கு தனிமையில் பறந்தேன். முந்தின சந்தர்ப் பத்தில் எனது சிஎம்எஸ் நண்பர்கள் எனக்கான வசதிகளைச் செய்து தந்தனர். ஆனால் இம்முறை நான் தனது உடன் போர்வீரர்கள் யாவரும் களத்தில் மாண்டு போக, தான் தோற்றுப்போன இராணுவத் தளபதி போல காணப்பட்டேன். என்னால் மற்றவர்களுக்கு எந்த நன்மையும் செய்ய இயலாது, ஆனால் தேவ பிள்ளை களுடன் எனது காயங்களைக் காட்டி கண்ணீர் சிறிது சிந்திக் கொள்ளவே என்னால் முடியும் என்று எண்ணிக் கொண்டேன். ஆயினும் இப்புதிய சூழ்நிலையை நான் சந்தித்தபோது எனக்குள் சமாதானத்தை உணர்ந்தேன்.

திருமதி. கேதரின் ரே அவர்கள் என்னை வரவேற்று தங்களது பர்மிங்ஹாம் இல்லத்துக்கு என்னை அழைத்துச் சென்றார். நான் உள்ளே சென்றபோதுதான் அங்கு பொருட்கள் இன்னும் அடுக்கிவைக்கப்படாமல் ஆங்காங்கே இருந்ததைக் கண்டு, சில நாட்களுக்கு முன்புதான் போதகர் ரேயும் திருமதி ரேயும் அந்த வீட்டிற்குக் குடிவந்தனர் என்று புரிந்து கொண்டேன். என்னை அவர்கள் வீடு முழுவதும் அழைத்துக் காண்பித்த பிறகு உணவளித்து உபசரித்தனர். அதன் பிறகு திருமதி கேதரின் தன் வீட்டு வேலைகளைத் தனியாகச் செய்ய லானார். அதை நான் வியப்புடன் கவனித்துப் பிறகு அவரிடமே காரணம் கேட்டபோது, பிரிட்டனில் வேலைக் காரருக்கு மிக அதிகக் கூலி கொடுக்க வேண்டும் என்றும் தங்களுக்கு வேலையாட்களை அமர்த்திக் கொள்ளுமள வுக்கு வசதியில்லை என்று அவர் விளக்கமளித்தார். அவர்கள் அனைவரும் மிகவும் அலுவலாக இருந்த பின்பு இலண்டன் மாநகருக்குப் புறப்பட்டுச் சென்றனர். அவர் களது புதிய கூட்டில் நான் தனிமையில் அமைதியாய் இருந்தேன் அது எனக்கு நம்பிக்கையின் ஒரு அடையாள மாய் மாறியது.

எனது சொந்தக் கூடு எங்கே அமையும்? என்னை அழைத்திருந்த நண்பர்கள் பல்வேறு யோசனைகளைக் கூறினர். பிஷப் மைக்கேல் நஸீர் அலி, சிஎம்எஸ் ரெவரண்ட் மார்க் ஆக்ஸ் புரோ, ஆர்தர் பாண்ட் மற்றும் இன்டர்செர்வின் கேய்த்வுட் மற்றும் வேறு சிலர் ஆனாலும்



உறுதியான தீர்மானம் எதுவும் செய்யப்படவில்லை. நாட்டின் பல பகுதிகளிலிருக்கும் என் நண்பர்களை தொடர்பு கொண்டு அவர்களைச் சந்திக்கப் பயணம் மேற் கொண்டேன். நான் பர்மிங்ஹாமுக்குத் திரும்பியபோது எடின்பர்க் நகரில் ‘ஏசியன் கன்செர்ன்’ என்னும் வாலிபர் குழு ஒன்று இருப்பதாக ரெவரண்ட்ரே மற்றும் திருமதி ரே என்னிடம் கூறினர். எடின்பர்க் நகரில் வாழும் பல இந்தியர் கள், பாகிஸ்தானியர்கள் மற்றும் இதர மக்களுக்கு நம்பிக் கையின் வசனங்களை எடுத்துச் செல்வதே அவர் களுடைய சேவையாக இருந்தது. அவர்கள் என்னை அழைத்தபடியால் நான் அங்கு சென்று அன்பான மக்களடங்கிய அக்குழுவைக் கண்டடைந்தேன். அவர் களில் ரேச்சல் மார்ஷ் மற்றும் மெய்யான ஸ்காட்டாக விளங்கிய அப்பி மெக்கில் ஆகியோர் இருந்தனர். அப்பியைச் சில நேரங்களில் புரிந்து கொள்வதே கடினமாக இருந்தது. பாகிஸ்தானில் சிறிதுகாலம் தங்கிய அனுபவமுள்ள மெரியின் ஆம்ஸ்ட்ராங்கையும், அன்பான தம்பதிகளான ஷபாஷ் ஜோஷி மற்றும் ஷமீம் ஆகியோ ரையும், புதிதாக கிறிஸ்தவ விசுவாசத்தில் வந்திருந்த அவர்களது மூன்று மகன்களையும், நேபாளத்தைச் சேர்ந்த பிரேந்திர ரோங்காங், அவர் மனைவி மொராக், மகன் டிம்பு ஆகியோரையும் இன்னும் சிலரையும் சந்தித்தேன். தேவனுடைய ஊழியத்தின் தரிசனம், வாஞ்சை மற்றும் மனவிருப்பம் உள்ள அம்மக்களோடு இருப்பதில் பெருமகிழ்ச்சி அடைந்தேன். தங்களோடு நான்

இணைந்து கொள்ளவேண்டிய அவர்கள் எனக்காக ஒரு வீட்டை ஆயத்தம் செய்தனர். இன்னும் எதுவும் முடிவாகாத படியால் பர்மிங்ஹாமில் வாழ்ந்த ஆசிரியர்களைச் சந்திக்க எனக்கு நேரம் கிடைத்தது. தனிமையில் உட்கார்ந்து அமைதியாயிருக்கவும் நேரம் கிடைத்தது. என் கண்களில் கண்ணீர் பெருகியது. என்னுடைய இழப்பும் என் வெறுமையும் நீண்ட காலத்துக்கு முன்பு நான் கண்ட மற்ற மக்களுடைய சோகங்களை என் நினைவில் கொண்டு வருவது போலத் தோன்றியது.

## அத்தியாயம் 2

## துண்டுதுண்டாகக் கிழிக்கப்பட்டது

இன்று, இங்கு நான் அமர்ந்திருக்கையில் இரண்டாம் உலகமகாயுத்தத்தின் போது நிகழ்ந்த ஒரு கொடிய நிகழ்வு கண்களுக்கு முன் நிழலாடியது. நான் பர்மாவில் பணியிலிருந்தேன், ரங்கூன் பட்டணம் பலமுறை குண்டுகளால் தாக்கப்பட்டதைக் கண்டேன். முதலில் ஜப்பானியர்கள் குண்டுவீசித் தாக்கினர், பிறகு நேசநாட்டுப்படைகள் அவர்களை விரட்ட முயற்சித்தனர் இது மீண்டும் மீண்டும் நிகழ்ந்தது. ரங்கூன் பட்டணத்தில் ஒன்றும் மீந்திருக்கவில்லை என்று சொல்லுமளவுக்கு நான்குமுறை குண்டுவீசித் தாக்கப்பட்டது. ஜப்பானியர் களின் தாக்குதலுக்குப் பிறகு யாராவது உயிர் தப்பி யிருக்கிறார்களா என்று சுற்றிப் பார்த்துவர எங்களுக்குக்



கட்டளையிடப்பட்டது. மோசமான குண்டுத் தாக்குதலுக்கு ஆளான ஒரு பகுதிக்குச் சென்ற நாள் நினைவுக்கு வருகிறது. உடைந்த படிகளைக் கடந்து ஒரு அறைக்கு ஏறினேன். கதவின் அடியில் இரத்தம் வழிந்து கொண்டி ருந்தது . உள்ளே அதிர்ச்சியூட்டிய காட்சி: புதிதாய் மணமான தம்பதியர் படுக்கையிலே கொல்லப்பட்டுக் கிடந்தனர். அந்நாட்களில் இப்படிச் சூறையாடப்பட்ட பல கூடுகளை நான் கண்டேன்.

யுத்தம் முடிந்தபிறகு பட்டணத்தின் சிவப்பு விளக்குப் பகுதியில் கண்ட சில காட்சிகள் நினைவுக்கு வருகின்றன. காவல் பணியாளர்களுக்கு மேற்பார்வை யாளராக என்னை நியமித்திருந்தனர். இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும், சிட்டகாங் மற்றும் வங்காளத்தின் இதர பகுதிகளிலிருந்தும் வந்திருந்த இளவயது விபசாரிகள் இருந்த பகுதிகளைக் கண்காணிக்க வேண்டியிருந்தது. என்னுடைய வைதீக முஸ்லிம் முறைமையின்படி பழகிப் போன ஒரு பாதுகாப்பான குடும்ப வாழ்க்கையை மேற் கொள்ளாமல் இப்படிப்பட்ட வாழ்க்கை நிலையை அவர்கள் தெரிந்துகொள்ள என்ன காரணம் என்று அப் பெண் களைக் கேட்டேன். அப்பெண்கள் என்மீதிருந்த பயம் நீங்கின பின்பு என்னைப் பார்த்து, பசியும் தங்கள் குடும்பங் களைப் போஷிக்க வேண்டிய இக்கட்டான பணத் தேவையுமே தங்களை விபச்சாரத்தில் தள்ளியதாகக் கூறினர். அந்நாட்களில் அரசாங்கத்திலிருந்து எவ்வித உதவியும் கிட்டாத நிலையில் இந்திய மக்களில் பெரும் பகுதி பட்டினியை அனுபவிக்கலாயிற்று. வங்காளத்தில்

எங்கள் படைப்பிரிவு அங்காடிகளில் மிதமிஞ்சிய உணவுப் பொருட்களை மக்களுக்குக் கிடைக்கச் செய்வது எனது தார்மீகக் கடமை என்பதை உணர்ந்தேன். இதனால் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு உண்மையில்லாதவன் என்ற பழி எம்மீது விழுந்து என்மீது குற்றமும் சுமத்தப்பட்டது.

பின்பு 1947ன் ஆரம்பத்தில் ராயல் விமானப் படையிலிருந்து பணி ஓய்வு பெற்று ஜம்முகாஷ்மீருக்கு திரும்ப, அங்கு இன்னும் பேரழிவுகளை காண நேர்ந்தது. இந்தியா பாகிஸ்தான் பிரிவினையினால் மக்களின் உணர்வு பொங்கி அரசியல் கொந்தளிப்புள்ள சமயமாக அது இருந்தது. முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழ்ந்தும் அவர்கள் ஒரு இந்து மன்னனால் ஆளப்பட்டு அவனுடைய இராணுவபலத்தால் அடக்கப்பட்டிருந்த காஷ்மீரில் இவ்வுணர்வு உச்சநிலைக்குச் சென்றது. அடுத்து நான் என்ன செய்வது என்று திகைத்தேன். காஷ்மீரை இந்துக்களிடமிருந்து விடுவித்து பாகிஸ்தானிடம் ஒப்படைக்க விரும்பிய விடுதலைப் போராளிக் குழுவில் சேரும்படி எனது முஸ்லிம் மதத் தலைவர்கள் என்னை அழைத்துச் சென்றனர். இந்த ஜிஹாதில்(புனிதப்போர்) எனது முஸ்லிம் சகோதரர்களுக்கு உதவவேண்டும் என்ற நிச்சயம் எனக்கு இருந்தது. ஆனால் நான் பெருமள விலான அழிவுக்குப் பொறுப்பாக வேண்டியதாயிற்று. பின்னிரவில் காஷ்மீரின் தென்பகுதியிலுள்ள இந்து வீடுகளுக்குத் தீ வைப்பதே அவர்களுடைய உத்தியா யிருந்தது. கூடுகளைக் கலைத்தழிக்கும் பயங்கரமான கொடிய விளையாட்டில் நிபுணனாக நான் மாறினேன்.



கக்ஸார் இயக்கத்தைச் சேர்ந்த என் நண்பர் சிலரால் நான் தூண்டப்பட்டேன். இவர்கள் உல்லஹம் இனயதுல்லா மஷ்ராகியைப் பின்பற்றுபவர்கள். இந்த மனிதன் முஸ்லிம் சகோதரத்துவத்தை ஸ்தாபித்தவர். இவர் மிகவும் புத்திசாலி. இவர் இஸ்லாத்துக்குக் கொடுக்கும் விளக்கம் என்னவெனில்: அது ஒரு மதமாக எடுத்துக் கொள்ளப்படுமுன் அது ஒரு இராணுவ அமைப்பு; அதில் ஒவ்வொரு முஸ்லிமும் ஒரு போர்வீரன்; ஒவ்வொரு மசூதியும் ஒரு கோட்டை, ஒவ்வொரு முஸ்லிம் குடியிருப்பும் ஒரு இராணுவக் குடியிருப்பாகும் முஸ்லிம்கள் அழைக்கப் படும்போது அவர் இதைப் போதித்தார். மசூதியின் மினார் களிலிருந்து அழைப்பதை நான் சொல்லுகிறேன் அது ஒரு பெயர் பதிவு வாசித்தல், அவர்கள் வரிசையாக நிற்கும் போது, எண்ணப் படுவார்கள், தொழுகையின்போது வழங் கப்படும் குட்பா பிரசங்கம் போர் நடவடிக்கை குறித்த ஒரு அறிவிப்பே யாகும். நேரான கோடு என்று அர்த்தமுள்ள 'ஸித்தஸஃப்' என்னும் பெயருள்ள மிக நேர்த்தியான ஒரு புத்தகத்தை அவர் உருவாக்கினார் நான் அதை வாசித்திருக்கிறேன். தன்னுடைய இயக்கத்தையும் காரணங்களையும் நியாயப்படுத்தவே அப்புத்தகத்தை அவர் எழுதினார். அநேக இளம் முஸ்லிம்களை அவர் கவர்ந்து கொண்டார்.

காஷ்மீர் எல்லையில் நான் இருந்தபோது எனக்கு அடுத்து இரண்டாவதாகப் பொறுப்பிலிருந்த பஷீர் முஜனிட் என்பவர் இருந்தார். எனக்கு உதவி செய்தவர்களில்

இவரும் ஒருவர். இவர் மிகவும் மனக்குழப்பமுடைய வராயிருந்தார். அவர் எப்போதும் இளைப்பாறுதலற்ற வராயிருந்தார். அடிக்கடி இரவில் தூங்காமல் இருப்பார். கடைசியில் நான் அவரைப் பார்த்து,'பஷீர் உனக்கு என்ன சம்பவித்தது? எப்போதும் பரிதாபமாகவே இருக்கிறாயே' என்றேன். அவர், ஐயா, நான் யாரையாவது கொன்று விட்டு பின்பு சாக விரும்புகிறேன், எனக்கு வேறு குறிக் கோள் எதுவுமில்லை, ஏனெனில் வாழ்க்கையின் கொடுமையினை நான் கண்டுவிட்டேன், நான் சூறையாடப் பட்டுவிட்டேன். எனது உறவுக்காரப் பெண்ணை நான் நேசித்தேன். டெல்லியில் நிலைமை மோசமானபோது, வேறொரு உறவுக்காரனும் எனது நண்பனுமான ஒருவன் நான் பிரிமாய் நேசித்த நசீமின் குடும்பத்தாருக்குத் தங்க இடங்கொடுத்தான். நசீம் இருந்த இடத்தில் இந்துக்கள் அதிகம் இருந்ததால் அங்கு தங்களுக்குப் பாதுகாப்பில்லை என்று அவர்கள் நினைத்திருந்தனர். அவன் இக்குடும்பத்தைத் தன் வீட்டுக்குக் கொண்டு சென்றான். நாளடைவில் அவன் நசீமை நெருங்க ஆரம்பித்தான். போக்கிடமில்லாத அவள், கடைசியில் அவனுக்குப் பணிந்து போய் கடைசியில் கர்ப்பமுமானாள். பின்பு அவள் தற்கொலை செய்து கொண்டாள். இதைத் தாங்கமுடியாமல்தான் நான் இப்படியானேன். இப்போது எனக்கு யாரையாவது கொன்றுவிட்டு செத்துப் போக வேண்டும் என்றார். நான் பஷீரை நேசித்தேன். அவருக்கா கவும் அவருடைய கலைந்த கூட்டுக்காகவும் துக்கப்



பட்டேன். ஒருநாள் கழித்து அவர் யுத்த முன்னரங்கத்தில் கொல்லப்பட்டார், அது எனக்கு மிக வருத்தமாயிருந்தது.

இன்னொரு துக்ககரமான நிகழ்வும் ஞாபகத்திற்கு வருகிறது. 1947 செப்டம்பர் மாத நடுவில் நான் காஷ்மீர் எல்லையிலிருந்தபோது நிகழ்ந்தது. தாக்கும் படையணி களிலிருந்த எனது கீழ்நிலை வீரர்களை அழைத்தேன். ஒரு சீக்கிய முன்னாள் படைவீரரான ஷேர்சிங் குறித்து எனக்குச் சொல்லப்பட்டது. அவர் பிரிட்டிஷ் படையில் கேப்டனாக இருந்தவரென எண்ணினார்கள். அவர் காஷ்மீர் எல்லை வழியாக இந்தியாவிற்குள் வந்துவிட முயற்சித்துக் கொண்டிருந்தார். எல்லையினருகில் வந்தபோது அங்கு பெண்களை பலவந்தம் செய்யக்கூடிய முஸ்லிம் தீவிர வாதிகளை எதிர்கொள்ள நேரிடும் என எண்ணினார். இந்த சீக்கிய மனிதனான முன்னாள் கேப்டனுடன் அவருடைய தாயாரும், இளம் மனைவியும், பதினான்கு வயதேயான மகளும் இருந்தனர். ஆட்கள் தன்னைச் சுற்றி வளைத்து அவர்களைத் தன்னிடமிருந்து பிடித்துக் கொண்டுபோய் விடுவார்கள் என்று நிச்சயமாய் எண்ணினார். தான் வைத்திருந்த இராணுவத் துப்பாக்கியால் முதலில் தாயாரையும், பின்பு மனைவியையும், பிறகு மகளையும் சுட்டுக்கொன்றார். அவர்களது உயிரற்ற உடல்களருகில் உட்கார்ந்து கொண்டு யாரிடமும் பேசாது இருந்தார். இந்தச் சூழ்நிலையை மாற்றும்படி எனது இளைய வீரர்கள் என்னை வேண்டினர். நான் அங்கு போனதுபோது இருட்ட ஆரம்பித்துவிட்டது. நான் அவரிடம், 'சர்தார் சாஹிப்,

யாருடனாவது பேச விரும்புகிறீர்களா?’ என்றேன். ‘நீங்கள் நல்ல எண்ணத்துடன் வந்தால் பேசுவேன்’ என்றார். நான், ‘உங்களுக்கு நண்பன் நான், நடுநிலையாளர் எவரையும் நான் ஒருபோதும் தாக்கியதில்லை’ என்றேன். அவர், நல்லது வாருங்கள்’ என்றார். நான் அருகே சென்றேன், மூன்று சடலங்கள் அங்கே கிடந்தன. ‘சர்தார், நீங்கள் என்ன செய்கிறீர்கள் இங்கே?’ என்றேன். ‘நான் இங்கு யாருக்கும் தீங்கிழைக்க வரவில்லை. ஆனால் இங்குள்ள முஸ்லிம்கள் சடலங்களைக் கூட அவமானப் படுத்து வார்கள் என்று தெரியும். ஆகவே இவர்கள் உடல்கள் அழுகும் வரை காவலிருந்து பிறகு என்னையே சுட்டுக் கொண்டுவிடுவேன், அத்தோடு எல்லாம் முடிந்து விடும்’. என் மகளை இந்த முஸ்லிம்கள் அவமானப்படுத்துவதை என்னால் காணமுடியாது என்றார். அது ஒரு கொடூரமான கதையாயிருந்தது. நான் அவரிடம், ‘சர்தார், நீங்கள் அவர்களைக் கொன்றிருக்க வேண்டியதில்லை. நான் ஒருபோதும் உங்களைத் தாக்கியிருக்க மாட்டேன். நீங்கள் நடுநிலையாளர், நீங்கள் பத்திரமாக இந்திய நிலப்பகுதிக்கு வர உங்களுக்கு உதவி செய்திருப்போம் என்றேன்’. அவர், நீங்கள் இங்கே இல்லை, இங்குச் சுற்றியுள்ள கிராமத்தார் நான் சொன்னதுபோல செய்வதைக் கண்டிருக்கிறேன் என்றார். ‘அப்படியானால் இப்போது உங்களுக்கு என்ன வேண்டும்?’ என்றேன்.

‘எனக்கு ஒன்றும் வேண்டாம், நீங்கள் போங்கள்,



ஆனால் தயவுசெய்து நான் இங்கேயே இருக்க அனுமதி யுங்கள்’ என்றார். அவருடைய முகத்தில் காணப்பட்ட, அவருடைய சத்தத்தில் தொனித்த வேதனையையும் துக்கத்தையும் நான் உணர்ந்தேன். அந்த மனிதன் ஏற்கனவே செத்தவர்போல ஆகிவிட்டதாக எண்ணினேன். அவரிடத்தில் விடைபெற்றுக் கொண்ட பின்பு, எனது இளைய வீரர்களில் யாராவது அவருடைய துக்கத்திற்கும் வேதனைகளுக்கும் முடிவுகட்டுமாறு கேட்டுக்கொண்டேன். அப்படியே இளையவீரர் ஒருவர் அவரைச் சுட்டார்; அவர், ‘நன்றி ஐயா, நீங்கள் நல்ல ஆட்கள்’ என்று சொன்னதைக் கேட்டேன். அது ஒரு இன்பமான நிகழ்வல்ல, என்னால் அவருக்குக் கொடுக்க முடிந்தது அவ்வளவுதான்.

ஒரு முஸ்லிமாக, இந்துக்களுக்கு அழிவை உண்டு பண்ணுவதன் மூலம் இறைவனைப் பிரியப்படுத்துவதாகவே நம்பினேன். பின்பு ஒரு இரவில் நானும் எனது இளைய வீரர்களும் மீண்டும் ஆட்கள் உயிரோடு கொளுத் தப்படுவதையும், தப்பியோட முற்படுபவர்கள் சுடப்படுவதை யும் பார்த்துக் கொண்டிருந்தோம். திடீரென்று ஒரு வயது முதிர்ந்த பெண்மணி என் எதிரே வந்தார். ஒரு வீட்டிற்குள் ளிருந்து அப்போதுதான் வெளியே ஓடிவந்த அவர் கையில் ஒரு குழந்தை இருந்தது. என்னைப் பார்த்ததும் அக் குழந்தையை என் காலடியில் வீசி, இதைக் கொன்று போடுங்கள், முதலில் இக்குழந்தையை சொல்லுங்கள், ஏனென்றால் இது ஒரு இந்துவின் குழந்தை ஆட்களைக் கொல்வது உங்கள் கடவுளுக்குப் பிடிக்கும், இதை முதலில் கொல்லுங்கள் என்று சொல்லி அழ ஆரம்

பித்தார். அது மிக அழகான ஒரு குழந்தை. நான் அநேகம் குழந்தைகளின் மரணத்திற்குப் பொறுப் –பாயிருந்திருக்கிறேன், ஆனால் இந்தக் குழந்தை என் காலடியில் வீசப் பட்டபோது என்னால் நகர முடியவில்லை. நான் கேட்டேன்; 'தாயே ஏன் நான் இந்தக் குழந்தையை முதலில் கொல்ல வேண்டும்?' அந்தத் தாய்: ஏனென்றால் மக்களைக் கொல்வது உங்கள் கடவுளுக்குப் பிடிக்கும், இதைக் கொல்லுங்கள் என்றார். ஆனால் என்னால் முடியவில்லை. அந்தத் தாய் தொடர்ந்து சொன்னார். என் பையனே, இறைவனுடைய மிக உயர்ந்த சிருஷ்டியை நீ அழிக்கும்போது அவர் அதில் பிரியப்படுகிறார் என்று எண்ணுகிறாயா? நாம் யாவரும் அவருடைய அழகான படைப்புகள். நீங்களோ அவற்றை அழிக்கிறவர்களாய் இருக்கிறீர்கள். உங்கள் கடவுள் அதில் எப்படிப் பிரியப்பட முடியும்? நான் அமைதியாயிருந்தேன். அவரோ தொடர்ந்து கூறினார். பிள்ளைகள் ஈரமான களிமண்ணில் விளையாடும்போது, களிமண் பொம்மைகளைச் செய்கின்றனர். சில நேரங்களில் அவர்கள் வீடுகளையும் திருமண விருந்துபசாரங் களையும் கூட வடிவமைக்கிறார்கள். அவர்கள் களிமண் பொம்மைகள், பசுக்கள், எருமைகள், யானைகள் ஆகியவற்றை உருவாக்குவதை நீங்கள் பார்த்திருக்கவேண்டும். அப்பொம்மைகளை நீங்கள் உடைத்தால் அதில் பிள்ளைகள் பிரியப்படுவார்களா?' அதற்கு நான் 'இல்லை, அவர்கள் மெய்யாகவே



மனமுடைந்து போவார்கள் தாயே' என்றேன். அப்பொழுது அவர்: 'தன் படைப்புகள் அழிக்கப்படுவதைக் காணும் போது ஒரு பிள்ளையின் மனம் புண்படுமென்றால், நீங்கள் செய்வதைக் கண்டு கடவுள் பிரியப்படுவார் என்று எப்படி நீங்கள் எண்ணுகிறீர்கள்? அது என்னை ஸ்தம்பிக்க வைத்தது; நான் அழுதேன். நான் அவரைப் பார்த்து: தாயே என்னை மன்னியுங்கள். இனிமேல் என் கையினால் நான் வேறொரு மனிதனைக் கொல்வதில்லை. இப்படியெல்லாம் செய்ய எங்கள் முஸ்லிம் தலைவர்களே எங்களை ஏவினார்கள் என்றேன். அதற்கு அவர், "உன்னிடத்தில் உதவி கேட்குமளவுக்கு கடவுள் அவ்வளவு பலவீனமாக இருக்கிறார் என்று நினைக்கிறாயா? என் அன்பான பையனே, நீ தவறாய் நடத்தப்பட்டுள்ளாய், நீ மனந்திரும்ப வேண்டும்" என்றார்.

இது விஷயத்தைப் பற்றிப் பிடித்து என்னைச் சுய உணர்வுக்குக் கொண்டுவந்தது. என்னுடைய வாழ்வில் தேவன் இப்படி இடைப்பட்டது இது முதல் முறையல்ல. தம் பிள்ளைகள் பலர் மூலமாக தேவன் என்னைத் தொட்டிருக் கிறார். ஜப்பானிய விமானத் தாக்குதலின்போது எங்களுக் காக பாக்ஸ்டர அவர்கள் ஜெபித்தார். ஒரு விமானத்தை சோதனை ஓட்டம் நடத்தியபோது நான் காயப்பட்டு வலது கண்ணை இழந்தபோது இரண்டு கிறிஸ்தவ செவிலியர்கள் என்னை அன்புடனும் மிகுந்த கரிசனையுடனும் கவனித் துக்கொண்டனர். பிலிப்பு

என்பவரும் கூட இயேசுவின் மீது தான் கொண்டிருந்த அன்பினால் ஆச்சரியமான முறையில் உள்ளூர் பழக்க வழக்கங்களிலிருந்து சுயாதீனமாகச் செயல்பட்டார். காஷ்மீர் ஜிஹாத்தில் மறக்க முடியாத இன்னொரு இரவில் நாங்கள் கொலை செய்யப்போன ஒரு சிறிய கிறிஸ்தவப்பெண் 'எங்களைப் பாதுகாக்கும்படி கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இங்கே இருக்கிறார்' என்றாள். அவளும் அவளுடைய பெற்றோரும் எங்கள் தயவில் இருந்தனர். அவர்களை நாங்கள் அழிக்க முடிவு செய்த நேரம், அந்தப் பெண் இயேசுவை நோக்கி ஜெபிக்க அனுமதித்தேன். திடீரென்று ஒரு அசாதாரணமான நெருப்பு அவர்களைச் சுற்றிலும் அரணாக அமைந்தது. நான் மிகவும் பயந்து தளர்ந்துபோனேன். ஜீவனுள்ள தேவனுடைய எவ்வளவு பெரிய சான்று அது! நான் இதனால் மிகவும் பாதுகாப்பற்றவனாக மாறினேன், கடைசியில் அந்த சிறிய வயதான இந்து பெண்மணியின் வார்த்தைகள் என்னை ஊடுருவி உடைத்தன. விடுதலை யுத்தத்தில் என் பங்கேற்பு இத்துடன் முடிவுக்கு வந்தது. அலலாஹ் ஜிஹாதை (புனிதப் போரை) விரும்புகிறார் என்ற எனது குருட்டாட்டமான நம்பிக்கை என்றைக்குமாக என்னை விட்டகன்றது.

நான் விடுதலைப் போராட்டக்காரர்களை விட்டு நீங்கினேன். சர்வ வல்ல தேவனை நோக்கி ஜெபித்து அவர் என்னைச் சரியான பாதையில் நிறுத்த வேண்டும் என்று கேட்கவேண்டுமென்ற எண்ணம் மட்டுமே என்னில் இருந்தது. மறுபடியும் நான் தனிமையிலானேன்.



ஏனெனில், நான் வீட்டை விட்டு வந்துவிட்டேன். நான் நிர்பந்தமான நிலையிலும், அந்தகாரத்திலும், மரணம் மற்றும் நரகம் குறித்த பயத்திலுமிருந்து தேடிக் கொண்டும் ஜெபித்துக்கொண்டுமிருந்தேன். தேவன் என்னருகே வந்து சரியான பாதையில் வைக்குமாறு ஜெபித்தேன். அப்பொழுது அவர் எனக்குப் பதிலளித்தார். அவர் என்னிடம் 'என் கிருபை உனக்குப் போதும், என் கிருபை உனக்குப் போதும்' என்று சொன்னதைக் கேட்டேன். இந்த வார்த்தைகள் என் காதுகளில் ரீங்கார மிட்டன. நான் செய்த எல்லாக் கொடுமைகளையும் அவர் மன்னித்தார். நான் ஒரு புதிய மனிதனானேன். இது நிகழ்ந்தது. 1949ம் ஆண்டு மே 5ம் தேதி நான் பாடினேன், களிகூர்ந்தேன், கர்த்தரைத் துதித்தேன். அது முதல் அவர் என்னை நடத்தினார்.

ஆனால் என் குடும்பத்திற்கு இது ஒரு சங்கடமான, அவமரியாதையான சூழ்நிலையாயிருந்தது அவர்கள் நிலப் பிரபுக்களாய் செல்வாக்குள்ளவர்களாய் இருந்த படியால், இப்போது அவர்கள் புகழுக்கு ஒரு களங்கம் உண்டாகும் நிலை. அவர்களுடைய பார்வையில் இஸ்லாம் ஒரு உயர்ந்த, மேன்மையான மார்க்கமாகும். என்னைப் பொறுத்தவரை என் குடும்பத்தார் யாவரையும் மிகவும் நேசித்தேன், அவர்களுக்கு மிகவும் கடமைப்பட்டிருந்தேன். என் தகப்பனார் உயர்ந்த கொள்கைகளுள்ள மனிதர். உட்புறம் அவர் ஒரு துறவி, வெளிப்படையாக அவர் பொதுநல நோக்குடைய உண்மையான மனிதர்.

அவர் எப்பொழுதும் கனிவானவராக, கருணை யுள்ளவராக, சாந்தமுள்ளவராக இருந்தார். என்னுடைய எதிர்கால சேவை வாழ்க்கையில் எனது குறிக்கோள்களை ஆழமாய்ப் பதியச் செய்தவர். இந்தச் சமயத்திலோ என் சொந்த சகோதரர்கள் என்னை கடுமையாக உபத்திர விக்கக் கூடுமென்ற ஒரு இதயத்தை உடைக்கும் முரண் பாடான நிலையில் நான் இருந்தேன். எனக்கு அநேக இடங்களில் – சியால்கோட், லாஹூர், ஃபைசலாபாத், இன்னும் வேறு இடங்களில் உறவினர்கள் பலர் இருந்தனர். அவர்கள் யாவரும் செல்வாக்கு மிக்கவர்கள். நான் சில நேரங்களில் கொலைத் தொழில் செய்பவர் களால் விரட்டப்பட்டேன். கடைசியாக நான் என் தாயாரிடம் கொண்டுபோகப்பட்டேன். என்னைத் திரும்பக் கொண்டு வருவதற்கான கடைசி ஆயுதம் அதுதான் என்று நினைக் கிறேன். அவர் என்னிடம் அன்புள்ள குழந்தாய், உன் சகோதரர்கள் எல்லாருக்கும் திருமணமாகிவிட்டது, அவர் களுக்குச் சொந்தமான குடும்பங்கள் உண்டு என்பது உனக்குத் தெரியும். என்னைப் பார்த்துக் கொள்ளவும், தனிமையாயிருக்கும் எனக்குத் துணையாயிருக்கவும் நீ ஒருவன்தான் எனக்கு உண்டு. உன் தகப்பனார் மரித்த போது நீ பர்மா போர்க்களத்தில் இருந்தாய், என் துக்கத் தைப் பகிர்ந்துகொள்ள உன்னால் வர முடியவில்லை. தயவு செய்து இந்த வீட்டை விட்டுப் போகவேண்டாம். நான் உன்னுடன் இருந்து, உனக்கு ஆதரவு தந்து, உனக்கு உதவுவேன், வீட்டைவிட்டுப் போகவேண்டாம்' என்று சொல்லிக்



கெஞ்சினார். அவர்கள் கெஞ்சுதல் என்னை ஆழமாகக் கிளர்ச்சி அடையச் செய்தது. ஆனாலும் நான் அவர்களிடம் : அம்மா, நான் உங்களை நேசிக்கிறேன், கனம் பண்ணுகிறேன், ஆனால் இந்த வீட்டில் தங்கி இருப்பது எனக்கு கூடாதகாரியம், என்னுடைய விசுவாசத்தை என்னால் விட்டுவிடமுடியாது. தயவு செய்து இந்தக் கீழ்ப்படியாமையை மன்னியுங்கள். கர்த்தர், அவருக்காகவும் அவருடைய மக்களுக்காகவும் நான் நிறைய செய்ய வேண்டும் என்று வைத்திருக்கிறார் என்று நிச்சயித்திருக்கிறேன் என்று சொல்லி, மிகுந்த துக்கத்தோடு, வருத்தத்தோடு அவருக்கு நான் மறுக்க வேண்டியதாயிற்று.

என் சகோதரர்கள் பகைமை பாராட்டக் காரண மாயிருக்கக்கூடிய இன்னொன்றையும் அகற்றும்படி நான் தீர்மானித்தேன். என் தகப்பனாருடைய சொத்தில் நான் எனக்குள்ள உரிமையை விட்டுவிடுவதாகக் கையொப்ப மிட்டுக் கொடுத்தேன். என் தாயார் மரித்தால் அந்தச் சொத்துக்கு நான் சட்டபூர்வ சொந்தக்காரனாவேன். ஆனால் கர்த்தர் தாமே என் சுதந்திரம், என் அடைக்கலம் என்னுடைய எல்லாம் என்று எனக்குக் காண்பித்தார். ஆகவே என்னுடைய குடும்பத்தோடுள்ள இந்தக் கடைசி இணைப்பையும் நான் துண்டித்து விட்டேன். என்னுடைய குடும்பத்தாரின் இந்த தொந்தரவினிமித்தம், என்னுடைய கிறிஸ்தவ நண்பர்களில் ஒருவரும், பிற்காலத்தில் கராச்சி பிஷப்பாக நியமனம் பெற்ற சந்துரே அவர்களின் ஆலோசனையை ஏற்றுக்கொண்டேன். தெற்கே சிந்து

மாகாணத்தில் ஹிந்து பழங்குடி மக்கள் நடுவே சேவை செய்ய வரவேண்டும் என்ற அவரது அழைப்பை நான் ஏற்றுக்கொண்டேன்.

என்னுடைய முற்பிதாக்களின் கூட்டை நான் இப்படித்தான் இழந்தேன். அதன்பிறகு நான் ஒரு புதிய கூட்டை ஒரு வித்தியாசமான பண்பாடு மற்றும் மொழி நிலவும் மக்களிடையே கட்ட ஆரம்பிக்க வேண்டிய தாயிற்று . காஷ்மீரத்துத் தூய்மையான காற்றை, தங்கள் நிலப்பிரபுக்களை முழுவதுமாக நம்பி வாழ்ந்த ஏழை சிந்தி குஜராத்திகள் நடுவே வாழ்வதற்காக மாற்றிக்கொள்ள வேண்டியதாயிற்று. வாழ்க்கை கடினமாக இருந்தாலும், என்னுடைய இருதயம் லேசாக இருந்தது. எனது ஆண்டவர் எனக்கு மிகவும் மெய்யானவராக இருந்தார். என்னுடைய சிருஷ்டிகரால் நான் நேசிக்கப்படுவது எப்படி இருந்தது என்றும், அதற்குப் பதிலாக அவர் பட்சமாக எனக்குள் பொங்கியெழும் அன்பைக் கண்டுபிடிப்பதையும் நான் அறிந்திருந்தேன். என் ஆண்டவருக்காக வாழவும் சாட்சி கொடுக்கவும் என்னை முழுவதுமாக ஒப்புக் கொடுத்தேன். தேவன் இந்த உலகத்தை தமக்காக வெற்றி கொண்டு, மனிதகுலத்தைத் தம்பால் இழுத்துக் கொள்ளும் படி, தம்மையும் தமது கரிசனையையும் இயேசு மூலமாகவே காண்பிக்க வேண்டியதாயிருந்தது என்று நான் நிச்சயித்துக் கொண்டேன். தேவ அன்பின் முழு வெளிப்பாடாகிய இயேசு கிறிஸ்து நம்மைப்போல் மாற வேண்டியதாயிற்று. அவர் முழு தாழ்மையின் உருவத்



தையும் ஏற்று, உறைவிடமும் வீடுமற்றவரானார். அவர் தமக்குச் சொந்தமாக ஏதுமற்றவராக இருந்தார். நானும் அதுபோலவே இருக்க வேண்டியதாயிற்று. ஒன்றுமில்லாது வாழும் மக்களோடு நானும் வாழ வேண்டியதாயிற்று. ஆரம்பத்திலிருந்தே எனது வாழ்க்கை மற்றும் ஊழியத்தின் அடிப்படை இதுவாகவே இருந்தது. நான் படிப்பறியாத ஏழைகள் நடுவே வாழ்ந்தேன். அவர்கள் சிக்கியிருந்த இழப்புகள் மற்றும் குறைவுகளின் சுழற்சியை மேலதிகமாக நான் சிக்கிரமே காண நேரிட்டது.

## அத்தியாயம் 3

## கூடுகட்டுதலும் கல்வி புகட்டலும்

நான் திரும்பிப் பார்க்கையில் ஒழுங்கு முறைப் பயிற்சியையும் கல்வியையும் எனது பெற்றோர் வலியுறுத் தியதால் என் வாழ்வில் அது எவ்வளவு ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை நான் உணர்கிறேன். ஆரம்பத்திலிருந்து, 1950-ல் இந்த படிப்பறிவற்ற பழங்குடி மக்கள் தங்கள் நிலப்பிரபுக்களின் அநீதியிலிருநதும் ஒடுக்குதலிலிருந்தும் தப்ப வழியின்றி அல்லல்படுவதை, அவர்களுடைய நம்பிக்கையற்ற நிலையினை நான் கண்டிருக்கிறேன். அவர்கள் நடுவில் சிலகாலம் குடியிருந்தபின்பு, கர்த்தர் எப்படி வழி திறந்தார் என்றும், இந்த மக்கள் செவிகொடுத்து ஒத்துழைப்பு கொடுத்ததையும் கண்டேன். அவர்கள் குடும்பப் பிரச்சனை

களில் ஈடுபாடு கொண்டு, அவர்களின் நிலப்பிரபுக்களுக்கு எதிராக அவர்களோடு சேர்ந்து நின்றேன். இதன் பின்பு அவர்களுடைய பிள்ளைகள் படிக்கவும் எழுதவும் ஆரம் பித்தனர். அதன் பிறகு எல்லாருடைய நம்பிக்கையும் வளர்ந்தது. இது ஒரு முன்னோடி திட்டம் போல இருந்தது, பிற்பாடு மிர்புர்காசில் என்னுடைய ‘சிறுவர் இல்லத்தை’ ஆரம்பிக்க இது ஒரு காரணமாய் அமைந்தது. எங்கள் இல்லத்தில் பல கிராமங்களைச் சேர்ந்த சிறுவர்களும் எந்த வசதியுமற்ற குடும்பங்களை சார்ந்த சிறுவர்களும் இருந்தனர். இந்த சிறுவர்களும், இளைஞர்களும் கல்வி கற்பதைக் கண்டு, முதலில் பள்ளிக்குச் செல்வதையும், பிறகு கல்லூரிக்குச் செல்வதையும் கண்டு மகிழ்ந்தேன்.

பாகிஸ்தானிலுள்ள கிறிஸ்தவர்கள் கல்வி புகட்டப் படவேண்டும், பின்பு தங்கள் வாழ்க்கையைக் கட்டியெழுப் பிக்கொள்ள வாய்ப்புகள் தரப்பட வேண்டும் என்பதை டெய்சியும் நானும் முழுவதுமாக உணர்ந்தே இருந்தோம். மனித ரீதியாகச் சொல்வதானால் பாகிஸ்தானின் கிறிஸ்த வர்கள் பிழைக்க கல்வியறிவே மூலகாரணமாகும். ஒரு கிறிஸ்தவனாக இருக்கும் நீங்கள் உங்கள் முஸ்லிம் நண்பர்களை விட இரண்டுபடி முன்னே இருக்க வேண்டும். இதுவே எங்களின் தரிசனமும் நிச்சயமுமாக இருந்து வருகிறது.

இது மிக ஆரம்பத்திலேயே பரீட்சிக்கப்படலாயிற்று. டெய்சியும் நானும் திருமணம் செய்துகொண்ட புதிதில், நாங்கள் குஜ்ரன்வாலா இறையியல் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தபோது மேய்ப்பர் ஊழியத்துககான ஒரு



பணியினை எங்களுக்குக் கொடுத்தனர். மற்ற எல்லா மாணவர்களும் எங்கள் பேராசிரியரிடம் ஓடிச் சென்று நல்ல நிலையிலுள்ள கிராமங்களில் ஆதரவு அதிகம் தரக் கூடிய சபைகளில் தங்களுக்குப் பணியினைக் கேட்டு வாங்கிக் கொண்டனர். அங்கு அவர்கள் ஞாயிறு ஆராதனையில் போதகருக்கு உதவி செய்தால் போதும். பேராசிரியரின் அலுவலகத்துக்குப் பிந்தி வந்த நான், எனக்கு ஏதாவது இடம் மிஞ்சியிருக்கிறதா என்று கேட்டேன். அதற்கு அவர், இருக்கிறது, ஆனால் அதை நீங்கள் விரும்புவீர்கள் என்று நான் நினைக்க வில்லை என்றார். அது என்ன என்று சொல்ல முடியுமா? என்றேன். யாருமே இதுவரை எடுத்துக் கொள்ளாத ஒரு பணியிடம் இருக்கிறது, குஜெராஸ் என்னும் மக்கள் நடுவில் ஊழியம் செய்வது தான் அது, அம்மக்களுக்கு மதம் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. அவர்களுக்குச் சில நம்பிக்கைகள் உண்டு, ஆனால் அவை கலப்படமானவை, அவர்கள் ஹிந்துக்களும் அல்ல முஸ்லிம்களும் அல்ல. அவர்கள் இயற்கையை வழிபடுகிறார்கள், ஆனால் மிக மூட நம்பிக்கையுடையவர்கள். அவர்களுடைய ஆண்கள் குப்பை மேடுகளில் கந்தைகளைப் பொறுக்கிறார்கள், பெண்களோ நகரங்களில் பிச்சையெடுக்கிறார்கள். அவர்கள் பெரிய பட்டணங்களுக்கு வெளியே தங்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட தனி இடத்தில் குடியிருக்கிறார்கள். ஏனெனில் அவர்கள் செத்த கோழிகளையும், வீசியெறியப் படும் எல்லா உணவுப் பொருட்களையும் சாப்பிடுகிறார்கள்

என்று அவர் கூறினார். எனவே இதுதான் நான் ஊழியம் செய்ய மிஞ்சியிருக்கும் மக்கள் சமூகம், நான் சந்தோஷமாய் அதைச் செய்கிறேன் என்றேன். என் பேராசிரியர் மிகவும் ஆச்சரியப்பட்டு நீங்கள் செய்வீர்களா? என்றார். ஏன் முடியாது? தேவகுமாரன் தமது பிதாவின் சமூகத்தைவிட்டு என்னுடைய இடத்துக்கு வரமுடியும் என்றால், நான் ஏன் இந்த மக்களிடம் போக முடியாது? என்றேன். நான் வீட்டிற்குச் சென்று இந்த அறைகூவலை டெய்சியுடன் பகிர்ந்துகொண்டேன். அவரும் நாம் இதைச் செய்வோம் என்றார்.

ஆகவே முதலில் அம்மக்கள் சமூகத்திடம் நான் தனியாகச் சென்றேன். நான் உள்ளே சென்றபோது அவர்கள் என்னை வரவேற்றாலும் சந்தேகத்துடன் என்னைப் பார்த்தனர், ஏனென்றால் இதற்கு முன் ஒருவரும் அப்படி அவர்களைச் சந்திக்கச் சென்றதில்லை. ஒரு சிலர் அவர்களுடைய அழகான பெண்களையும் அவர்களுடைய மணமான பெண்களையும் தேடிவருவதுண்டு. நானோ அவர்களுடைய தலைவர்களைச் சந்தித்து விளக்கினேன். நான் தேவனுடைய வசனத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். முதலில் உங்களுக்கு எப்படிப் படிப்பது மற்றும் எழுதுவது என்று கற்றுத் தரப்போகிறேன். அது சரியாக அமைந்தால் உங்கள் பிள்ளைகளுக்கு ஏதாவது செய்ய ஆரம்பிக்கலாம் என்று நினைக்கிறேன் என்றேன். அவர்கள் அரைமனதோடு சம்மதித்தனர். ஆனால் அவர்களோடு நீண்டகாலம் நான் தங்குவேன் என்று அவர்கள்



ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை. ஆகவே கல்வி புகட்டும் என் திட்டத்தை ஆரம்பித்தேன். என் வகுப்புகளை ஜெயத்தோடு ஆரம்பித்தேன். அதை அவர்கள் ஆட்சேபிக்கவில்லை. நல்லது, கடவுள் நம்முடன் இருந்தால் மட்டுமே நாம் வெற்றிபெறமுடியும் என்றனர். ஆகவே அது ஒரு நல்ல ஆரம்பமாக அமைந்தது.

மிகவும் வெப்பமாக இருந்தது, அவர்கள் எனக்குக் குடிக்கத் தண்ணீரோ, சாப்பிட எதுவுமே தரத் தயங்கினார்கள், ஏனெனில் அப்படிச் செய்ய அவர்களால் கூடாது என்று அவர்களுக்குத் தெரியும். அந்த மக்களுடன் தொடர்ந்து இருப்பது மிகவும் கடினமான காரியமாய் இருந்தது. ஏனெனில், அந்த இடம் மிகவும் துர்நாற்றம் உள்ளதாயும் வெறுப்பூட்டுவதாகவும் இருந்தது. சில நேரங்களில் மூச்சு விடுவதும் கூட சிரமமாயிருந்தது, ஏனெனில் வீடுகளைச் சுற்றிலும் செத்த கோழிகளின் சிறகுகள் சிதறிக் கிடந்தன. அவர்கள் அழுக்கான கந்தைகளைப் பொறுக்கினபடியால், தங்களை நன்றாகக் கழுவிக் கொள்ளும் வரை அவர்களும் துற்நாற்றமுடையவர்களாகவே இருந்தனர். அடுத்ததாக அவர்களுடைய ஆவிக்குரிய தலைவர்கள் முறையிட ஆரம்பித்து இந்தக் கிறிஸ்தவர்கள் நல்ல குணமுடையவர்களல்ல அதனால் நம்முடைய பெண்களும், பெண்பிள்ளைகளும் ஆபத்திலிருக்கின்றனர் என்று கூறினார்கள். ஆனால் அவர்கள் என்னை நுட்பமாகக் கண்காணித்த பின்பு எனக்கு அப்படிப்பட்ட நோக்கமில்லை என்பதை அறிந்தனர்.

பின்பு அங்கு டெய்சியையும் கூட்டிக் கொண்டு போகவேண்டிய சமயம் வந்துவிட்டது என உணர்ந்தேன். அவர் மிக உதவியாயிருந்தார். அவர் ஒரு செவிலியரான தால் அவர்களுடைய நோயுற்ற குழந்தைகளைக் கவனிக்கக் கூடியதாக இருந்தது. கர்ப்பமுற்ற தாய்மார்க ளுக்கு சத்துள்ள உணவு சாப்பிடுவது, சுத்தமாக, சுகாதார மாக இருப்பது குறித்துப் போதித்தார். இது அவர்களை நன்றியுள்ள மக்களாக்கியது. பின்பு நான் வைத்திருந்த வசனங்களைக் கொண்டு அவர்கள் படிக்கவும எழுதவும் தொடங்கினர். நான் பெரிய எழுத்துக்களுள்ள சுவிசேஷங் களை அவர்கள் முன் வைத்தேன், அவற்றை அவர்கள் ஆவலுடன் படிக்க ஆரம்பித்தனர். முதன் முதலாக அவர் களுடைய தலைவர்களில் ஒருவரான மன்னா அவர் களுடைய கிராமத்திலேயே திருமுழுக்கு பெற்றார். பின்பு பள்ளிப் பருவமுள்ள அவர்களுடைய குழந்தைகளை, முக்கியாகச் சிறுவர்களை எனது வேதாகமக் கல்லூரி ஆரம்பப் பள்ளிக்குக் கொண்டுவந்தேன். கல்வி புகட்டல் குழு அவர்களுக்கான கல்விக் கட்டணங்களை தள்ளுபடி செய்தது, டெய்சி அவர்களுக்குச் சில சீருடைகளைத் தயாரித்தார். முதலில் எங்கள் சிறிய வீட்டுக்கு வந்து முகம் கழுவிக்கொண்டு, சீருடைகளை அணிந்துகொண்டு பின்பு அவர்கள் பள்ளிக்குச் சென்றனர். பள்ளி முடிந்த பின்பும் எங்கள் வீட்டிற்கு வந்து, சீருடைகளைக் கழற்றி வைத்து விட்டு, தங்கள் வழக்கமான உடைகளை அணிந்து கொண்டு தங்கள் ஊருக்குச் சென்றனர். பிறகு ஐக்கிய பிரஸ் பிட்டீரியன் குழுவினர் இந்தச் சிறுவர்கள் தங்கள் வீடு



களிலிருந்து அவ்வளவு தூரம், முக்கியமாக வெப்பமான காலநிலையில் வெறுங்காலோடு நடந்து வருவது மிகக் கடினம் என்று ஒப்புக்கொண்டனர். ஆகவே கிராமத் திலேயே ஒரு துவக்கப்பள்ளியை ஆரம்பித்து அதற்கு இரண்டு ஆசிரியர்களையும், அவர்களுக்கான ஊதியத் தையும் தருவதாகத் தீர்மானித்தனர்.

இதன் பின்பு இந்த குஜெராக்கள் தேவனுடைய வசனத்தைப் படித்து, தங்களது தனிப்பட்ட, குடும்ப மற்றும் சமூக வாழ்க்கையில் தூய்மை நிலையைக் குறித்துப் புரிந்து கொண்டனர். அவர்களுடைய பெண்கள் பட்டணத் துக்குப் போவதை அவர்கள் நிறுத்தினர். வெளிவேஷத்தில் அவர்கள் பிச்சையெடுக்கச் சென்றதாகச் சொன்னாலும் உண்மையில் அவர்கள் விபச்சாரத்துக்குத்தான் சென்று வந்தனர். இப்போது அது மாறியது. தேவகிருபையினாலே நான் வேதாகமக் கல்லூரியில் பட்டம் பெறுவதற்கு முன் தினம் இந்தச் சமூகத்திலிருந்து எட்டுக் குடும்பங்கள் திருமுழுக்கு பெற்றனர். ஒவ்வொரு குடும்பத்திலும் ஐந்து முதல் ஏழு அங்கத்தினபர் வரை இருந்தனர். அது புதிதாகத் திருமுழுக்கு பெற்ற மக்களின் ஒரு பெரிய குழுவாக அமைந்தது, இப்போது அக்கிராமத்தில் ஜீவன் ஆரம்பிப் பதை நான் காண முடிந்தது. முன்பு படிப்பறியாமல் இருந்த இத மன்னா என்பவர் அவர்களுக்குப் போதகராக மாறி தேவ வசனத்தைக் கற்பித்தார். அவர் ஒரு அனுபவபூர்வ மான மரியாதைக்குரிய தலைவர். பத்து ஆண்டுகளுக்குப் பின்பு நான் தெற்கிலுள்ள சிந்து மாகாணத்தில ஊழியம்

செய்தபோது, ஒரு முறை இந்த வடக்குப்பகுதி கிராமத்துக்குச் சென்று என் பழைய நண்பர்களைச் சந்தித்தேன். அவர்கள் செழித்துப் பெருகி மகிழ்ச்சியோடிருந்தனர். முன்பு குப்பை மேடுகளில் கற்றைகளைச் சேகரித்துக் கொண்டிருந்த வாலிபர்கள் இப்போது நல்ல வேலைகளில் இருந்தனர். சிலர் வாகனங்களைப் பழுது நீக்குபவர்களாகவும் சிலர் மின்சார சாதனம் பணியாளர்களாகவும், இன்னும் பலவித பணிகளிலும் இருந்தனர். சிறப்பாக அந்தச் சமூகத்திலே தற்போது ஒழுக்கக்கேடு இல்லை என்று கண்டு மகிழ்ச்சி அடைந்தேன். அவர்கள் புதுப்பிக்கப்பட்ட, தேவனுடைய கிருபையினாலே இரட்சிக்கப்பட்ட தங்கள் இரட்சகரான தேவகுமாரன் இயேசு கிறிஸ்துவின் இயேசுகிறிஸ்துவின் மூலம் மீட்கப்பட்ட மக்களாயிருந்தனர்.

1973ல் மேல் சிந்து மாகாணத்திலுள்ள சுக்கூருக்கு நான் மாற்றப்பட்டேன். ஒரு விதத்தில் அது எனது பிள்ளைகளின் படிப்புக்காகச் செய்யப்பட்ட மாற்றம். ஏனெனில், சுக்கூரில் நல்ல பள்ளிகளும் கல்லூரிகளும் இருந்தன. பரிசுத்த இரட்சகர் பள்ளி எங்கள் ஆலயத்திற்கு அடுத்து இருந்தது. ஆனால் பூட்டோவின் ஆட்சி காலத்தில் அது அரசாங்கத்தால் எடுத்துக் கொள்ளப்பட்டது. வார விடுமுறையை ஞாயிற்றுக் கிழமையிலிருந்து வெள்ளிக் கிழமையாக மாற்றிய அவர் எல்லா தனியார் பள்ளிகளையும், கல்லூரிகளையும் நாட்டுடமையாக்கினார். எங்கள் பள்ளியில் ஒரு முஸ்லிம் தலைமை ஆசிரியரை அரசாங்கம் நியமித்தது. அவர் பள்ளியின் சுவர்களில்



குர்ஆன் வசனங்களைத் தொங்கவிட்டார். அடுத்து நாங்கள் குடியிருந்த வீட்டைத் தங்களுக்கு என்று அவர் கேட்டார். எந்த நியாயமுமின்றி நோட்டீசுகள் எனக்கு அனுப்பப்பட்டன. முழு குருசேகரத்தையும் ஒப்படைக்க வேண்டுமென்று அவற்றில் குறிப்பிட்டிருந்தது. அவர்களுடைய நோக்கம் என்னவெனில், ஞாயிற்றுக் கிழமைகளில் சபை ஆராதனைகளில் பிள்ளைகள் சத்தம் உண்டாக்குவதால் சபை அமைதியான இடத்தைத் தேடிப்போவார்கள் என்பது தான். பரிசுத்த இரட்சகர் ஆலயம் அந்தப் பட்டணத்தில் முதன்மையான இடத்தில் காட்சிப் பொருள் போல அமைந்திருந்தது. பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் அதிகாரிகள் பெருந்தன்மையுடன் மையமான இடங்களை சபைக்குக் கொடுத்தனர். இப்போது அரசாங்கம் செய்வது எங்களை மிக மன அழுத்தத்திற்கும் சங்கடத்துக்கும் உள்ளாக்கியது. சில நேரங்களில் என்னால் தூங்க முடியாத அளவுக்கு குழப்பமடைந்து கவலை நிறைந்தவனாயிருந்தேன். நான், ‘ஆண்டவரே எங்கள் பாதுகாப்புக்கு வரக்கூடியவர் நீர் ஒருவரே’ என்று சொல்லி ஜெபித்தேன்.

நான் அரசாங்கத்துக்குக் கடிதங்கள் எழுதினேன். தொடர்ந்து தந்திகளும் தொலைபேசிச் செய்தி களும் அனுப்பிக் கொண்டே இருந்தேன். ஒருநாள் அந்த மாவட்ட நீதிபதி பிரதம மந்திரியிடமிருந்து ஒரு தந்திச் செயதியைப் பெற்றார். ரெவரெண்ட் நாமானைத் தொந்தரவு செய்யவோ

அந்த சபைச் சொத்துக்களை கல்வித் துறைக்கு எடுக்க முயற்சிக்கவோ வேண்டாம். ஆகவே அந்தப் பிரச்சனை அத்துடன் முடிவுக்கு வந்தது. எங்களுக்குப் பல கஷ்டங்களைத் தந்த அந்த முஸ்லிம் தலைமை ஆசிரியர் கடைசியாக நிறுத்திக கொண்டார்.

பரிசுத்த இரட்சகர் கல்விக் கூடத்தைப் பற்றிய இன்னொரு கதைக்கு இது நம்மை இட்டுச் செல்கிறது. ஜெனரல் ஜியாவுல் ஹக் அதிபராய் இருந்தபோது எங்களுக்குப் பள்ளி திரும்பக் கிடைத்தாலும், முஸ்லிம் தாக்கம், குர்ஆன் ஓதுதல் மற்றும் இஸ்லாமிய போதனைகள் தொடர்ந்து கொண்டுதான் இருந்தன. எங்களது அன்புள்ள நண்பர் திரு. வில்லியம் கான் இப்போது பள்ளி முதல்வராயிருக்கிறார். பள்ளியில் எமது முந்தைய கல்வி முறையைத் திரும்பக் கொண்டுவர அவருக்கு மிகக் கடினமாயிருந்தது. மாணாக்கரின் பெற்றோர் இந்தக் குர்ஆனின் போதனை முறையில் பழகிப் போயிருந்ததால் திரு கான் கொண்டு வர முயன்ற மாற்றங்களை எதிர்த்தனர். எங்களுக்கு உதவி செய்துவருகிற கர்த்தருக்கு நாங்கள் நன்றியுள்ளவர்களாய் இருக்கிறோம். ஆனாலும் இன்னும் பல காரியங்கள் முன்னேற்றம் காணவேண்டியுள்ளது. சபைத் தலைவர்கள் நன்கு திட்டமிட்டால்தான் நமக்கு நல்ல கல்வி நிறுவனங்கள் பாகிஸ்தானில் உருவாக முடியும். இந்தப் பள்ளிகள் நாட்டுடமையாக்கப் பட்டதைத் தொடர்ந்து கல்வி புகட்டும் அமைப்பு மிக மோசமாகியுள்ளது. ஆசிரியர்கள் வேலை செய்யவே



மனதற்றிருக்கிறார்கள். பரிசுத்த இரட்சகர் கல்விக் கூடம் திரும்ப சபை அதிகாரிகளிடம் மீண்டும் ஒப்படைக்கப்பட்ட போது 33 ஆசிரியர்கள் இருந்தனர், கிறிஸ்தவ ஆசிரியர்கள் மூன்று பேர் மட்டுமே அதில் இருந்தனர் என்று கண்டோம். அவர்களில் ஒருவர் சபை வளாகத்தில் உள்ள வீட்டில் குடியிருந்த திரு வில்லியம் கான், அரசாங்க பள்ளியில் பணிபுரிய இவர் மறுத்து விட்டார். இரண்டாவதாக பணியிட மாற்றம் பெற விரும்பாத வயதான ஆசிரியர் ஒருவர், மூன்றாவதாக தனது குடும்பத்தை இடமாற்றம் செய்ய விரும்பாத திரு அலெக்ஸாண்டர் டாஸ், இவரும் சபை வளாக வீட்டிலேயே குடியிருந்தார். அந்த 33 ஆசிரியர்களில் மற்ற அனைவரம் குறைந்த வேலை நிறைந்த சம்பளம் என்று எதிர்பார்த்து அரசாங்கப் பணிக்குச் சென்று விட்டனர். இது எமக்கு மிகுந்த சிரமத்தை ஏற்படுத்தி யுள்ளது. நல்ல ஆசிரியர்கள் கிறிஸ்தவ சமுதாயத்தில் இருந்து பெறுவதற்கு நீண்டகாலம் ஏறக்குறைய இரண்டு ஆண்டுகள் பிடித்தன, ஏனெனில் வயதான ஆசிரியர்களுக்குப் பதிலாக நியமிக்க போதிய அளவு படித்த இளைஞர்கள் எமக்கு இல்லை. தேவ கிருபையினால் இப்பொழுது எமது பள்ளியில் நல்ல படித்த தகுதியுள்ள ஆசிரியர்கள் இருக்கின்றனர். அபிவிருத்திப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

ஆமாம், பள்ளியின் தரங்களை உயர்த்த நாங்கள் போராடுகிறோம். ஆனால் பள்ளிக் கல்வி ஒரு நாணயத்தின் ஒரு பக்கம் மட்டும்தான் என்று எப்போதுமே தெளிவாக நான் இது முக்கியமானது, ஆனால் இதை விட

அதிகமாக பாகிஸ்தானுக்கு தேவைப்படுகிறது. கிறிஸ்தவ ஒழுக்கநெறியின் ஒரு செயல்பாடு என்னுடைய நாட்டிற்கு அவசரமாகத் தேவைப்படுகிறது.

## அத்தியாயம் 4

## கட்டியெழுப்பும் அன்பு

மீண்டும் நான் சொல்கிறேன், படிப்பு மட்டும் போதாது. அப்போஸ்தலர் பவுல் சொன்னதுபோல, அது மக்களைப் பெருமையுள்ளவர்களாக்கும். எனக்குத் தெரிந்த சில கூடுகளைப் பற்றி நினைக்கையில் மிகவும் வருந்துகிறேன். சபையில் மிக முக்கியமான பங்காற்றி யிருக்கக்கூடிய ஒரு குடும்பம் எனது ஞாபகத்திற்கு வருகிறது. 1960களின் ஆரம்பத்தில் நான் பணியிலமர்த் தப்பட்ட சிந்து மாகாணத்தின் தெற்குப் பகுதியிலுள்ள மிர்புர் காசில் அவர்கள் வாழ்ந்தனர். நன்றாகப் படித்த ஒரு குடும்பம். குடும்பத் தலைவர் காவல்துறை அதிகாரியா யிருந்து ஓய்வு பெற்றவர். அவருடைய மனைவி தன்னை ஒரு உயர்சாதி இந்துக் குடும்பத்தைச் சேர்ந்தவளாகக் கருதிக் கொண்டாள். அவள் இந்தியாவில் கிறிஸ்தவ மார்க் கத்துக்கு மாறியவள். அவர்களுக்குப் பிள்ளைகள் இல்லை. அது ஒரு விசித்திரமான குடும்பம். அவர்கள் சபைத் தலைவர்களை மதிப்பதில்லை. அவர்கள் பெரும் பாலும் ஆலயத்துக்குச் செல்லுவதில்லை. சபைக்குக் கொடுப்பது என்று வரும்போதெல்லாம் அவர்கள் கொடுத்தனர். மற்றவர்களைவிட அதிகமாகவே கொடுத்தனர்.



ஆனால் அவர்களுடைய நோக்கமோ ஆதரவு கொடுப்பதும் இரக்கமற்றதாயுமிருந்தது. குறைந்த பட்சம் சொல்வதானால் அப்படித்தான். எனக்கு முன்பு பணியிலிருந்த குருவானவர் அவர்களுடைய வீட்டிற்கு அடிக்கடி செல்வதில்லை என நினைக்கிறேன். அக் குடும்பத் தலைவர் ஏதோ ஒரு அனாதை இல்லத்திலிருந்து இரண்டு பிள்ளைகளை தத்து எடுத்த பின்பு மரித்துப் போனார். ஆனாலும் சொத்து இருந்தபடியால் அப்பெண் மணி குடும்பத்தைப் பராமரிக்க முடிந்தது. வேலையாட் களை வைத்துக் கொள்ளவும் அவளால் முடிந்தது. தனக்கு முன்பாக எவரையும் உட்காருவதற்கு அவள் அனுமதிக்க வில்லை. அவளுடைய அயல் வீட்டுக்காரர்களும் பெரும் பாலும் அவளைச் சந்திப்பதில்லை, ஏனெனில் அவள் அவர்களை வரவேற்கமாட்டாள். தன்னுடைய பிள்ளைகள் தாங்கள் மற்றவர்களைவிட உயர்ந்தவர்கள் என்று எண்ணும்படி அவர்களை அவள் பயிற்சித்தாள். அவர்கள் மற்ற ஜனங்களோடு பழகக் கூடாது என்றும் சொல்லி யிருந்தாள். அவர்கள் பள்ளிக்குச் சென்றபோது வேலை யாளை அனுப்பி அவர்கள் நடவடிக்கைகளைக் கண்காணிக்கச் செய்தாள், மற்ற மாணவர்களோடு பேச அவர்கள் அனுமதிக்கப்படவில்லை.

சங்கீதக்காரனாகிய தாவீது இராஜா சொல்கிறது போல, வீணான மாயைகளைப் பின்பற்றுபவர்கள் தங்கள் வேதனைகளைப் பெருகப் பண்ணுகிறார்கள். இந்தக் குடும்பத்திற்கு இதுதான் சம்பவித்தது. இந்த பிள்ளைகள் வளர்ந்தபோது, அந்தப் பெண் பிள்ளை பையன்களுடன்

சுற்றி அவர்களோடு படுத்து உறங்கத் துவங்கினாள். அவர்களைக் கவனிக்க ஒருவருமில்லை. அவர்கள்மேல் இரக்கப்படவும் ஒருவருமில்லை. இந்த பெண்ணுக்கு, ஐசுவரியமுள்ள மூதாட்டிக்கு ஏதாவது தொந்தரவு வராதா என்று மக்கள் காத்துக் கொண்டிருந்தனர்.

அந்தப் பையன் இளையவன், அவன் சற்று வளர்ந்தபோது போதை மருந்துகளுக்கு அடிமையாகி, பெண்களை விரும்பவும், குடிக்கவும் ஆரம்பித்தான். அவன் கொஞ்சம் படித்தவனானதால் தன் தாயின் கையொப்பம் போல சுலபமாக ஒப்பமிடப் பழகி, தன் தாய் வங்கியில் வைத்திருந்த கொஞ்சம் பணத்தை எடுத்துத் தன் விருப்பம்போலச் செலவழித்தான். அவர்களுடைய பணமெல்லாம் தீர்ந்து போனது. அந்தப் பையன் தங்கள் சொத்தை விற்றான். பிறகு தன் சகோதரியின் நகைகளைத் திருடி, குறைந்த விலைக்கு அவைகளை விற்றான். தங்கள் குடும்ப நண்பர்களிடம் கடன் வாங்கவும் துவங்கினான். கடைசியில் அந்தத் தாய் தன் வீட்டிலிருந்து பலவந்தமாய் வெளியேற்றப்பட்டாள். படிப்பறிவு இருந்தும் தேவனை புறம்பே விட்டுவிட்ட மக்களுடைய கதை இதுதான்.

இது ஒரு மிதமிஞ்சிய சூழ்நிலையாகும், அவர்களைக் கட்டியெழுப்பியிருக்கக் கூடிய அன்பு அங்கே புறக்கணிக்கப்பட்டது. என் ஊழியத்தில் எப்போதுமே மற்றவர்களுடைய கூடுகளைக் கட்டும்படி நான் விரும்பினேன். போதகராய் மாறுவதென்பது பிரசங்க பீடத்திலிருந்து சத்த



மிடுவதும் சுவிசேஷத்தின் வெறும் உண்மைகளைப் பிரசங்கிப்பதுமல்ல. முழுமையாக ஒரு நபரைப் பொறுப்பெடுத்துக் கொள்வதே பூரண சுவிசேஷமாகும். நாம் வேதவாக்கியங்களினூடே பார்க்கும்போது இயேசு மக்களை முழுமையாக முற்றிலுமாகச் சீர்படுத்தினார். குறிப்பாகச் சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்டவர்களுக்கு அப்படிச் செய்தார். தொழுநோயுள்ள ஒரு மனிதனுகு அவர் செய்த அதிசயத்தைக் கவனியுங்கள். "ஆண்டவரே உமக்குச் சித்தமானால், என்னைச் சுத்தமாக்கும்" என்று இரக்கத்துக்காகக் கதறினான் அவன். இயேசு அவனுடைய வார்த்தைகளையே திரும்பச் சொல்லி "எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு" என்றார். சுகம் என்பது உங்கள் உள்ளான மனுஷனைச் சீர்படுத்தும் ஆவிக்குரிய சுகம், அது உங்கள் ஆவிக்குள் பிரவேசித்து, அசுத்தமான மனிதனை முழுமையானவனாக்குகிறது. சமுதாயத்தில் கனமும் மரியாதையும் அவனுக்குத் திரும்பவும் கிடைக்கும்படி அவனைச் சீர்படுத்துகிறது. அந்த சர்வாங்க சுகம் பிரசங்க ஊழியத்தின் மூலமாகவும் நடைமுறை அடையாளம் காணலினாலும் தேவனுடைய ஆவியினால் உண்டாகிறது.

ஏழை மக்களின் சரீரப்பிரகார தேவைகளை நாம் தரமுடியாவிட்டால், அப்பொழுது ஆவிக்குரிய செய்திகளை அவர்கள்மேல் பலவந்தமாய்த் திணிப்பது சரியான அணுகு முறையல்ல. கடந்த இரண்டு மூன்று நாட்கள் பட்டினியாய் இருந்தவனுக்கு இரட்சிப்பின் செய்தியை

நீங்கள் பிரசங்கிக்க முடியாது. அவனுக்கு முதலில் ஏதாவது உணவு கொடுக்கப்படவேண்டும். நமது கர்த்தர் எப்போதும் அப்படித்தான் செய்தார். ஜனங்கள் திரள் திரளாய் அவரிடம் வந்தபோது அவர்களை வரவேற்றார். பின்பு அவர்களைப் போஷித்தார், அவர்களது காயங் களைக் குணமாக்கிப் பின்னர் சுவிசேஷத்தை அவர் களுக்குப் பிரசங்கித்தார். பாகிஸ்தானில் நற்செய்தி அறிவிக்க வந்தவர்கள் இங்குள்ள பண்பாடு மற்றும் பின்புலம் ஆகியவற்றைப் புரிந்து கொள்ளவில்லை என்பதே பாகிஸ்தானிலுள்ள எமது பரிதாப நிலை. அவர்கள் வந்தார்கள், அப்படியே தங்கள் செய்தியைப் பிரசங்கித்தனர். ஜனங்கள் பிரசங்கத்தைக் கேட்டார்கள். ஆனால் எனது கிறிஸ்தவ வாழ்க்கை முழுவதிலும் நான் முடிவு செய்தது என்னவெனில், பிரசங்கம் கேட்டவர்களில் பலரில் ஆழமான பிரதிக்கிரியை உண்டாகவில்லை என்பதே. அநேகர் இரட்டை வாழ்க்கை வாழ்ந்துள்ளனர். தங்கள் மிஷனரி நண்பர்களை ஏமாற்றிவந்துள்ளனர். சில நேரங்களில் மிஷனரிகளும் உண்மையில் என்ன நிகழ்கிறது என்ற அகப்பார்வை இல்லாமல் உலகின் பிற பகுதிகளிலிருந்து தங்களுக்கு ஆதரவு நல்குபவர்களைப் பிரியப்படுத்துவதிலும் அதற்கான அறிக்கை தயாரிப்பதி லுமே ஈடுபாடு கொண்டிருந்தனர் எனத் தோன்றுகிறது.

முழுவதும் முற்றிலும் புதிதுமான குறிக்கோளுடன் ஏற்படும் இருதய ஆழத்தின் மனந்திரும்புதலே ஆரம்பிக் கக்கூடிய ஒரே இடமாகும். பாகிஸ்தானில் கிறிஸ்தவம்



நின்று பிடிப்பது கல்வியறிவு, மக்களுக்குத் திறமைகளைத் தருதல், தங்கள் சொந்தக் காலில் நிற்க தைரியம் தருதல் ஆகியவற்றின் மூலமேயாகும். அதற்கும் அப்பால் அது இயேசுவிடம் பூரணமாக, முழுவதுமாகத் திரும்புதல் மற்றும் அவரது தாங்கும் அன்பு மூலமாகவே மட்டும் இருக்க வேண்டும். நம்முடைய மக்கள் தங்களையும் தங்கள் பணத்தையும் அர்ப்பணிப்பது இதிலிருந்து வந்த தேயாகும். எமது நாட்டில் எமது சட்டைப்பை இடது புறத்தில், எமது இதயத்திற்குச் சற்று மேற்புறமாக அமைந் துள்ளது. எமது இருதயங்கள் தொடப்படும் வரை பணம் வெளியில் வராது. ஆனால் இதயம் தொடப்படுமானால், அது தேவ அன்பினால் மாற்றப்படுமானால், அதன் பிறகு பணம் ஒரு பிரச்சனை அல்ல.

இதை என் சொந்த அனுபவத்திலிருந்தே எடுத்துக் காட்டமுடியும். நான் சுக்கூருக்கு வந்தபோது சபையின் மாத வருமானம் மிகக் குறைவாயிருந்தது, எங்களுடைய மதிப்பீடு குறித்த நேரத்தில் மறைமாவட்ட அலுவலகத்தை சென்றடையாவிட்டால் நினைப்பூட்டும் கடிதம் எமக்கு வருவதுண்டு. சில நேரங்களில் எமது சபை தங்கள் பங்கை அனுப்பாததால் எனது ஊதியம் நிறுத்தி வைக்கப்படும். எமது பிஷப்பாக வெளிநாட்டு மிஷனரி இருந்தார், அவருடைய எதிர்பார்ப்பு மற்றும் நிர்வாக முறை ஆகிய வற்றால் நாங்கள் சில நேரங்களில் நீண்டகாலம் பட்டினி கிடக்க நேர்ந்ததுண்டு. ஆனாலும் பதினேழு ஆண்டுகள் சுக்கூரில் ஊழியம் செய்த பின்பு, கடின உழைப்பு, சகிப்பு

ஆகியவற்றுக்குப் பின்பு, கர்த்தருடைய சமூகத்தில் காத்திருந்தபின்பு ஜனங்கள் மாறி இருப்பதை நான் கண்டேன். முன்பெல்லாம் சபைக்கு வராதவர்கள், ஆண்டிற்கு ஒன்று அல்லது இரண்டு முறை வந்தவர்கள் இப்போது ஒழுங்காக ஆலயத்திற்கு வர ஆரம்பித்தனர். அவர்கள் கர்த்தருடைய வார்த்தைக்குச் செவிகொடுத்து, அநேகர் தங்களை அர்ப்பணித்தனர். அதன் பின்பு பிரசங்க்கத்தில் சொல்லாமலேயே கர்த்தருக்கென்று கொடுக்க ஆரம்பித்தனர். பிரசங்கத்தில் பணத்திற்காகப் பேசும் போதகர் வெற்றிகரமானவர் அல்ல என்று நான் எண்ணுகிறேன். தேவனுடைய ஜீவனுள்ள ஜீவனைக் கொடுக்க வல்ல செய்தியை மக்களுக்கு அவர் கொடுப்பாரெனில், பணத்திற்காகச் சத்தமிட்டு கேட்கவேண்டியதில்லை.

உண்மையில் பிரசங்கமானது குற்றப்படுத்துவதில் அடங்கியிருக்கிறதில்லை. மற்றவர்களுடைய கஷ்டங்களில், சிரமங்களில் ஈடுபாடு கொண்டு, பாரங்களைப் பகிர்ந்து கொண்டு அவர்களுக்கு நெருக்கமாகச் செல்வதை மையமாக வைத்தே கிறித்தவ வாழ்க்கை அமைகிறது. வெறும் வார்த்தைகளால் அல்ல ஈடுபாட்டின் மூலம் கர்த்தருடைய அன்பை வழங்குவதே அது. பிரசங்கங்களைக் கேட்கவோ, நிறைய புத்தகங்களைப் படிக்கவோ நேரமில்லை அல்லது நாட்டமில்லை என்ற நிலை வந்து விட்டது என்று நிச்சயமாக நான் சொல்ல முடியும். கிறிஸ்தவர்கள் முதலாவது அன்போடும் கரிசனையோடும் மக்களிடம் செல்வதால் தாங்கள் சொல்வது கேட்கப்படும்



உரிமையைப் பெறுகிறார்கள். ஒரு மிருகமும் கூட அன்பை அறிகிறது அதற்கு பதில் செய்கிறது. மனிதராகிய நாம் தான் நம்முடைய சிருஷ்டிகருக்கு மிகவும் சிரமத்தைக் கொடுக்கும் சிருஷ்டிகளாய் இருக்கிறோம். நாம் சுலபமாக கலகம் செய்கிறோம். நாம் அவர் சொல்வதைக் கேட்பதில்லை, அவருக்கு நம்மை ஒப்புக்கொடுப்பதில்லை. தியாகமான அன்பும் கரிசனையும் மட்டுமே இதை உடைக்க முடியும். சிரமங்களும் பிரயாசங்களும் உண்டாகும், சக கிறிஸ்தவர்களின் சந்தேகங்களும், கடுங் கோபங்களும் சந்திக்க நேரிடும். ஆனால் சுக்கூரில் கூடுகளைக் கட்டவும் தேவனுடைய அற்புதமான நாமத்தை மகிமைப்படுத்தவும் நான் மேற்கொண்ட சிறுமுயற்சியில் தேவனுடைய கரத்தைக் காணவும், எனது கடினப் பிரயாசங்களுக்குச் சிறிதுசிறிதாக பலன்களைக் காணவும் கைகூடியதற்காக தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன்.

எது வெற்றியாக அல்லது தோல்வியாக முடிந்தது என்று என்னால் சொல்ல இயலாது. அநேக கூடுகள் பாதி கட்டி முடிந்த நிலையிலேயே உள்ளன. எனக்குத் தெரிந்ததெல்லாம் என் ஆண்டவரின் பணி இரட்சிப்பதும் குணமாக்குவதும், ஜீவியங்களைக் கட்டியெழுப்புவதும் தான் என்பதே. இந்த ஊழியத்தில் எனது சொந்தக் குடும்பமே பாடுபட்டு பகிர்ந்துகொண்டுள்ளது. அவர்களுடைய பங்களிப்பு ஆதரவுக்கு எவ்வளவாய் நான் கடன்பட்டிருக்கிறேன் என்று நான் ஒருபோதும் அறியேன்.

## அத்தியாயம் 5

## நான் நினைவுகூரும் கூடுகள்

கூடுகளைக் கட்டுவதென்பது மக்களைக் கட்டுவ தாகும். இதற்கு அநேக உதாரணங்கள் என் நினைவில் வருகின்றன. இப்ரஹீமும் முலாம்பழ வயலும் குறித்த விஷயம் ஒன்று இருந்தது. இது மிர்புர்காசைச் சுற்றியிருந்த கிராமங்களில் நிகழ்ந்தது. நான் டலி தொடர் வண்டி நிலையத்திலிருந்து ஒரு லேண்ட் ரோவர் காரை ஓட்டிக் கொண்டு வந்தேன். எனக்கு முன் ஒரு மாட்டு வண்டி போய்க் கொண்டிருந்தது, அதில் இரண்டு அல்லது மூன்று பேர் இருந்தனர். மெதுவாகச் சாலையில் செல்லுவோர் மீது தூசுகளைக் கிளப்பிடுவது என் வழக்கமல்ல, ஆகவே நான் சற்றுப் பொறுத்திருந்தேன். அப்பொழுது அந்த வண்டியி லிருந்து ஒரு இளைஞன் இறங்கி வந்து, நான் மெதுவாய்க் காரை ஓட்டினபடியால் பக்கத்திலேயே நடந்து வந்தான். நான் கண்ணாடியை இறக்கியபோது, அவன் நன்றி ஐயா என்றான். நான் எதற்கு என்றேன். என்னைச் சிறைச் சாலையிலிருந்து விடுதலை பெறச் செய்தீர்களே, நினைவிருக்கிறதா? என்றான். நான், நீ யார்? என்றேன். நான் இப்ராஹீம் என்றான். அப்பொழுது எனக்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு நிகழ்ந்த சம்பவம் நினைவுக்கு வந்தது. நான் டலிக்குப் பக்கத்திலுள்ள ஒரு கிராமத்தைச் சந்தித்தேன். அங்கே ஆறுமாதக் குழந்தையை வைத்திருந்த ஒரு மூதாட்டி இருந்தாள். அவள் ஆராதனைக் கூட்டத்தில் உட்கார்ந்திருந்தாள், கூட்டம் முடிந்தபின் அவள் என்னோடு பேச விரும்புவதாகவும்,



நான் அவளுடைய வீட்டைச் சந்திக்க வேண்டுமென விரும்புவதாகவும் எனக்குத் தெரிவிக்கப்பட்டது. அவள் 60 வயதான ஒரு முஸ்லிம் மூதாட்டி. நான் அவளுடன் சென்றேன். அங்கு ஒரு முதியவர் படுக்கையில் உட்கார்ந்து என்னை நோக்கி மரியாதை நிமித்தம் கரங்களை மடக்கி வைத்திருந்தார். அவர் முடமாயிருக்கிறார் என்று நான் உணர்ந்து, தாயே, இங்கே என்னை ஏன் வரச் சொன்னீர்கள்? என்றேன். அவள் அழ ஆரம்பித்தாள். அங்கே இருபது வயதுள்ள ஒரு பெண் இருந்தாள். அந்தத் தாய் என்னிடம், ஐயா, நாங்கள் சௌத்ரி, பரக்கத் உல்ஹா (அந்த கிராமத்து நிலப்பிரபு)வின் குத்தகைக்காரர். எங்கள் மகன் சௌத்ரியிடம் வேலை பார்க்கிறான் என்றாள். ஒரு நாள் இரவு அந்த நிலப்பிரபுக்குச் சொந்தமான முலாம்பழ வயலில் இப்ரஹிம் காவல் இருந்தான். யாரும் வந்து முலாம் பழங்களைப் பறித்துவிடாதபடி அவனை இரவும் பகலும் காவலுக்கு சௌத்திரி வைத்திருந்தான்.ஒரு வயதான பில் வேலைக்காரன் டலி நிலையத்திலிருந்து அந்த கிராமம் நோக்கி நடந்து வந்தான். அவனுக்குப் பசி யாயிருந்தபடியால் இந்த முலாம்பழ வயலில் இறங்கி ஒரு முலாம் பழத்தைப் பறித்துச் சாப்பிடலானான். தூங்கிக் கொண்டிருந்த இப்ராஹிம் சத்தம் கேட்டு விழித்தான். ஒரு கனமான கட்டையை எடுத்து வந்த இந்த மனிதனின் தலையில் அடித்தான். அவன் உடனடியாகச் செத்துப் போனான். பொழுது விடிந்ததும் இந்தச் செய்தி பரவியது. மரித்த மனிதனின் மனைவியும் இரண்டு பிள்ளைகளும் அழுதுகொண்டே ஓடி வந்தனர். இந்தக் காரியத்தை

வேண்டுமென்றே இப்ராஹீம் செய்யவில்லையாதலால் மக்கள் அவன்மேல் அனுதாபம் காண்பித்தனர். ஒரு ஒப்பந்தம் செய்து இப்ராஹிம் 800 ரூபாயை இழப்பீடாகக் கொடுக்க வேண்டும் எனத் தீர்மானித்தனர். அந்த ஏழை விதவையும் அதைத் திருப்தியுடன் வாங்கிக் கொண்டாள். பிரச்சனை அத்துடன் முடிந்தது என எல்லாரும் நினைத்தனர்.

ஆனால் அந்த சௌத்ரி ஒரு பேராசைக்காரனாக இருந்தான், பக்கத்து ஊர்களின் நிலப்பிரபுக்களுடன் அவனுக்கு நல்லுறவு இல்லை. தன்னுடைய குத்தகைக் காரர்களிடமும் அப்படியேதான். அடுத்த ஊர் மக்கள் இதை நல்ல சந்தர்ப்பம் என்று எண்ணி அவனுக்குத் தொந்தரவு கொடுக்க முடிவு செய்தனர். போலீசுக்கு இந்தக் கொலை பற்றி யாரோ தகவல் கொடுக்க, இப்ராஹிம் கொலைக் குற்றம் சாட்டப்பட்டான். அப்போதைய சட்டப்படி அவனுக்குத் தூக்குத் தண்டனை கிடைக்கும். இப்ராஹிமுடைய தகப்பன் குடும்பத்தைப் போஷிக்க முடியாததாகையால் முழு குடும்பமும் தூக்கில் போடப் படும். நான் இதைக் கேள்விப்பட்டு கனத்த இதயத்துடன் மிர்புர்காஸ் திரும்பினேன். வயதான அங்கிள் சௌத்ரி அலி அஹ்மெத் என்னை சந்திக்க வந்தார். நான் என் பாரத்தை அவருடன் பகிர்ந்து கொண்டேன். அவர், இந்த இளைஞனுக்கு உதவி செய்ய ஏதாவது வழி கண்டு பிடிக்கிறேன் என்றார். அவர் செல்வாக்குடைய இன்னொரு மனிதரிடம் பேசினார். அஹ்மெதி பிரிவைச் சேர்ந்த டாக்டர்



சித்திக்கி என்பவரே அவர். அஹ்மெதிகளில் சில மிக நல்ல முஸ்லிம்களை நான் கண்டுபிடிக்கிறேன். டாக்டர் சித்திக்கி தனது மைத்துனர் அப்தெல் கேயிர் என்பவரை அணுகினார். அவர் நீதிமன்றத்தில் பணியாற்றும் ஒரு வழக்கறிஞராக இருந்தார். அவரிடம் இவர் விஷயத்தைக் கூறி இந்த இளைஞனை விடுதலை செய்ய வழி செய்யும் படி வேண்டினார். அவர் நீதிமன்றத்துக்குச் சென்று, இப்ராஹிம் குறித்த தகவல்களைப் பெற்று வழக்கு நீதிபதி முன் கேள்விக்கு வந்தபோது வழக்காடச் சென்றார். கண்ணால் கண்ட சாட்சிகள் யாருமில்லாததால் வழக்கு பலவீனமாக இருந்தது, காவல் துறையினரும் அதில் மேலும் ஈடுபாடு காண்பிக்கவில்லை.

இரண்டாவது கேள்வி முறை வந்தபோது இப்ராஹிம் விடுதலை செய்யப்பட்டான். இதுதான் நடந்தது. இப்போது நான் இப்ராஹிமைப் பார்த்து, நீ விடுதலையானவுடன் என்னை ஏன் வந்து பார்க்க வில்லை? என்று கேட்டேன் ஐயா எனக்கு மிக ஆச்சரியமும் சந்தோஷமுமாயிருந்தது, வீட்டுக்குப் போவதைத் தவிர வேறெதுவும் நினைவுக்கு வரவில்லை. உங்களுடைய நண்பரான அந்த வழக்கறிஞர் எனக்கு உணவும், ஒரு ஜோடி புதிய உடைகளும் வாங்கிக் கொடுத்து வீட்டுக்குச் செல்ல ரயில் டிக்கெட்டும் வாங்கிக் கொடுத்தார். எனக்கு மிகவும் ஆச்சரியமாயிருந்தது. இன்று உங்களைக் கண்டவுடன் எனக்கு மிகவும் அற்புதமாயிருந்தது, உங்களுக்கு வந்தனமும் நன்றியும் சொல்ல வந்தேன் என்று அவன்

சொல்லி என் கைகளைப் பிடித்து முத்தஞ் செய்தான். எனது கரங்கள் முத்தமிடுவதற்குத் தகுதியானவைகள் அல்ல, ஆனால் இந்தத் தேவையுள்ள மனிதனுக்கு உதவி செய்ய என்னைப் பயன்படுத்தினபடியால் தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன்.

அடுத்து ஃபஜி என்ற ஏழை அநாதை மனிதனை நினைவு கூறுகிறேன். அவன் என்னிடம் வந்தபோது அவனுக்கு ஆலயத்தைக் கவனிக்கும், சுத்தம் செய்யும் பணியும் கல்லறைத் தோட்டத்தைக் கவனிக்கும் பணியும் தரப்பட்டது. நான் ஒரு நள்ளிரவு திடீரென விழித்துப் பார்த்த போது வெளியே இருட்டில் ஃபஜி நடந்து செல்வதைக் கண்டேன். அவனருகே சென்றபோது அவன் இளைப் பாறுதலின்றி இருந்தான். என்ன ஆயிற்று? என்றேன்.

அவன் நேரடியாக, வெளிப்படையாக என்னைப் பார்த்து, போதகர் ஐயா, என்னுடைய குட்டோவை என்னிடம் திரும்பக் கொண்டுவருவீர்களா? என்றான். குட்டோ அவனுடைய மனைவி. அவன் பல ஆண்டு களுக்கு முன்பு திருமணம் செய்தான். அவன் மிக ஏழையாக இருந்தான். அவன் பெற்றோர் சிறிது புத்தி பேதலித்தவர்கள். குட்டோ தங்களுடன் தங்கி, சம்பாதித்து தங்களையும் ஆதரிக்க அவர்கள் அனுமதித்தனர். ஏனெனில், அவர்களுக்கு வயதாகிக் கொண்டே போகிறது. வேலை செய்யவும் அவர்கள் தயாராகவில்லை. நான் ஃபஜியைப் பார்த்து, சரி, நீ ஜெபம் செய், எல்லாம் சரியாகி விடும் என்றேன். அடுத்த வீட்டில் எனக்கு ஒரு நண்பர்



இருந்தார். அவர் பெயர் யொஹாம்மெத் ஹஷிம் மெமோன். நரோவால் உதவிக் கலெக்டராக அவர் இருந்தார். அவருடைய பிள்ளைகளும் எனது பிள்ளைகளும் ஒரே வயதுள்ளவர்கள். நான் இந்த தனவானிடம் பேசினேன். சரி இதைப் பார்த்துக் கொள்வோம் என்றார். சொன்ன படியே அந்த பெண்ணைத் திரும்பவும் அவள் கணவனுடன் சேர்ந்து வாழும்படி கொண்டுவந்துவிட்டார். இப்பொழுது ஃபஜியும் குட்டோவும் ஒன்றாக வாழலாயினர். இது ஒரு பெரிய காரியம். அவர்கள் இருவரும் எங்களுக்கும் மெய்யான ஆறுதலாகவும் என் குடும்பத்துக்கு உதவியாகவும் இருந்தனர்.

என் மனதில் தோன்றும் இன்னொரு விஷயம் ஷனிஃபா பற்றியது. அவளுடைய மாமனார் பெட்ருஸ் சீக்கிய ஷெட்யூல்ட் சாதியிலிருந்து இரட்சிக்கப்பட்டவர். அது மிக மிகத் தாழ்வான சாதி. ஷனிஃபாவின் கணவன் பெயர் லூகா. அவர்களுக்கு ஒரு பெண் குழந்தை இருந்தது. ஷனிஃபா வேறொரு கிறிஸ்தவ மனிதனுடன் பழகி, அந்த நாலு மாத கைக்குழந்தையையும் விட்டுவிட்டு அவனோடு ஓடிவிட்டாள். பெட்ருஸ் எங்கள் வீட்டிற்கு வந்து தன் தலைப் பாகையைக் கழற்றி டெய்சியின் காலடியில் எறிந்து விரக்தி யுடன் சகோதரி அவர்களே, தயவு செய்து எங்களுக்கு உதவுங்கள், என்று அழ ஆரம்பித்தார். டெய்ஸி விஷயத்தை என்னிடம் சொல்ல, நாம் ஏதாவது செய்வோம் என்று கூறினேன். எனது அயல்

வீட்டுக்காரரும் போலிஸ் அதிகாரியுமான காவல் துணைக் கண்காணிப்பாளர் ஜகாவுல்லாஹ் அவர்களிடம் இவ்விஷயங்களைத் தெரிவித்தேன். அவர் உடனே உள்ளூர் காவல் நிலைத்துக்கு கட்டளை பிறப்பித்தார். காவலர்கள் அவர்களை விரட்டிச் சென்று மிர்புர்காசிலி ருந்து ஹைதராபாதுக்குப் பிரயாணம் செய்கையில் பிடித்து காவல் நிலையம் கொண்டு வந்தனர். உன்னுடைய கணவனோடு போகிறாயா என்று கேட்டபோது, நீங்கள் என்னைக் கொன்று போட்டாலும், இந்த மனிதனுடன் போகமாட்டேன், என்னுடைய ஆண் நண்பனை என் கணவனாக ஆக்கிக் கொள்கிறேன் என்றாள். நிலைமை மோசமடைவதைக் கண்ட நான் ஷனிஃபாவையும் அவள் நண்பனையும் எங்கள் வீட்டுக்கு வர அனுமதியளிக்கும்படி திரு ஜகாவுல்லாஹ் அவர்களிடம் வேண்டினேன். அவர்கள் வந்தனர், அவர்களுக்குத் தண்ணீரும், தேநீரும் அளித்த பின்பு ஷனிஃபாவிடம், “நீ கணவன் வீட்டுக்குப் போக விரும்புகிறாயா? என்று கேட்டேன். இல்லை, நான் காவல் நிலையத்தில் பதில் கூறிவிட்டேன். சொல்வதற்கு வேறொன் றுமில்லை என்றாள். சரி என்றேன். தங்கள் தலை சரியாக முறுக்கப்படாமல் இருப்பவர்களுக்காக எப்போதும் டானிக் அல்லது மருந்து வைத்திருப்பேன். அவளை மீண்டும் சுய புத்திக்குக் கொண்டுவர சிகிச்சையாக ஒரு ஷூவை அவள் மீது வீசினேன். அது பலன் தந்தது. அவள் ஒப்புக் கொண்டாள். லூகா தன் தகப்பனாருடன் அங்கே வந்திருந் ததால் அவனுடன் அனுப்பி வைத்தேன். அதன் பின்பு



இன்னும் அநேகம் பிள்ளைகளை அவள் பெற்றெடுத்தாள். பதினைந்து அல்லது பதினாறு ஆண்டுகளுக்குப் பிறகு அவளுடைய மகளுக்கு ஒரு நல்ல வாலிபனைத் திருமணம் செய்து வைத்தேன்: இந்த மகளைத்தான் கைக் குழந்தையாக முன்பு அவள் விட்டு ஓடினாள். ஆகவே இந்தக் கூடு தீப்பிடித்துக் கொண்டது, ஆனால் பின்பு காப்பாற்றப்பட்டு சரியாகி விட்டது. தேவனுடைய கிருபையி னால் பெட்ருசின் மதிப்பையும் மரியாதையையும் காப்பாற்ற முடிந்தது குறித்து மகிழ்ச்சியடைகிறேன்.

இப்போது இன்னொரு விஷயத்தையும் நினைவு கூருகிறேன். ஹேன்ஸ் டாஜ் என்னும் மனிதனின் கதை இது. இவனும் வடக்குச் சிந்துவில் மிகத் தாழ்ந்த சாதியைச் சேர்ந்த ஒருவன். அவன் கிறிஸ்தவனான பிறகு அவனுடைய பிள்ளைகள் படிக்க ஆரம்பித்தனர். மூத்த மகள் பர்வீன் ஒரு ஆசிரியையாக மாறினாள். இரண்டாவது பிள்ளை பள்ளிக்குச் சென்றது, மூன்றாவது பிள்ளையும் பள்ளிக்குச் சென்றது. சில காலத்துக்குப் பிறகு மூத்த பிள்ளைகள் இருவருக்கும் திருமணம் ஆனது. மூன்றாவது பிள்ளை தனியே தன் தாயுடன் வீட்டிலிருக்க நேரிட்டது. ஹேன்சின் குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சியற்ற தாக இருந்தது. அவன் மனைவி புத்தி பேதலித்தவள். அவளைச் சுற்றி நடப்பது அவளுக்குத் தெரியாது. தினமும் காலை 4 மணிக்கு ஹேன்ஸ் வேலைக்குச் செல்ல வேண்டியதாயிருந்தது, அவனது கடைசி மகள் வீட்டில் தனியே இருக்கவேண்டியதாயிற்று. அவள் அயல் வீட்டுக்

காரன் ஒருவனால் சோதிக்கப்பட்டு, கடைசியில் கர்ப்பவதி யானாள். இது ஹேன்ஸ் டாஜுக்கு ஒரு பலத்த அடியானது. அவன் என்னை அழைத்தனுப்பினான், நான் அங்கு சென்றபோது அவன் கண்ணீர்விட்டான். அவன் என்னைப் பார்த்து, இந்தப் பெண் எங்களைக் கொன்று விட்டாள், ஏனென்றால் இன்னும் இந்துக்களாய் உள்ள இந்த சாதி மக்கள் நீ நம் சாதியை விட்டுப் போய் விட்டாய், கிறிஸ்த வனாக மாறிவிட்டாய், எப்படி வாழ்ந்துவிடுவாய் என்று பார்ப்போம் என்று சொல்லி மிரட்டியிருக்கின்றனர் என்றான். அதனால்தான் இந்தப் பெண் பலாத்காரம் செய்யப்பட்டாள் என்று எண்ணினேன்.

ஹேன்ஸ் டாஜ் தற்கொலை செய்து கொள்வதாக அல்லது தானே தனது மகளை கொன்று விடுவதாக பயமுறுத்திக் கொண்டிருந்தான். நான் அதை யோசித்துப் பார்த்தேன். இந்த மனிதன் தற்கொலை செய்ய விட்டுவிட்டால் அது முழு குடும்பமும் கொல்லப்பட ஏது வாகும். அவன் தன் மகளைக் கொன்றுவிட்டால், அரசாங் கச் சட்டத்தின்படி அவனும் கொல்லப்படுவான், இப்படி இரண்டு பேரை குடும்பம் இழக்க நேரிடும். அவர்கள் அந்த கருவைக் கலைத்து விடவேண்டும் என்றுதான் உண்மை யில் கேட்டுக் கொண்டனர். ஆனால் வேறு ஏதாவது வழி கண்டுபிடிக்க நான் முயற்சித்தேன். ஆகவே கீழ் சிந்து விலிருக்கும் என் நண்பர்களைத் தொடர்புகொண்டேன். பின்பு அந்த பெண்ணின் மூத்த சகோதரியோடு அவளை அவர்களிடத்திற்கு அனுப்பிவைத்தேன். அங்கே ஒரு



ஆண் குழந்தையை அவள் பெற்றாள். அக்குழந்தை வேறொரு குடும்பத்தால் பிறகு தத்து எடுக்கப்பட்டது. நான்கு மாதங்களுக்குப் பிறகு மிக நல்ல அர்ப்பணிப் புள்ள ஒரு கிறிஸ்தவனுக்கு இப்பெண்ணைத் திருமணம் செய்து வைத்தேன்.

கூடுகளைக் கட்டுவது மனிதர்களைக் கட்டுவது என்று நான் விசுவாசிக்கிறேன்.

## அத்தியாயம் 6

## மேலதிகக் கூடுகளும் பிரச்சனைகளும்

இன்றைக்கு நான் தெளிவாக நினைவுகூறத் தக்க மற்ற நிகழ்வுகள் என் மனதில் உள்ளன. நஸ்ரீன் மெத்தப் படித்த ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவள், இது அவளுடைய கதைதான். இது 28 ஆண்டுகளுக்கு முந்தையது.

கீழ் சிந்துவிலிருக்கும் மிர்புர்காசில் உள்ள என் வீட்டிற்கு நஸ்ரீன் கொண்டுவரப்பட்டாள். அவள் ஒரு மதிப்பு மிக்க, பேர்பெற்ற பணக்காரரின் மகள், ஆனால் தனது மாற்றான் சகோதர சகோதரிகளால் மிகக் கடினமான சூழ்நிலையில் தள்ளப்பட்டாள். அவளுக்கு ஆதரவும் பாது காப்பும் தேவை என்றால் கிறிஸ்தவர்களிடம் சென்று கிறிஸ்தவளாக மாறுவதுதான் ஒரே வழி என்று ஆலோசனை தரப்பட்டது.

அவள் முதலாவது பரிசுத்த தெரசாள் மருத்துவ மனைக்கு வந்தாள். அங்குள்ள பணியாளர்கள் இந்த பணக்காரரைக் குறித்து சலித்துப் போயிருந்தபடியால்

அவளை அங்கு தங்கவைக்க அவர்களால் முடியவில்லை. ஆகவே என்னிடத்தில் கொண்டுவரப்பட்டாள். சீக்கிரமே தன் கௌரவத்தைக் குறித்து கரிசனை கொண்ட அவள் தகப்பன் அவளைத் தேட ஆரம்பித்தான் அவன் பரிசுத்த தெரசாள் மருத்துவமனைக்கு வந்தபோது அவர்கள் அவனுடைய மகள் ரெவரண்ட் நாமானிடம் இருப்பதாகக் கூறினார்கள். அதே பட்டணத்தில் செல்வாக்குமிக்க முஸ்லிம் உறவினர்கள் பலர் எனக்கு இருந்தனர். இந்த மனிதன் நேரடியாக என் வீட்டிற்கு வரத் துணியவில்லை. ஆகவே என்னுடைய பங்காளிகளில் ஒருவரான புகழ் பெற்ற வழக்கறிஞர் சௌத்ரி நசீர் அஹ்மத்திடம் சென்று தன் வேண்டுகோளை இவ்வாறு முன் வைத்தான்: என் மகள் நஸ்ரீன் ரெவரண்ட் நாமானின் வீட்டில் இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். ஆனால் அங்கு நான் போக முடியாது, ஆகவே தயவு செய்து எனக்கு உதவுங்கள்; எனது மகள் கெடுக்கப்பட்டுவிடக் கூடாது என்று நான் கவலைப் படுகிறேன். சௌத்ரி நசீர் அஹ்மத் அதற்குப் பதிலாக. அவள் ரெவரண்ட் நாமானிடம் இருந்தால் அவள் பாதுகாப்பாய் இருப்பாள், ஏனெனில் நாம் முழுவதுமாய் நம்பக்கூடிய மனிதர் அவர், உங்கள் மகள் தனியே இருப்பதை அவர் தவறாகப் பயன்படுத்தப்போவதில்லை என்றார். அப்பொழுது அந்தத் தகப்பன் பித்துப்பிடித்தவர் போலவும் கண்ணீருடனும் எங்களிடம் வந்தார். அவர் தன் தலைப்பாகையை என் காலடியில் வீசி, என் மகளைத் திரும்பத் தாருங்கள் என்றார். நான் சிரித்துக்கொண்டே



அவள் நன்றாக இருக்கிறாள், ஆனால் நீங்கள் அவளைத் தண்டிக்க மாட்டீர்கள் என்று எனக்கு உறுதிமொழி தரவேண்டும் என்றேன். நஸ்ரீன் என்னிடம் தான் வீட்டுக் குத் திரும்பப் போனால் தன் தகப்பன் தன்னைக் கொன்று விடுவார் என்று சொல்லியிருந்தாள். ஆகவே அவளைத் தண்டிப்பதில்லை என்று அவரை வாக்குறுதி செய்ய வைக்க வேண்டியதாயிற்று. அவர் வாக்குறுதி செய்தார். அவள் திரும்ப வீட்டுக்குச் சென்றாள். அவள் தன் தகப்ப னுடன் திரும்பியிருக்காவிடில் அவர் குற்றஞ் சாட்டப்பட்டு தன்னுடைய சமுதாயத்திலே தொடர்ந்து இருக்க முடியாமற் போயிருக்கும். இதை ஒருவித கூடு காப்பாற்றுதலாக நான் கருதினேன். ஏனெனில் அவன் தற்கொலை செய்திருப் பான் அல்லது தன் மகளைக் கொலை செய்திருப்பான். அப்படி அவன் செய்திருந்தால் பாகிஸ்தானில் கொலைக் குற்றத்துக்கான தண்டனையாக அரசாங்கம் அவனைத் தூக்கிலிட்டிருக்கும்.

ஷமீமுடைய கதை வித்தியாசமான ஒன்று. அவள் ஒரு கிறிஸ்தவள், தன் வீட்டில் மூத்த மகள். ஒரு செவிலி யாகப் பயிற்சி பெற்றாள். பின்பு தன் குடும்பத்தை ஆதரிக்கத் துவங்கினாள். அவள் அரபு நாட்டிலிருந்து அனுப்பிய பணத்தால் அவளுடைய தகப்பன் பணக்காரர் ஆனார். ஷமீம் தொடர்ந்து வேலை செய்தாள். அவள் திருமணம் செய்துகொள்ள விரும்புகிறாளா என்று குடும்பத்தில் யாரும் எண்ணிப் பார்க்கவில்லை. உண்மை யில் அவள் ஒரு உறுதியான குணம் கொண்டவள்.

அவளுடைய உறவினர் மூலம் அவளைப் பற்றி அறிந்தேன். நாங்கள் நண்பர்களானோம். அவர் தனது தனிப்பட்ட பிரச்சனைகள் குறித்து என்னிடம் வெளிப்படை யாகப் பேசினாள். போதகர் ஐயா, என்மீது கரிசனை காண்பிக்கும் முதலாவது நபர் நீங்கள்தான் என்று கூறினாள். தான் ஒரு கணவனை அடையவும் தனக்குச் சொந்தக் குடும்பம் வேண்டும் எனவும் விரும்புவதாக அவள் என்னிடம் கூறினாள். நாங்கள் ஜெபித்தோம். ஒரு கிறிஸ்தவனையே திருமணம் செய்து கொள்ள வேண்டும். என்று பலமாக அவளை வலியுறுத்தினேன். நீங்கள் தொடர்ந்து எனக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள், நான் கர்த்தராகிய இயேசுவின் நாமத்துக்கு எந்தச் சங்கடமும் கொண்டுவரமாட்டேன் என்றாள் அவள். சிறிது காலம் கழித்து ஒரு முஸ்லிம் இளைஞன் இருப்பதாகவும் கிறிஸ்த வனாக மாறச் சம்மதிப்பதாகவும் கூறினாள். அவள் வளைகுடாவிலிருந்து வந்தபோது அவளுக்குத் திருமணம் செய்வித்தேன். இப்போது தன் கணவன் ஆசேருடன் இரண்டு அழகான மகள்களுமாகத் தன் சொந்தக் குடும்பம் உள்ளவளாக இருக்கிறாள் ஆசேர் அர்ப்பணித்த ஒரு கிறிஸ்தவன், தன் குறிக்கோளில், சாட்சி கொடுப்பதில் தைரியமுள்ளவன். ஆகவே இது இன்னுமொரு கூடு கட்டிய கதையாகும்.

இன்னொரு கூடு கீழே துண்டு துண்டாக விழுந்து கொண்டிருந்தது. அது ஒரு கிறிஸ்தவ விதவையின் கதை, அவளுக்கு ஒரு மகன், ஒரு மகள் என இரு பிள்ளைகள்.



அந்த மகள் பல ஆண்டுகளாக ஒரு முஸ்லிம் இளைஞனை விரும்பிவந்தாள். வயதான அந்த பெண் வளர்ந்துவிட்ட தன் மகளை ஒன்றும் கேட்கமுடியவில்லை. அவளுடைய தம்பியும் யாரையும் எதிர்கொள்ள முடியாது பயந்த சுபாவமுள்ளவனாய் இருந்தான். உறவினர்கள் யாரும் இதைக் குறித்துக் கவலைப்படவில்லை. தங்கள் தவறான செய்கைகளுக்கு கைகொடுப்பதால் இது போன்ற நிலமைகளை ஜனங்கள் சில சமயம் ஆதரித்தனர். ஆனால் இது சரியல்ல என்று எனக்குத் தெரியும். இந்த உறவு தொடர்வதை நான் ஆதரிக்கத் தயாராயில்லை. நான் அந்தப் பெண்ணிடம் பேசினேன், அவள் என்னிடம் அன்புள்ள ஐயா, நான் இந்த மனிதனைக் கடந்த பதினாறு ஆண்டுகளாக நேசித்து வருகிறேன், இவனை விட்டு விட்டால் கிறிஸ்தவ சமுதாயத்தில் என்னைத் திருமணம் கொள்ள ஒருவரும் விரும்பமாட்டார்கள் என்பது எல்லாருக் கும் தெரியும், ஆகவே நான் என்ன செய்ய முடியும்? என்றாள். நான் அந்த மனிதனுடன் பேசினபோது தங்களுடைய தொடர்பை சாதகமாக எடுத்துக் கொண்டு, ஆம், அவளை நான் நேசிக்கிறேன், அவளை நான் விடப் போவது இல்லை என்றான். ஆகவே நான் அவனோடு கரடுமுரடாக இடைபடவேண்டியதாயிற்று. நீ அவளை விட்டுவிட விரும்பவில்லை என்பது நல்லதுதான், ஆனால் இந்தத் தொடர்பை நீ விட்டுவிடவேண்டும். அந்த தொடர்பு முடிவடையவேண்டும், ஏனெனில் அது தர்மசங்கடமானது, அது கர்த்தருக்கு ஒரு அவமரியாதை, இந்தப் பட்டணத்தில்

வாழும் தேவபிள்ளைகளுக்கு அவமரியாதை என்றேன். தனக்கு முஸ்லிம் முறைமையின்படி விவாகம் நடக்க விரும்பவில்லை என்று அந்தப் பெண் கூறியிருந்தாள். ஒருவாரம் கழித்து அந்த இளைஞன் என்னிடம் வந்து தான் திருமுழுக்கு பெற ஆயத்தமாயிருப்பதாகக் கூறினான். ஆகவே நான் அவனுக்கு நான் திருமுழுக்கு கொடுத்தேன். பின்பு அவனிடம் உன்னை அர்ப்பணிப்புள்ள கிறிஸ் தவனாய் மாற்ற முடியாது, ஆனால் நீ ஒழுங்காக ஆலயத் துக்கு வர ஆரம்பிக்க வேண்டும் என்று உனக்குச் சொல் லிக்கொள்ள விரும்புகிறேன் என்றேன். இப்போது அந்தத் தம்பதியருக்குச் சொந்தமாக ஒரு வீடு உள்ளது. கர்த்தர் அவர்களுக்குப் பிள்ளைகளைக் கொடுத்து ஆசீர்வதித்தி -ருக்கிறார். இந்த மனிதன் நிமித்தமாக நான் பல பிரச்ச னைகளை சந்திக்க நேரிட்டது, ஏனெனில் அவனை கிறிஸ்தவனாக மாற்றியது ரெவரண்ட் நாமான்தான் என்று மக்கள் அறிந்திருந்தனர். துணைக் காவல் கண்காணிப்பா ளர் என்னை அழைப்பித்தார்.

நான் அவரிடம், “அந்த இளைஞனையோ வேறு எவரையுமோ தங்கள் விசுவாசத்தை மாற்றவேண்டு மென்று நான் பலவந்தப் படுத்தியதில்லை; உங்களுக்கு இதை நிச்சயப்படுத்தவேண்டுமெனில் அந்த இளைஞனை நீங்கள் அழைத்து அவன் ஏன் கிறிஸ்தவனாக மாறினான் என்று கேட்டுத் தெரிந்துகொள்ளலாம் என்றேன். அவன் அழைக்கப்பட்டான். தேவகிருபையினால் அவன் தைரியமாக பதிலளித்தான், ஆகவே ஒருவரும் அவனை



ஒன்றும் சொல்லவில்லை. அதன்பின்பு அவன் வேலை பார்க்கும் துறையில் அவனுக்கு பிரச்சனைகள் ஏற்பட்டன. நகர வங்கியிலே பணிபுரிந்த அவன் பதிவியிறக்கம் செய்யப்பட்டு குறைந்த வசதிகளுள்ள ஒரு கிராம வங்கிக்கு மாற்றப்பட்டான். ஆனால் அவனும் அவன் மனைவியும் அர்ப்பணிப்புள்ள, சாட்சியுள்ள கிறிஸ்தவர்களாக விளங்குகிறபடியால் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்.

கர்த்தருக்குத் தங்களை முழுவதும் ஒப்படைப்பது மிகக் கடினம் என்று கண்டவர்கள் பலர் இருக்கின்றனர். நான் குறிப்பிடும் இந்தக் கடைசி நிகழ்வை நான் பாதி கட்டப்பட்ட கூடு என்று அழைக்கிறேன். இது 30 ஆண்டு களுக்கு முந்தைய ஒரு நிகழ்வு. பரிசுத்த யோவான் ஆலயத்தில் பொறுப்பேற்க நான் கீழ் சிந்துவிலுள்ள மிர்புர் காஸ் வந்தேன். அது கிராம சபைகள் அடங்கிய பழங்குடி கள் பெரும்பான்மையாக உள்ள பகுதியாகும். பிஷப் சந்து ரே என்னை அட்டர்னியாக நியமித்தார். பாகிஸ்தானின் வட பகுதியில் இருந்து என்னை இப்பகுதிக்குக் கொண்டு வந்தவர் உண்மையில் இவர்தான். அவர் என்னை நம்பி னார். நேசித்தார். இந்தப் பகுதிக்கு அவர் போதகராக இருந்த காலத்தில் சர்கர் என்னுமிடத்தில் ஒரு நிலத்தை வாங்கினார். அக்காலத்தில் அது ஒரு மாவட்டமாக இருக்க வில்லை, ஆனால் 1958ன் துவக்கத்தில் அது ஒரு மாவட்டத் தலைநகரமாய் மாறியது. அந்த நிலத்தை நான் பார்க்க வேண்டுமென்று கூறி அதற்காக பத்திரங்களை எனக்கு அனுப்பினார். ஆனால் வருவாய்த் துறை அலுவலகத்தில் சென்று நான் பார்த்தபோது, அந்நிலம்

அரசாங்கத்தால் எடுத்துக் கொள்ளப்பட்டுவிட்டது என்று கண்டேன். ஏனெனில் சபை வட்டாரத்திலிருந்து அந்நிலம் குறித்து எந்த நடவடிக்கையும் செய்யாமல் விட்டுவிட்டிருந் தனர். ஆகவே நகரத்தின் நடுப்பகுதியிலிருந்த அந்நிலத் துண்டு நகரத் திட்டத்தில் இணைக்கப்பட்டிருந்தது. நான் எங்கள் பக்கம் தவறு எதுவும் இல்லை என்றும் அந்த நிலம் எங்களுக்கு வேண்டும் என்றும் சொன்னேன். அந்த நிலத்திற்குப் பதிலாக நகரத்திற்கு வெளியே பெரிய நிலத்தைத் தருவதாகச் சொல்லி, அந்தப் பெரிய நிலத்தை எடுத்துக் கொள்ள விருப்பமா என்று துணை ஆணையர் கேட்டார். ஆனால் அதிகப்படியான நிலத்திற்கு நாங்கள் கட்டணம் செலுத்தவேண்டும் என்றும் சொல்லப்பட்டது. பழைய நிலத்தின் அளவுக்குச் சமமான அளவு நிலம் பதிலாகத் தரப்படும் ஆனால் அதிகப்படியான நிலத்திற்கு இப்பொழுது உள்ள விலையைத் தரவேண்டும் என்று அவர் கூறினார். நாங்கள் அபராதம் விதிக்கப்படக்கூடாது, நீங்கள் கொடுக்கும் நிலத்தை நாங்கள் எடுத்துக் கொள்ள விரும்புகிறோம். ஆனால் அதிகப்படியான இடத்திற்கு நாங்கள் பழைய இடத்தை வாங்கின விலைதான் கொடுப்போம். ஏனென்றால் எங்கள் இடத்தை அரசாங்க த்துக்கு எடுத்துகொண்டதால் தவறு உங்களுடையது தான் என்று கூறினேன். அவர்கள் சம்மதித்தனர், இப்படி அந்த நிலத்தை நாங்கள் பெற்றோம். இப்போது அங்கு அழகான ஆலயமும் போதகருடைய குடியிருப்பும் இருக்கிறது.



நான் சர்காருக்கு மீண்டும் சென்று போதகர் மன்சுர் மஸிஹ் அவர்களைச் சந்தித்தபோது, நான் இருந்தபோது சபை உயிரோட்டமுள்ளதாக இருந்தது போல என்று உணர்ந்தேன். நான் அந்த நிலத்தை காப்பாற்ற என்னால் முடிந்தது என்றாலும், ஹைதராபாத் மறைமாவட்டம் அந் நிலத்தில் ஒரு ஆலயத்தையும் போதகர் இல்லத்தையும் கட்ட முடிந்தது என்றாலும் சபை என் நாட்களில் இருந்தது போல உற்சாகமாக இல்லை. மக்கள் வெளிநாட்டு உதவியைச் சார்ந்தே இருந்தனர்.

பாகிஸ்தானிலுள்ள எமது உள்ளூர் சபைகளுக்கு இது ஒரு ஆரோக்கியமான அறிகுறியல்ல. ஏனெனில் மற்றவர்களைச் சார்ந்திருத்தல் மக்களை முடமாக்கி ஆவிக்குரிய வளர்ச்சியடைய முடியாதபடி ஆக்குகிறது. நான் இதைப் பாதி கட்டப்பட்ட கூடாகக் காண்கிறேன். ஏனெனில் உள்ளூர் சபையானது அந்த நிலத்தைப் பராமரிக்க முன்வந்திருக்கவேண்டும், தங்கள் போதகருக்கும் அதிக ஒத்துழைப்புக் கொடுத்திருக்க வேண்டும் என்று நான் நம்புகிறேன். போதகர் மன்சூர் மிகவும் விரக்தியடைந்திருந்தார், ஏனெனில் ஆலயத்துக்கு அதிகம்பேர் வருவதில்லை, வளரும் தங்கள் பிள்ளை களுக்கு நல்ல படிப்பு கொடுக்க வேண்டும் என்பதற்காக அவருடைய மனைவி வேலைக்குச் செல்லவேண்டியதாக ஆயிற்று. நான் அவர்கள் இருவர் மீது பரிதாபப் பட்டேன். ஆனால் நாம் நம்மை தேவனுடைய பராமரிப்புக்கு ஒப்புக் கொடுக்கும்போது அவர் நம்மைப் புதிதாகக் கட்டியெழுப்ப முடியும்.

## அத்தியாயம் 7

## வெள்ளை யானைகளும் கார்களும்

நான் மீண்டும் பாகிஸ்தானிலிருந்து தூரத்தில் எனது அறையிலே, வெளியே கிராமங்களுக்குப் புறப்பட்டுச் சென்று சந்திக்கவும் பிரசங்கம் பண்ணவும் முடியாத விரக்தியான நிலையை நினைத்து உட்கார்ந்திருக் கிறேன். எனக்கு போக்குவரத்து வசதி வேண்டும், பெரும் பாலும் அது எனக்குக் கிடைக்கவில்லை.

ஒரு நாட்டை ஆட்சி செய்த இராஜா ஒருவர் இருந்தார். ஒரு ஏழை அந்த அரசனின் சபைக்கு வருவது வழக்கம், இராஜாவைச் சிரிக்க வைப்பதுதான் அவனுடைய வேலை. இராஜாக்கள் தங்கள் அவைகளில் அப்படிப்பட்ட வர்களை வைத்துக் கொள்வது வழக்கம் –சிரிப்பு அவர் களுக்கு ஒரு ஊட்டச்சத்தாக அவர்கள் நீடித்து வாழ உதவி யாயிருந்தது. ஒரு நாள் இராஜா அந்த ஏழையின் நகைச் சுவைப் பேச்சுக்களை மிகவும் இரசித்து அவனுக்கு ஒரு யானையைக் கொடுத்து இனி என் அவைக்கு வரும் போதெல்லாம் இந்த யானையின் மீது ஏறிக் கொண்டு வரவேண்டும் என்றான். அவன் சரி, நன்றி ஐயா என்று சொல்லி அரசனை வணங்கி தன் வீட்டிற்குச் சென்றான். ஒன்று அல்லது இரண்டு நாட்களுக்கு தன் யானைக்குத் தீனிபோட அவனால் இயன்றது என்று நினைக்கிறேன், ஆனால் தொடர்ந்து அந்த பெரிய மிருகத்துக்கு உணவு கொடுக்க அவனால் முடியவில்லை. எனவே தான்



தொடர்ந்து அந்த யானையை வைத்திருந்தால் அது பெலவீனமாகி, அதை யாரும் வாங்கமாட்டார்கள் என்று எண்ணி, அது ஆரோக்கியமாக இருக்கும்போதே அதை விற்றுவிட்டான். அந்த யானையை விற்றதால் கிடைத்த பணத்தை வைத்துக்கொண்டு கொஞ்சகாலம் வாழ்ந்தான். பின்பு அவன் இராஜாவின் அவைக்குப் போகவேண்டிய நேரம் வந்தது. நீ என்னைப் பார்க்க வரும்போதெல்லாம் யானைமீது ஏறி வரவேண்டும் என்று அரசன் சொன்னது நினைவுக்கு வந்தது.அவனோ யானையை விற்றுவிட்டான் இப்போது அவன் என்ன செய்வான்? இந்த ஆட்கள் மிக புத்திசாலிகள், உடனடியாக ஒரு தீர்வைக் கண்டுபிடித்து விடுவார்கள். அவன் ஒரு எலியைப் பிடித்தான், அது யானையின் நிறத்தில் உள்ளதல்லவா? அந்த எலியை எடுத்துக் கொண்டு அரசவைக்குப் போனான். இராஜா அவனைப் பார்த்து நான் கொடுத்த யானையின் மேல் ஏறி வரவேண்டும் என்று நான் உனக்குச் சொல்லவில்லையா? என்றான். ஆம், எனக்கு நினைவிருக்கிறது என்றான். அதற்கு இராஜா, எங்கே அந்த யானை? என்றான். அது என்னிடம் தான் இருக்கிறது ஐயா என்றான் ஏழை. அதைக் காட்டு என்றான் இராஜா. அந்த மனிதன் எலியை எடுத்து விட்டான் அது ஓடிவிட்டது. அது யானையாக இருக்க முடியாது என்றான் அரசன். ஆம் ஐயா, யானைக்குச் சாப்பிட புல் இல்லை, எனவே அது பெலவீனமாகி இப்படி யாகிவிட்டது என்றான். யானையைக் கொடுப்பது சுலபம், ஆனால் அதற்குத் தேவையான உணவைத் தராவிட்டால்

பயனில்லை என்று அரசனுக்குப் புரியவைக்க இப்படிச் சொன்னான்.

இதற்கு ஒப்பான ஒரு அனுபவம் எனக்கு ஏற்பட்டது. நான் வியாதிபப்பட்டபோது 1965-ல் எனக்கு மாரடைப்பு ஏற்பட்டது. குவெட்டா மாகாணம் உயரமான பகுதியானதால் அங்கு நான் தங்குவது கடினம் என்பதால் என்னை தெற்கிலுள்ள சிந்துவில் என் பழைய இடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டேன். எங்கள் உடன் செவிலியரில் ஒருவரான சகோதரி ஹில்ட்கார்டு குல்டாவ் விடுப்பில் தன் வீட்டிற்குப் போனபோது, ஜெர்மனியிலுள்ள தன் நண்பர்களிடம் எனது சுகவீனம் குறித்தும், எங்கள் குடும்பத்தோடு அவர்கள் செலவிட்ட நல்ல சமயங்கள் குறித்தும் பேசினார். அதன் மூலமாக ஜெர்மன் கத்தோலிக்க நண்பர்கள் ஒரு புத்தம்புதிய வோல்க்ஸ் வேகன் காரையும், ஒரு குளிர் சாதனப் பெட்டியையும் எங்கள் குடும்பத்திற்கு அனுப்பி னார்கள். அந்தக் கார் கராச்சி துறைமுகம் வந்தடைந்தது, ஆனால் சுங்க வரி செலுத்தி அடை எடுக்க என்னிடம் பணம் இல்லை. பிஷப் சந்துரே அவர்கள் தான் தாராள மனதுடன் பணம் கொடுத்து அந்த காரை எடுக்க உதவினார். கார் கிடைத்ததற்காக நான் நன்றி செலுத்தினேன்.

ஆனால் இந்த யானைக்கு உணவூட்ட புல் இல்லை. நான் கொஞ்சம் பணம் வைத்திருந்தபோது அந்தக் காரை நான் பயன்படுத்தி கிராமங்களைச் சந்திக்க முடிந்தது. ஆனாலும் அந்த கிராமச்சாலைகளுக்கு ஏற்ற



வடிவமைப்புள்ளதாக அந்தக் கார் இல்லை. அதற்கு இயந்திரம் பின்னால் இருந்தபடியால் சாலையில் புழுதியை உறிஞ்சியது. இதனால் அது நின்றுபோனது. அதைச் சரி செய்ய எவ்வித உதவியும் ஊக்கமும் எனக்குக் கிடைக்க வில்லை. மறைமாவட்ட நிர்வாகம் அந்த காருக்குச் சுங்க வரி செலுத்தியதால் அது மறைமாவட்டத்துக்குச் சொந்தமானது என்று சொல்லி அந்த காரை விற்றுவிட்டனர். விற்றதால் கிடைத்த பணம் யாருக்கும் போய்ச் சேர்ந்தது என்று எனக்குத் தெரியவில்லை. இந்த யானை பிழைப்பதற்கு புல் கொண்டுவராதபடியால்தான் இதெல்லாம் சம்பவித்தது.

அதே விதமான யானை குறித்த இன்னொரு கதையை நான் சொல்லட்டும். 1986களின் நடுப்பகுதியில் என்னுடைய மறைமாவட்ட பிஷப் நான் ஒரு பழைய சுசூகி காரைப் பயன்படுத்த அனுமதித்தார். அந்த ஜீப் ஒரு வெளி நாட்டு மிஷனரிப் பெண்மணி பயன்படுத்தியதாகும். அதை எடுத்துக் கொண்டு கிராமங்களுக்குச் செல்வது எனக்கு விருப்பமாயிருந்தது. தேவனுடைய ஜனங்களுக்காக அந்த ஜீப்பைப் பயன்படுத்துவது மிக வசதியாயிருந்தது. நோயுற்றவர்களுக்கும் தேவையுள்ளவர்களுக்கும் உதவ முடிந்தது. ஆனால் அதைப் பராமரிக்க நிதி ஏதுமில்லாத நிலையில் டயர்கள் தேய்ந்து போய்விட்டன, நான் எனது சபை அதிகாரிகளிடம் டயர்களை மாற்றித் தரும்படி கேட்ட போது எவ்வித பதிலும் இல்லை. வண்டியிலிருந்து கரும்புகை வர ஆரம்பித்ததால் இயந்திரத்தை சீர்படுத்த

வேண்டுமென மீண்டும் அதிகாரிகளிடம் கேட்டபோது உறுதியான எந்த பதிலும் இப்போதும் கிடைக்கவில்லை. நான் என்னிடத்தில் இருந்த கொஞ்ச பணத்தையும் குரு சேகரத்திலிருந்து சிறிது பணத்தையும் பயன் படுத்த நான் முடிவு செய்தேன். என் குருசேகர மக்கள் அந்த ஜீப் பயன்பாட்டிலிருப்பதைக் காண ஆவலாயிருந் தனர். என்னால் முடிந்த வரைக்கும் அந்தக் காரை ஓடும் நிலையில் வைத்துக் கொள்ள முயற்சித்தேன். ஆனாலும் நான் விட்டுவிடவேண்டிய இன்னொரு வெள்ளை யானை யாக அது மாறிவிட்டது. அதற்குப் பதிலாக என் மக்களுக் குக் காண்பிக்கவோ, அது சிறியதாக மாறிவிட்டது என்று என்னுடைய இராஜாவுக்குக் காண்பிக்கவோ என்னிடத்தில் வேறொன்றும் இல்லை. இதனால் எனக்கு தனிப்பட்ட வருத்தம் ஏதுமில்லை, ஆனால் இவையாவும் எனக்கு ஒரு ஆழமான அக ஆய்வையும் வருத்தத்தையும் ஏற்படுத்தி யுள்ளது.

ஒரு தலைமுறைக்கு முன்பு ஒரு கழுதையைச் சொந்தமாக வைத்திருப்பதற்கே வசதியில்லாமல் ஏழை களாயிருந்த சில சபைத் தலைவர்கள் இன்று புத்தம் புதிய, இறக்குமதி செய்யப்பட்ட பளபளப்பான ஜப்பானியக் ஜீப்களை தங்கள் வீடுகளின் முன நிறுத்தி வைக்கும் நிலை யில் உள்ளனர். நான்கு சக்கர இயக்கமுள்ள வண்டிகளை தங்கள் சொந்த பயன்பாடுகளுக்கு எடுத்துச் செல்லும் சபைத் தலைவர்கள் தங்கள் ஏழைச் சகோதரர்களைப் புறக்கணித்து விட்டனர் என்பது எனக்கு துக்கமாகத் தெரிகிறது. அவர்களும் அதே ஆண்டவரையும் எஜமானை



யும் சேவிக்கப் பிரயாசப்பட்டவர்கள்தானே. அவர்களுக்கு மருத்துவ உதவித்தொகைகளும் மருத்துவமனையில் பராமரிப்பும், அவர்களுடைய பிள்ளைகள் நல்ல படிப்பறிவு பெறுவதற்கான ஊக்கத் தொகைகளும் மறுக்கப்பட்டன.

என் வாழ்வில் அநேகம் தடைகளும், அதைரியங் களும் இருந்தபடியால் மக்கள் சில நேரங்களில் என்னிடம் இஸ்லாத்தை விட்டு கிறிஸ்துவிடம் திரும்பினதால் பிரயோஜனமுண்டோ?

அதன் மூலமாக நீங்கள் என்ன அடைந்தீர்கள்? என்று கேட்டனர். என்னுடைய முஸ்லிம் உறவினர்கள் அவ்வாறு கேட்டுள்ளனர். நல்லது, சில தெளிவான பதில் கள் என்னிடம் உள்ளன. கர்த்தர் என்னை அழைத்தது நான் எனக்காகப் பணத்தைக் குவித்து வைக்கும்படியாக அல்ல. தேவ ஜனங்களுக்காக கெஞ்சுகிறவனாக மாறும் படியாகவே. என் வாழ்க்கை முழுவதும் இதைச் செய்யவே நாட்டமுடையவனாயிருந்து வந்திருக்கிறேன். என்னுடைய தனிப்பட்ட தேவைகளையோ அல்லது குடும்பத் தேவை களையோ நான் தெரியப்படுத்துவது எனக்குக் கடினமான ஒரு காரியம். ஆனால், மற்றவர்களுடைய தேவைகளுக் காக உலக முழுவதுமுள்ள என் நண்பர்களிடம் நான் எப் போதும் தைரியமாகக் கேட்பேன். தேவ ஜனங்களின் வாழ்க்கை முறை இதுவாகவே இருந்து வருகிறது. பவுல் அப்போஸ்தலனும் கூட பிலிப்பியருக்கு எழுதின நிருபத்தில் கூறுகிறார்: உங்களுக்கு உதவும்படியாக நான் மற்றவர்களி டத்தில் வாங்கினேன். ஆண்டவர் என்னை எனக்காக

அல்ல மற்றவர்களுக்காகவே இந்தப் பொறுப்பில் வைத்திருக்கிறார். மற்றவர்களுக்கு உதவும்படியாகப் போதுமான கிருபையைக் கொடுத்திருக்கிறார். கடந்த சில வருடங்களில் சில சபைத் தலைவர்கள் பாகிஸ்தானில் தங்கள் சபைக்கு வரும் நன்கொடைளை தங்கள் குடும்பங் களைக் கட்டுவதற்காகப் பயன்படுத்தத் தூண்டப்படுகின்றனர் என்பதை நான் சொல்வது எனக்குச் சிரமமாயிருக் கிறது. ஆனால் நான் என் வளங்களைக் கொண்டு மற்ற வர்களைக் கட்டியெழுப்பியிருக்கிறேன் என்று மெய்யாக என்னால் சொல்ல முடியும். மற்றவர்கள் சார்பாக நான் ஒரு பிச்சைக்காரனாக மாறவேண்டியிருந்தது என்னுடைய தனிப்பட்ட மற்றும் குடும்பப் பயன்பாட்டுக்கு ஒன்றுமே மிஞ்சாது. நான் தோல்வியடைகிறவனாக மற்றவர்களுக்கும் என் குடும்பத்தாருக்கும் தோற்றமளித்திருக்கக் கூடும்.

சில நேரங்களில் எனக்கு மரியாதை மற்றும் கௌரவம் இருந்திருந்தால் அதையும் இழக்க வேண்டியிருந்தது. ஆனால் ஆண்டவர் எங்களையும் எங்கள் பிள்ளைகளையும் ஒரு போதும் கைவிடவில்லை. எனக்கு வசதிகள் இல்லாதபடியால் என் மகன் சாமுவேலை வெளிநாட்டுக்கு அனுப்ப முடியாமல் இருந்தது நினைவுகள் வருகிறது. எங்கள் ஏழ்மை நிலையை நினைத்து சாமுவேலே பலமுறை கலங்கிப்போனதுண்டு. அவன் என்னிடம்: அப்பா, நீங்கள் எனக்கு என்ன செய்திருக்கிறீர்கள்? என்று கேட்பான். நான் உணர்வற்று அதற்குப் பதில் ஏதும் சொல்ல முடியாதவனாய் இருப்பேன்.



எனது குடும்பத்திற்கு தான் எதையும் செய்ய முடியவில்லை புனித யோவான் 14:1 கூறுகிறது: உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக. தேவனிடத்தில் விசுவாசமாய் இருங்கள்; என்னிடத்திலும் விசுவாசமாய் இருங்கள். நான் அவரிடத்தில் வந்தது முதல் இதைத்தான் நான் செய்து வந்திருக்கிறேன். பிற்பாடு 1986-ல் கர்த்தருடைய மற்ற ஆசீர்வாதங்களுடன், சாமுவேல் தென்கொரியாவில் சியோல் பட்டணத்தில் 3 வருட இறையியல் முதுநிலைப் பட்டம் படிக்க ஏற்பாடாயிற்று. இயேசு என்னிடத்திலும் விசுவாசமாய் இருங்கள் என்று சொன்னதின் அர்த்தத்தை சாமுவேல் புரிந்து கொள்ள இது உதவியது.

எங்கள் மகள் குல்டா மருத்துவக் கல்லூரியில் சேர்க்கப்பட்டதும் இதைப் போன்றே எங்களைக் களிகூர வைத்த ஒரு நிகழ்வாகும். ஆரம்ப நேர்காணலுக்குப் பிறகு பல மாதங்கள் அவளுக்கு எவ்விதத் தகவலுமில்லை. பாகிஸ்தானில் உயர் மருத்துவ நிறுவனங்களில் தங்கள் பிள்ளைகளைச் சேர்க்க மக்கள் தங்கள் செல்வாக்கையும் பதவியையும் பயன்படுத்துவர். எங்களுக்கோ தேவனை நம்புவதைத் தவிர வேறு வசதிகள் இல்லை. அந்தப் படிப்பு துவங்குவதற்குச் சற்றுமுன் அந்த மருத்துவப் பள்ளியில் இருந்து ஒரு கடிதம் வந்தது, மருத்துவப் பள்ளியில் ஒரு இடம் தரப்படுவதற்கு குல்டா சம்மதம் தெரிவித்துப் பதில் அளிக்காதது ஏன் என்று அதில் கேட்டிருந்தது. இடமளிப்பு குறித்து உண்மையில் எங்களுக்கு எதுவும் தெரியாது.

ஒரு வேளை அதுகுறித்த கடிதம் அஞ்சல் சேவையில் தொலைந்து போயிருக்கக்கூடும். தேவன் அவளுக்கும் மருத்துவப் படிப்பில் இடம் கிடைக்கவும் அதை அவள் முழுவதுமாக முடிக்கவும் தேவன் உதவி செய்தார்.

கர்த்தரைப் பின்பற்றுவதன் மூலம் நான் பெற்றுக் கொண்டது இதுதான். எனக்குக் கிடைத்த பிரதிபலன் இதுவே. இறைவன் என்னைத் தெரிந்துகொண்டு இயேசு கிறிஸ்துவை எனக்கு வெளிப்படுத்தியமைக்காக அவருக்கு நன்றிசெலுத்துகிறேன். இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றும் சிலாக்கியத்தை நான் பெற்றதற்காக அவருக்கு நன்றி கூறுகிறேன்.

## அத்தியாயம் 8

## இது தான் எனது கூடு

நான் பாகிஸ்தானிலுள்ள அந்தக் கூடுகள் யாவற் றையும் நினைத்துப் பார்த்து, இப்பொழுது ஆயிரமாவது முறையாக என்னுடைய சொந்தக் கூட்டை நினைத்துப் பார்க்கிறேன். என்னுடைய குடும்பத்திற்காக நான் அவரை ஸ்தோத்திரிக்கும்போது துக்கத்தின் கண்ணீரும் தேவனுக் கான என் நன்றியறிதலும் ஒன்றாய்க் கலக்கின்றன.

எமது குழந்தைகள் நாங்கள் அவரிடம் ஏறெடுத்த எமது ஜெபத்திற்கு நேரடியான் பதிலாகப் பிறந்தன. 1959, டிசம்பர் 19ம் தேதி நான் போதகராக நியமனம் செய்யப் படுவதற்கு முன் டெய்ஸியும் நானும் ஜெபித்தோம்: எமது ஆண்டவரே, நாங்கள் தனிமையானவர்கள், எங்கள்



வீட்டில் அழகையும் உற்சாகத்தையும் கொண்டு வரும்படி எங்களுக்கு ஒரு மகன் வேண்டும். கர்த்தர் பதில் தந்தார், டெய்ஸி கர்ப்பந்தரித்தாள். இரண்டு மாதங்களுக்குப் பின் நாங்கள் மீண்டும் மிர்பூர்காசுக்கு மாற்றப்பட்டோம். அங்கு பரிசுத்த தெரசா மருத்துவமனையில் சிறிது காலம் டெய்ஸி கற்பித்து வந்தாள். குழந்தைப் பேறுக்கு முன்பு டெய்ஸி அனுமதிக்கப்பட்டிருந்த பிரிவுக்கு சலார் அஜிஸ் என்னும் குழந்தை நல மருத்துவர் வந்திருந்தார். அப்போது டெய்ஸி நீலநிற கம்பளி நூலில் ஆண்குழந்தைக்கான உடையைப் பின்னிக் கொண்டிருந்தாள். அந்த மருத்துவர் அதைப் பார்த்ததும் உங்களுக்கு ஆண் குழந்தை பிறக்கும் என்று நம்பியிருக்கிறீர்களா? என்று கேட்டார். ஓ ஆமாம் என்றாள் டெய்ஸி. அவர் "நீங்கள் எப்படி அவ்வளவு நிச்சயமாய்க் கூறுகிறீர்கள்?" என்றார். நாங்கள் அவனுக்காக ஜெபித்தி -ருக்கிறோம், அவனுக்கு சாமுவேல் நாமான் என்று பெயர் வைத்திருக்கிறோம் என்றாள் டெய்ஸி. அந்த மருத்துவர் டெய்ஸி குழந்தையைப் பெற்றபோது அங்கிருந்தார். சாமுவேலைக் கையில் எடுத்துக்கொண்டு அங்குச் சுற்றி நடந்து, "அவர்களுடைய விசுவாசம் அற்புதமானது: அவர்களுடைய கடவுள் அற்புதமானவர். தங்கள் ஜெபத்தைக் குறித்து அவர்கள் அவ்வளவு நம்பிக்கையோடிருந்தனர்" என்று அந்த முஸ்லிம் மருத்துவர் எல்லாரிடமும் கூறினார்.

கர்த்தருடைய ஊழியத்திற்காக நாங்கள் சாமு வேலை பிரதிஷ்டை செய்தோம், அவனுக்கு சாமுவேல்

எஸ்றா நாமான் என்று பெயரிட்டோம். பிள்ளைகளுக்குப் பெயரிடுவதில் குறிப்பான அர்த்தம் உள்ளது. இக் குழந்தை க்கு சாமுவேல் என்றும் பெயருக்குப் பின்பு எஸ்றா என்று வைத்தது, அவன் தேவ மக்களை அவர்களுடைய சொந்த நாட்டிற்கு வழி நடத்துபவன் அதாவது கர்த்தருக்கென்று மக்களை ஆதாயம் செய்து அவர்களுடைய சேரிடத்திற்கு அவர்களை வழி நடத்துவதாகும்.

ஒரு மகள் எமக்கு வேண்டுமென்றும் நாங்கள் ஜெபித்தோம், ஏனெனில் ஒரு மகள் இல்லாமல் எமது வீடு முழுமை பெறாது என்று உணர்ந்தோம். கூடுதல் வசீகரமும் அழகும் இல்லாமலிருக்கும். ஒரு பெண் குழந்தை எங்களுக்குப் பிறந்தது. அதற்கு குல்டா தபித்தா என்று பெயரிட்டோம். முதலாவது பெயரின் அர்த்தம், அவள் தீர்க்கதரிசனம் உரைப்பாள், தேவனுடைய செய்தியை மக்களுக்குக் கொண்டு செல்வாள் என்பதே. தபித்தா என்பதற்கு அவள் தன் திறமைகள் மூலம் தேவை யுள்ளோருக்குச் சேவை செய்வாள். தேவனுடைய ஈவுகளில் தனது பங்கை தேவனுடைய மக்களுடன் பகிர்ந்து கொள்வாள் என்பது அர்த்தம்.

பின்பு நாங்கள், ஆண்டவரே நன்றி, இனி மேலும் குழந்தைகள் வேண்டாம் என்றோம். ஆனால் ஆண்டவர் எப்போதும் நாம் கேட்பதற்கு அதிகமாகச் செய்கிறார். அவர் சொன்னார்: ஏன்? நான் எப்போதுமே ஜனங்கள் என்னிடம் கேட்பதற்கு அதிகமாகச் செய்திருக்கிறேன், நான் உங்களுக்கு இன்னொரு மகனைக் கொடுக்கப்



போகிறேன் என்றார். ஆகவே ஓபேத் பிறந்து எங்கள் குடும்பத்தில் சேர்க்கப்பட்டான். அவனுக்கு ஓபேத் நயோர் என்று நம்முடைய ஆண்டவரின் முற்பிதாக்களில் ஒருவரைக் குறிக்கும்படியும், நயோர் என்று பிரகாசிக்கும் பொருள், ஒரு நட்சத்திரம், வெளிச்சத்தின், வழிகாட்டுதலின் இடம் என்று அர்த்தம் கொடுக்கும்படியும் பெயர் சூட்டினோம். இன்னொரு பெயரும் கொடுக்கப்பட்டது. அவன் குவெட்டாவிலுள்ள மிஷன் மருத்துவமனையில் பிறந்தான். பிரசவத்தைப் பார்த்த ஆங்கில செவிலியர் ஜூலி டாபெர் அவனுக்கு பாம்பி என்று பெயரிட்டார். அவனுடைய எடை பிறக்கும்போது பத்து பவுண்டுகள் இருந்ததால் அதுமுதல் பாம்பி அழைக்கப்பட்டான்.

அவன் பிறப்பின் சூழ்நிலைகள் எனக்கு மறக்க முடியாதவை. நாங்கள் 1963 மே மாதம் தான் குவெட்டாவுக்கு வந்தோம். நான்கு மாதங்களுக்கு முன்பு ஒரு கிறிஸ்தவ மருத்துவமனையில் ஜெபாலய குருவாக இருந்தேன். அந்த மருத்துவமனை டாக்டர் ரோன்னி ஹாலேண்ட் மற்றும் டாக்டர் ஹென்றி மார்டின் லூதர் ஆகியோரால் சேர்ந்து நிர்வகிக்கப்படுகிறது. டெய்ஸி பெண்கள் பிரிவில் செவிலிய மாணவிகளுக்குக் கற்பித்து வந்தாள். குவெட்டாவில் வாழ்க்கைச் செலவு அதிகமாத லால் எங்களுக்கு அதிக வருமானம் தேவைப்பட்டது. நாங்கள் வாழச் செலவு குறைவாயுள்ள (அதிக வெப்பமான) சமவெளிப் பகுதிகளில் வாழ்ந்து பழகி விட்டோம். டெய்ஸிக்கு செப்டம்பர் 4ந் தேதி குழந்தை

பிறக்க வேண்டும், ஆனால் என்னுடைய சகோதரரும் போதகருமான ஜலால் மஸிஹ் என்னை அழைத்திருந் தார். அவர் சுக்கூரிலிருந்து 15 மைல் தொலைவில் உள்ள கைர்பூரில் அப்பொழுது இருந்தார். நான் செப்டம்பர் 5ம் தேதி காலையில் அவரிடத்தில் இருக்க வேண்டும், 4ம் தேதி காலையிலேயே டெய்ஸிக்கு பிரசவ வலி ஆரம்பித்து விட்டது. மருத்துவமனைக்கு அவள் கொண்டு செல்லப் பட்டாள், மூன்று மணி நேரம் கழித்து குழந்தை பிறந்தது. பிற்பகல் மூன்று மணிக்கு நான் மருத்துவமனை சென்றேன், இருவரையும் பார்த்தேன் டெய்ஸி விழித்துக் கொண்டு உற்சாகமாய் இருந்தாள்.

அவள் என்னிடம், நீங்கள் கன்வென்ஷனில் பேசுவதற்காக கைர்பூர் செல்ல வில்லையா? நான் எப்படி போக முடியும்? நான் சாமுவேலையும் குல்டாவையும் கவனித்துக் கொள்ள வேண்டும் என்றேன். உடனே அவள், முதன் முதலாக எனக்கு சுலபமாகப் பிரசவமாயிருக்கிறது. எனவே உங்களை விடுதலையாய் விடவே தேவன் எனக்கு உதவி செய்திருக்கிறார், எனவே நீங்கள் பிள்ளைகளை ருமல் ஷாக்களிடம் விட்டு புறப்பட்டுப் போங்கள் என்றாள். இயேசு என்னுடைய வாழ்வில் முதன்முதலாக வந்த பிறகு முதலாவது நான் கண்ட ஊழியர் இனாயத் ருமல் ஷா. குவெட்டாவில் அவரை நான் என் தகப்பனாகப் பாவித்தேன், எனது பிள்ளைகள் அவரைத் தாத்தா என்று அழைத்தனர். டெய்ஸி என்னிடம், நீங்கள் ஏன் பிள்ளைகளை



தாத்தாவின் வீட்டில் விட்டு, அவர்கள் மிகவும் சிறியவர் களாய் இருப்பதால் அவர்களைப் பார்த்துக்கொள்ள கடினமாக இருக்கிறது என்று சொல்லி விட்டு புறப்பட்டுப் போகக்கூடாது? என்றாள். நான் அப்படியே செய்தேன். நான் கைர்பூர் சென்றடைந்தேன். ஆனால் பெரிய ருமல் ஷா ஏற்கனவே ஜலாலிடம் நாமான் வரமாட்டார் என்று அறிவித்திருந்தார். குறுகிய சமயத்தில் வேறொரு பிரசங்கி கிடைப்பது கடினமான காரியம் என்பதால் ஜலால் ஏமாற்ற மடைந்தார். ஆனால் அவருடைய மனைவி சகோதரி குர்ஷிட் அவரிடம், கவலைப்படாதீர்கள், அவர் வருவார், அவர் நம்பகமானவர், வாக்களித்ததை எப்போதுமே அவர் நிறைவேற்றியிருக்கிறார் என்று சொல்லிக் கொண்டே இருந்தார். கடைசியில் நான் சென்றடைந்ததும் சகோதரர் ஜலால் நிம்மதியும் மகிழ்ச்சியும் அடைந்தார்.

அந்தக் கன்வென்ஷனில் பேசப்பட வேண்டிய தலைப்பு பழைய காரியங்கள் ஆண்டவர் இயேசுவுக்குள் புதியவைகளாய் மாறியுள்ளன என்பதாகும். அந்தச் சபையாரைப் பார்த்து, அவர்கள் இன்னும் அவர்கள் வாழ்க்கையை மாற்றமுடியாத, அவர்களைப் புதிய மனிதர்களாக மாற்றமுடியாத, அவர்கள் இருதயத்திற்குள் சென்றடைய முடியாத ஒரு கடவுளை, ஒரு பழைய கடவுளையே வைத்திருந்தால், அந்தக் கடவுளை மாற்றி விடுவது நல்லது என்று சொல்ல முடிந்தது. என்னுடைய அனுபவத் திலிருந்து மக்களுக்குச் சொல்வது எனது வழக்க மாயிருந்தது, எனவே எனது

மூத்த முஸ்லிம் சகோதரரிடமிருந்து வந்த ஒரு சாட்சியைச் சொன்னேன். அது என்ன வெனில்; என்னை தமது பக்கத்தில் உட்காரவைத்து அவர் கூறினார். என் அன்புள்ள சகோதரனே, உங்கள் மதத்தையும் விசுவாசத்தையும் நாங்கள் புரிந்துகொள்ள முடிகிறதில்லை, ஆனால் நீர் ஒரு புதிய மனிதனாக மாறி யிருப்பதை மட்டும் எங்களால் தெளிவாகக் காண முடிகிறது.

இந்தச் சாட்சியை அந்த கிறிஸ்தவ நண்பர்களுடன் பகிர்ந்து கொண்டபோது கர்த்தர் கிரியை செய்தார், அநேக ஜீவியங்கள் தொடப்பட்டு புதிதாக்கப்பட்டன. நான் மகிழ்ச்சி யோடு திரும்பிவந்தேன், எங்கள் குழந்தைகளின் தாத்தா பெரிய ருமல் ஷாவிடம் திட்டு வாங்க ஆயத்தமாய் வந்தேன். அவர் திட்டினார், ஆனால் அது வழக்கமான ஒன்றுதான் அதை நான் பொருட்படுத்தவில்லை. சிந்து விலிருக்கும் என் நண்பர்களுடன் என் சந்தோஷத்தைப் பகிர்ந்து கொள்வது அற்புதமாயிருந்தது.

இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் மிர்புர்காஸுக்கு மாற்றப்பட்டேன். 1965-ன் துவக்கத்தில் கடுமையான மாரடைப்பு ஏற்பட்டது. இன்னும் போதிய பெலன் சரீரத்திலில்லை. மிர்புர்காசிலுள்ள கான்வென்ட் பள்ளியில் பையன்கள் சேர்க்கப்படுவதில்லை என்று அறிந்தோம். ஆகவே சாமுவேலையும் பாம்பியையும் குவெட்டாவுக்கே திரும்ப அனுப்பி அங்குள்ள ஒரு கிறிஸ்தவ விடுதியில் தங்கிப்படிக்க ஏற்பாடு செய்யப்பட்டது.



அந்த விடுதியை கேய்த் மற்றும் ஜான் மிட்செல் ஆகியோர் கவனித்து வந்தனர். பாம்பி கான்வென்ட் பள்ளிக்குச் செல்ல ஆரம்பித்தது எங்கள் நினைவுக்கு வருகிறது. அவன் ஏழு வயதாயிருக்கும்போது அரை குறை ஆங்கிலத்தில் என் ஆரோக்கியம் குறைந்து போய்விட்டது என்று கடிதம் எழுதியிருந்தான். அதை நாங்கள் வாசித்த போது மிகவும் கவலைப்பட்டோம், டெய்ஸி அழ ஆரம்பித்தாள். அவள், என் மகன்களை வெளியே அனுப்பிவிட்டீர்கள், இப்போது இந்த சின்ன பையன் சுகவீனமாகி விட்டான், எனவே நீங்கள் தீவிரமாய்ச் சென்று அவனைப் பாருங்கள் என்றாள். ஆகவே நான் மிர்புர்கா ஸிலிருந்து அவ்வளவு தூரம் பிரயாணம் செய்து குவெட்டா வுக்குப் போனேன், அங்கே விளையாட்டு மைதானத்தில் அவன் விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்டேன். என்னைக் கண்டவுடன் ஓடிவந்தான், நான் உனக்கு என்ன ஆயிற்று பாம்பி? என்று கேட்டேன். அவன் ஒன்றுமில்லை அப்பா என்றான். நீ சுகவீனமாகி விட்டதாக கடிதம் எழுதியிருந்தாயே என்றேன். இல்லை அப்பா, என் பற்கள் விழுந்து விட்டன என்றுதான் கடிதத்தில் எழுதியிருந்தேன் என்றான். அது ஒரு பெரிய நகைச்சுவை. ஆனால், செலவு அதிகம். எனெனில், எனது சுகவீனம் மற்றும் பெலவீனம் நிமித்தம் இவ்வளவு தூரம் மிர்புர்காசிலிருந்து குவெட்டாவுக்குப் பிரயாணம் செய்வது கடினமான காரியம், பாம்பி எனக்கு மிகவும் பிரியமானவனானதால் நான் அதை மேற்கொண்டேன்.

சிறிது காலம் கழித்து அந்த விடுதி மூடப்படுவதால் எனது பிள்ளைகளைத் திரும்ப அழைத்துக் கொள்ள வேண்டுமெனத் தகவல் வந்தது. அப்பொழுது மிகவும் சுகவீனமாயிருந்தேன். பழுதடைந்த வலது சிறுநீரகத்தை அகற்ற அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டு முடிந்திருந்தது. தொடர்ந்து வலி ஏற்பட்டுக் கொண்டே இருந்ததால் வலி நிவாரண மருந்துகளைப் பயன்படுத்திக் கொண்டிருந்தேன். என்னால் கிராமங்களுக்குச் செல்லமுடியாதபடி ஆகிவிட்டேன், ஒரு சிறுநீரகம் மட்டும் உள்ளவனாய் ஆனேன். அது ஒருமாதம் கழித்து தொந்தரவு கொடுக்க ஆரம்பித்தது. ஆகவே மருத்துவ வசதிகள் அருகிலேயே இருக்கக் கூடிய ஒரு இடத்துக்கு நாங்கள் போகவேண்டும். என்று தீர்மானிக்கப்பட்டது, என் பிள்ளைகளின் படிப்பும் ஒரு முக்கிய விஷயமாய் அமைந்தது. நாங்கள் 1973 ஜுலை மாதம் சிந்து மாகாணத்திலிருக்கும் சுக்கூருக்கு மாற்றப்பட்டோம்.

பாகிஸ்தானில் படிப்பு என்பது மிக செலவு மிக்கது, எனவே டெய்ஸி வேலைக்குப் போக வேண்டியதாயிற்று. பொது மருத்துவமனையில் செவிலியர் ஆசிரியையாக அவள் பொறுப்பேற்றாள். நான் வியாதிப்பட்டு பலமுறை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டேன். எனக்கு வலிநிவாரண மருந்துகள் அதிகம் தேவைப்பட்டன, அவை அதிக விலையுள்ளவையாருந்தன, எனவே சமாளிக்கச் சிரமமாயிருந்தது. எங்கள் பிள்ளைகளின் பள்ளிக் கட்டணங்களைச் செலுத்துவதற்காகச் சில நேரங்களில்



எங்கள் வீட்டுப் பொருட்களில் சிலவற்றைக் கூட விற்க வேண்டியதாயிற்று. ஆனால் அவர்களுக்கு நல்ல படிப்பைத் தர எங்களால் முடிந்தது. சாமுவேல் இளங் கலையில் பட்டம் பெற்றபோது சிறிது காலம் கேம்பஸ் குருசேட் நிறுவனத்தில் வேலை கிடைத்தது. அதனால் தன் தங்கையின் மருத்துவ படிப்புக்கு அவன் பண உதவி செய்ய முடிந்தது. சுக்கூரில் இறுதி ஆண்டுகளில் டெய்ஸி பொது மருத்துவமனை வேலையை இழந்து, உடனடியாக தனியார் மருத்துவமனை ஒன்றில் வேலை கிடைக்கப் பெற்றார். அந்த வேலையும் இல்லாமலானபோது எங்களது பிஷப் எமது மறை மாவட்டம் முழுவதிலும் பெண்கள் ஜெபக் குழுக்களை நடத்தும் பொறுப்பை டெய்ஸிக்கு வழங்க அழைப்பு விடுத்தார். பல ஆண்டுகளுக்கு டெய்ஸி சிந்து மாகாணத்தின் ஒரு முனை துவங்கி மறுமுனை மட்டும் பிரயாணம் செய்து மறைமாவட்டத்தின் தொலைதூரப் பகுதிகளிலும் சபைகளில் சிறு ஜெபக் குழுக்களை நியமித்தார். குடும்பங்களை நாம் விசுவாசத்தில் கட்டியெழுப்பவேண்டும். குடும்பங்களில் பெற்றோர் வீட்டிலிருந்து வெளியே தங்களைச் சுற்றியுள்ள முஸ்லிம் உலகத்தைச் சந்திக்கச் செல்லுமுன் தங்கள் பிள்ளைகளோடு சேர்ந்து ஜெபிக்க ஒரு குடும்ப பலிபீடம் இருக்க வேண்டும். வெளியே பாடபோதனைகள் மற்றும் ஊடகங்கள் மூலமாக இஸ்லாம் அவர்களுக்குள் செலுத்தப்படுகிறது. டெய்ஸி பெண்கள் நடுவே செய்த ஊழியம் பலனுள்ளதாயிருந்தது, அதற்காக தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம்.

கர்த்தர் எனது எழுத்துப் பணியையும் கூட பயன்படுத்தியிருக்கிறார். மிர்புர்காசில் எனக்கு முதன் முறை இருதயத் தாக்குதல் ஏற்பட்ட பிறகு நான் எழுத்துப் பணி துவங்க என்னை அவர் வழிநடத்தினார். சுக்கூரில் என் சாட்சியை நான் வெளியிட முடிந்தது. பண வசதிகள் கிடைத்ததற்கேற்ப மற்ற புத்தகங்களும் தொடர்ந்து வெளியாகின: ஒரு இளம் கிறிஸ்தவ செவிலியர் குறித்த புதினம், அன்பின் குறியீடு என்னும் பெயரில் பத்து கற்பனை குறித்த புத்தகம், கிறிஸ்தவ நீதிநெறி குறித்த கிறிஸ்தவ வாழ்வின் இரகசியங்கள் என்ற புத்தகம் ஆகியவை அவை. மற்ற புத்தகங்களும் தொடர்ந்து வெளியாகின. அவைகளில் பல வானொலி நாடகங்களும் அடங்கும், கிறிஸ்துமஸ் மற்றும் ஈஸ்டரின் போது அவை ஒலிபரப்பப்பட்டன.

எமது கிறிஸ்தவ யாத்திரையின் நாற்பதாம் ஆண்டு நிறைவான 1990ன் துவக்கத்திலே சுக்கூரில் எமது ஊழியம் முடிவுக்கு வந்தது.

## அத்தியாயம் 9

## இதுதான் என் மகன்

எங்கள் அன்புள்ள மகன், எமது இளைய மகன் சுக்கூரில் நாங்கள் ஊழியம் செய்த கடைசி வருடங்களில் எமக்குப் பெரும் பெலனுள்ள ஒரு கோபுரமாக எமக்கு விளங்கினான். தன்னுடைய வாலிப வயதுகளில் சுற்றித் திரிந்து நேரத்தை வீணடித்ததாக அவன்தானே ஒப்புக் கொண்டிருக்கிறான். அவனுடைய தாயார் வீட்டுக்கு



வெளியில் வேலை செய்ய வேண்டியிருந்தாலும் நான் அடிக்கடி நோயுற்றதாலும் அவனுக்குச் சிரமமாயிருந்தது. ஆனால் அவனுடைய அண்ணனின் ஜெபங்கள் மற்றும் உற்சாகப்படுத்துதல் மூலமாக, அவன்தான் தன் சமயத்தை வீணடித்துவந்ததை உணர்ந்து கடினமாக உழைக்க ஆரம்பித்தான். தன்னுடைய கல்லூரியில் இன்டர் தேர்வுகளில் தேர்ச்சிபெற்று இளம் அறிவியல் பட்டமும் பெற்றான். அதன்பின்பு பாகிஸ்தான் தொடர் வண்டித்துறையில் உயர்நிலைக் கணக்கு அதிகாரியாகப் பணியமர்த்தப்பட்டான். பின்பு முதுநிலைப் பொருளாதார பட்டமும், இளநிலை சட்டப்பட்டமும், இறுதியில் சர்வதேச உறவுகளில் முதுநிலைப் பட்டமும் பெற்றான்.

ஒரு அழகான வாலிபனாக, நல்ல உடற்பயிற்சி யாளனாக, திறமையுள்ள ஹாக்கி மற்றும் ஸ்குவாஷ் வீரனாக உருவானான். நல்ல நகைச்சுவை உணர்வு அவனுக்கு இருந்தது. மற்றவர்களுக்கு அலுப்புத் தோன் றாத அளவுக்கு நாள் முழுவதும் வேடிக்கை வார்த்தை களைப் பேசிக்கொண்டேயிருப்பான்.

அவன்வளர்ந்து வரவும் இயேசு கிறிஸ்துவிடம் திரும்ப அவன் தீர்மானம் செய்யவும் சரியாயிருந்தது. இது 1985ன் துவக்கத்தில் நிகழ்ந்தது. குடும்ப பின்னணியும் சூழ்நிலையும் பாம்பி உடன் தானே சாட்சி கொடுக்கும்படி செய்தது. தனது விசுவாசத்தின் தாற்பரியத்தை உணர்ந்த பாம்பி கரிசனை மற்றும் நடத்தை ஆகியவற்றில் கர்த்தருடைய தரம் என்ன

என்பதை அதிகமாக அறிந்து கொண்டான். தனது சொந்த ஒழுக்க நெறிக்காகவும், தனது குடும்பம் மற்றும் சமுதாயத்தின் ஒழுக்க நெறிக்காகவும் தூய்மைக்காகவும் மிகுந்த கரிசனையை வளர்த்துக் கொண்டான்.

சமுதாயத்திலுள்ள தனிப்பட்ட ஒவ்வொருவருக்காகவும் கரிசனை கொண்டான். ஒரு நாள் இரவு எனது குரு சேகரத்தைச் சேர்ந்த சிலருடைய வீடுகளைச் சந்தித்து அவர்களுடைய பாரங்களைப் பகிர்ந்துகொள்ளும்படி என்னை அழைத்துக்கொண்டு சென்றது நினைவுக்கு வருகிறது. ஒரு வயதான முஸ்லிம் மனிதன் உட்கார்ந்து ரொட்டிகளையும் முட்டைகளையும் விற்றுக் கொண்டிருந்ததை அவன் கவனித்தான். மிகவும் குளிராயிருந்தது. இரவு வெகு நேரமாயிற்று. நாங்கள் சேகர மக்களைச் சந்தித்துத் திரும்பியபோது, அந்த முட்டைகள், ரொட்டிகளையெல்லாம் நான் வாங்கிக் கொள்வேனா என்று கேட்டான் ஓபேத். மூன்று டஜன் முட்டைகளும் சில ரொட்டிகளும் அங்கே இருந்தன என்று நினைக்கிறேன். எதற்கு இவ்வளவு? என்று நான் கேட்டேன். அப்பா, நீங்கள் அவைகளை வாங்காவிட்டால் அந்த மனிதன் இந்தக் குளிரில் நடுராத்திரி வரை உட்கார்ந்து கொண்டிருப்பார், அவர் வீட்டிற்குச் சென்று தனது கதகதப்பான படுக்கையில் இளைப்பாற நாம் உதவி செய்வோமே என்றான். இது என்னை ஆழமாகத் தொட்டது. என் மகன் மற்றவர்கள் மீது எவ்வளவு கரிசனையும் அன்பும் வைத்திருந்தான் என்று நான் கண்டேன்.



சமுதாயத்தில் ஆண் பெண் சம்பந்தமாக விட்டுக் கொடுப்பதை அவன் கடுமையாக எதிர்த்தான். அவனால் அதைப் பொறுத்துக் கொள்ளவே முடியவில்லை. பாகிஸ்தானில் கிறிஸ்தவ பெண்கள் முஸ்லிம்களை திருமணம் செய்வதும், சில நேரங்களில் மூன்றாந்தாரம் அல்லது நான்காந்தாரமாகக் கூட ஆவதும் ஆனால் இன்னும் தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக் கொள்வதும் சாதாரணமாகிவிட்டது. சில நேரங்களில் தங்கள் குழந்தைகளோடும் முஸ்லிம் கணவர்களோடும் ஆலயத்துக்கு அப்பெண்கள் வருவார்கள். நான் சில நேரங்களில் விட்டுக் கொடுத்துவிடுவேன், ஆனால் பாம்பி அங்கு இருந்தால் உடனே அவர்களைக் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு வெளியே விட்டுவிடுவான். அவர்களிடம், இந்த இடம் உங்களுக்குரியதல்ல, தேவனை ஏமாற்ற முடியாது. இது அவருடைய பிள்ளைகளுக்கான இடம், தேவனை கனவீனம் செய்த, அவமதித்த உங்களைப் போன்றவர்களுக்கானதல்ல என்று சொல்வான். அவன் வெளிப்படையாகப் பேசுகிறதைக் கண்டு நான் தேவனை ஸ்தோத்திரித்தேன். அவனுடைய எதிர்ப்பு எனது புரொட்டஸ்டன்ட் சமுதாயத்திற்கு சில நன்மைகளைச் செய்தது. எமது சமுதாயத்தில் பெண்கள் அப்படிச் செல்வது அரிதாகியது, ஆனால் மற்ற கிறிஸ்தவ சமுதாயங்களிலிருந்து அநேகம் பெண்கள் வழிதவறிப் போனார்கள்.

முஸ்லிம் குடும்பங்களில் பல மனைவிகள் குழந்தைகளுக்கு பல தாய்கள் என்றானதால் ஒழுக்கத்

திற்கும் ஒழுக்கமின்மைக்கும் வித்தியாசம் சொல்வது கடினமாகிவிடுகிறது. தங்கள் தகப்பன்மார் பல மனைவிகள் வைத்துக் கொண்டிருப்பதை மகன்கள் காணும்போது அவர்கள் பெண்களின் பிறகே ஓடுவது அசாரணமானதல்ல. ஆனால் என் மகனான இவன் ஒருபோதும் குடித்ததில்லை, பெண்களின் பின்னால் ஓடினதில்லை. இதில் பெருமை பாராட்ட ஒன்றுமில்லை. ஆனால், தனிப்பட்ட மற்றும் குடும்ப புனிதம் குறித்த திடமான கிறிஸ்தவ போதனைகளை தேவ வசனத்தினின்றும் குடும்பத்தின் கிறிஸ்தவ சூழ்நிலையிலிருந்தும் பெற்றதினாலேயே அவனால் அப்படி இருக்க முடிந்தது. பாம்பி பல குடும்பங்களை இரட்சிக்க முடிந்தது. அவனது பயனுள்ள சாட்சியினால் அநேகம் இளம் பெண்களும் பையன்களும் கர்த்தரிடத்தில் வந்தனர். எனக்கு ஒரு முஸ்லிம் நண்பர் இருந்தார், அவர் பிர் எனப்படும் மதத் தலைவர். அவருடைய மகன்கள் என் மகனோடு நட்பாயிருந்தனர். சில நேரங்களில் தங்கள் தகப்பன் முன்பாகவே அவர்கள் குடித்தனர், ஆனால் என் மகன் ஒருபோதும் அப்படிச் செய்ததில்லை. ஒரு நாள் அம்மனிதர் என்னிடம் வந்தார். நாமான் நீங்கள் விசித்திரமான உங்கள் மகன் ஓபேதை வளர்த்திருக்கிறீர்கள் என்றார். நீங்கள் பாம்பியைச் சொல்லுகிறீர்களா? என்றேன்.

ஆம், தன் நண்பர்கள் குடிக்கும்போது அவன் குடிக்கிறதில்லையே என்றார். நான் அவனைத் தடுக்கவில்லை, அது அவனுடைய தனிப்பட்ட தீர்மானம். அது



நல்லது என்று நான் நினைக்கிறேன். கிறிஸ்தவர்கள் குடிக்க அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று நீங்கள் நினைத்துக் கொள்கிறீர்கள். ஆனால் அப்படியல்ல. பணத்தை அது அழிக்கிறது, வேதத்தின்படி அது தடை செய்யப்பட்டுள்ளது. அவன் குடிக்காமல் இருப்பது நல்லது என்றேன். என்னுடைய முஸ்லிம் நண்பர்களிடமிருந்து வந்த சாட்சி அதுதான்.

பாம்பி தொடர்வண்டித் துறையில் வேலை செய்த போது தனது முகவரி அட்டையை அச்சிட்டு இருந்தான். அதில் என் கிருபை உனக்குப் போதும் என்ற வசனம் இடம் பெற்றிருந்தது. இயேசு ஆண்டவர் என்னை அழைத்த போது அவர் என்னோடு பேசினதும் என் வாழ்க்கையின் சாராம்சமாக இருந்ததும் இந்த வார்த்தைகளே. எனவே இந்த முகவரி அட்டையை தன்னுடைய முஸ்லிம் நண்பர்களுக்குக் கொடுத்தபோது அவர்கள் ஓபேத் இது எதற்காக? இதன் அர்த்தம் என்ன? என்று கேட்கவே செய்தனர். அப்பொழுது இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியைப் பகிர்ந்து கொள்ள அது ஒரு சந்தர்ப்பமாய் அமைந்தது. கர்த்தருக்கு ஒரு தைரியமுள்ள சாட்சியாக அவன் இருந்தான். நான் எனது 40 ஆண்டு கிறிஸ்தவ யாத்திரையில் நான் சாதித்ததைக் காட்டிலும் அதிகமான சுவிசேஷப் பணியை ஐந்து ஆண்டுகளில் பாம்பி செய்தான் என்பதை நான் ஒப்புக் கொள்ள வேண்டும். அது ஆச்சரியமானது! அது அற்புதமானது!

அப்படிப்பட்ட சாட்சியுள்ள மகனை கர்த்தர் எனக்குத் தந்தபடியால் அவருக்கு நன்றி செலுத்துகிறேன். அவன் என்னைவிட உயரமாக இருந்தான், எனக்கு வயதாகிக்கொண்டே போனபோது எனக்கு அருகில் அவன் நிற்பதைக் காண்பதை எப்போதுமே நான் விரும்பினேன், அவன் என்னுடைய பெலனும் நம்பிக்கையுமாய் மாறினான். அவனுடைய மூத்த சகோதரன் சாமுவேல் தனது படிப்புக்காக கொரியா சென்றபோதும், சகோதரி குல்டா மருத்துப் படிப்புக்குச் சென்றபோதும், அவன் எங்களோடு வீட்டில் இருந்தான். அவன் எங்களுக்கு ஆறுதல் தந்ததால் சமுதாயத்துக்கு நம்பிக்கை தந்ததால், தனது முஸ்லிம் நண்பர்களுக்கு சாட்சி பகர்ந்ததால் அவன் எங்களோடு இருந்தது ஒரு ஆசீர்வாதமாக இருந்தது. அவனுடைய நண்பர்கள் பலதரப்பட்டவர்கள் ஆனால் அவர்களிடம் சுவிசேஷத்தைப் பயமின்றி அவன் கொண்டு சென்றான்.

ஒரு குறிப்பிட்ட நிகழ்வு அவனுடைய வைராக்கியத்தை எடுத்துக் காட்டுகிறது. கொரியாவிலிருந்த தன் சகோதரனைச் சந்திக்க 1988ம் ஆண்டு சென்றிருந்தபோது அங்குள்ள ஒரு கொரிய சுவிசேஷக் குழுவுடன் சேர்ந்து அப்பொழுது அங்கு நடைபெற்ற ஒலிம்பிக் விளையாட்டுகளில் கலந்துகொள்ள வந்திருந்த வீரர்களைச் சந்திக்க முயற்சித்தான். பல நாடுகளிலுள்ள மக்களுக்கு சுவிசேஷ செய்தியை அவன் அறிவித்ததுண்டு.



இரண்டாவது மேசியா என்று தன்னை அழைத்துக் கொண்ட ஒரு கொரிய மனிதனை அவன் சந்தித்தான். அம்மனிதனிடம் பாம்பி கடுமையாகவும் வெளிப்படையாகவும் பேசினான்: மனிதனே, நீ பாகிஸ்தானில் இருந்திருந்தால் நான் உன்னை கொன்றுபோட்டிருப்பேன், ஏனெனில் நீ உயிரோடிருப்பதற்குத் தகுதியானவனல்ல, நீ மக்களைத் தவறாக வழி நடத்துகிறாய், நீ பிசாசின் தூதன் என்று கூறினான். அந்த மனிதன் அந்த வெளிநாட்டுக்காரன் அப்படி என்னிடம் பேசுவதைப் பாருங்கள், அவன் எதற்கும் பயப்படுகிறதில்லை என்று சொல்லி ஓடவேண்டியதாயிற்று பாம்பி மேலும் அவனிடம் இந்த புத்தியீனத்தை என்னால் சகிக்க முடியாது, நீ போய்விடு, எங்கேயாவது போய்த் தொலை! நான் உன்னைப் பார்க்க விரும்பவில்லை, ஏனெனில் ஒரே ஒரு மேசியாதான் உண்டு அவரே சிலுவையில் மரித்தவர், உயிரோடிருக்கிறவர்களையும் மரித்தவர்களையும் நியாயந்தீர்க்க மீண்டும் வருகிறார். நீ உன்னை மேசியா என்று எப்படிச் சொல்லலாம்? என்று சொல்லியிருந்தான். இது உண்மையிலேயே என்னைத் தொட்டது, பாம்பி அப்படிப்பட்ட ஒரு பலமான விசுவாசமும் கடிந்து கொள்ளப்படவேண்டிய ஆட்களின்பால் பயமில்லாத ஒரு அணுகுமுறையும் கொண்டிருந்ததற்காக நான் தேவனைத் ஸ்தோத்திரிக்கிறேன். அப்படிப்பட்டவர்களை அவன் கடிந்து கொண்டான், அதற்காக தேவனை ஸ்தோத்தரிக்கிறேன.

தனது அண்ணன் கொரியாவிலும் அக்காள் கல்லூரியிலிரும் இருக்க தான் மட்டும் எங்களுடன் இருக்க

நேரிட்டதால் பாம்பி மிகவும் தனிமை உணர்வை சந்தித்துக் கொண்டிருந்தான் என்று நான் உணர்ந்தேன். 1987ல் அவனுடைய சகோதரி குல்டாவும் அவனும் சேர்ந்து சிரித்துக் கொண்டே என்னிடம் வந்தனர், என்ன விஷயம்? என்று கேட்டேன். குல்டா தான் கராச்சியில் ஒரு கிறிஸ்தவ தோழிக்கு மணமகள் தோழியாக இருந்ததாகவும், அந்தத் திருமணத்தின்போது ஜலீன்ஃபைஸ் என்ற தாழ்மையான மிக அர்ப்பணிப்புள்ள கிறிஸ்தவ பெண்ணைச் சந்தித்த தாகவும் கூறினாள். அவள் மேலும், அப்பா நீங்கள் அந்தப் பெண்ணின் வீட்டுக்குச் சென்று அந்தப் பெண்ணை வீட்டுக்குச் சென்று அந்தப் பெண்ணை பாம்பிக்கு நிச்சயம் செய்து தருவார்களா என்று கேட்பீர் களா? என்றாள். நான் சற்று யோசித்துவிட்டு அன்புச் செல்வங்களே, யாரிடத்திலும் சலுகை கேட்பது ஒருபோதும் எனக்கு எளிதாக இருந்ததில்லை, ஆனால் இது சரி என்று உங்களுக்கு நிச்சயம் இருந்தால் நாம் போகலாம் என்றேன். இந்தப் பெண் பாம்பிக்கு மிகவும் பொருத்தமான வளாக இருப்பாள் என்றாள் குல்டா. எனவே ஆன் ஜலீனின் அப்பாவிடம் பேசினேன். சகோதரர் எர்னஸ்ட் ஃபைஸ் அவர்களே, நான் உங்களைச் சந்திக்க முடியுமா? அவர் நிச்சயமாக, உங்கள் வரவு நல்வரவு என்றார். ஆகவே நான் பிரயாண ஏற்பாடு செய்து கராச்சி சென்றேன். அங்கே தொடர்வண்டி நிலையத்தில் தகப்பனும் பிங்கி என்று மறுபேர் கொண்ட அவர் மகளும் எனக்காகக் காத்துக் கொண்டிருந்தனர். அவர்களுடைய வீட்டிற்கு என்னை அழைத்துச் சென்றனர்.



பிங்கியின் தாயார் சகோதரி எனிட் என்னைக் கண்டு மகிழ்ச்சியடைந்தார், ஏனெனில் எங்களுக்குப பொதுவான ஒன்று இருந்தது. சகோதரர் எர்னஸ்ட் ஃபைஸ் வடக்குப் பகுதியைச் சேர்ந்தவர்; அவருடைய அப்பாவின் சகோதரர் அந்தப் பகுதியில் முதலாவது உயர்மறை மாவட்ட டீக்கனாக இருதார். அவருடைய பெயர் ஆர்ச் டீக்கன் பரக்கத் உல்லாஹ். சகோதரர் எர்னஸ்டின் அப்பா ஃபைஸ் உல்லாஹ். சகோதரி என்ட் அவர்களின் குடும்ப முனனோர்கள் எனது கிராமத்தைச் சேர்ந்தவர்கள். அவருடைய தாத்தா டாக்டர் ஐ.டி.ஷபாஸ் எனது கிராமத்தவர், அவர் கிறிஸ்தவராக மாறியவர், நன்கறியப் பட்ட அறிஞர். அவர் சங்கீத புத்தகத்தை எபிரேய மொழியி லிருந்து உருது மொழிக்குப் மொழி பெயர்த்தெழுதினார். பிறகு அதை பஞ்சாபி கவிதையாகவும் எழுதினார். பிறகு அந்த கவிதைக்கு இனிமையான இசையையும் ராகங்களையும் அமைத்தார். இன்று வரை அவை பஞ்சாபிகளால் எங்கும் பாடப்படுகின்றன. ஆகவே அவர்களை மீண்டும் காண்பது எனக்கு இன்பமாயிருந்தது.

தனிப்பட்ட சலுகை கேட்பது எனக்கு எப்போதும் மிகக் கடினமானதாகையால் நான் மிகவும் அசைக்கப் பட்டேன். என் கண்களில் கண்ணீர் வந்தது. சகோதரர் எர்னஸ்ட் என்னை அணைத்துக் கொண்டு சகோதரரே நீங்கள் ஏன் தயங்குகிறீர்கள். உங்களுக்கு என்ன வேண்டும் கூறுங்கள் என்றார். நான் எனக்கு ஒன்றும்

குழப்ப மிலலை. பிங்கியை என் மகள் பாம்பிக்கு தரவேண்டு கிறேன் அவ்வளவுதான் என்றேன் அதற்கு அவர், நீங்கள் அதனால்தான் அழுகிறீர்களா? என்றார். நான் சொன்னேன்: 'எனக்கு மிகவும் கடினமாக இருக்கிறது, ஏனெனில் வேண்டுகோள் என்னிலிருந்து இயல்பாக வராது' அதற்கு அவர் சாதாரணமாகச் சொன்னார்: 'அவள் உங்கள் மகள், எந்தவித பிரச்சனையுமில்லை, நாங்கள் இது குறித்து மகிழ்ச்சி அடைகிறோம் என்று நிச்சயித்துக் கொள்ளுங்கள், நாங்கள் உங்களை நேசித்து மிகவும் கனப்படுத்துகிறோம், உங்கள் வரவு மிக்க நல்வரவு, இன்று முதல் பிங்கி உங்கள் குடும்பத்துக்குரியவள்'. அது எனக்கு மிகவும் அற்புதமானது, அவர்களுடைய மனப் பாங்கினாலும் வரவேற்கும் அன்பினாலும் நான் மிகவும் தொடப்பட்டேன். அந்த நாளிலிருந்து பிங்கி என்னை அப்பா என்று கூப்பிட ஆரம்பித்தாள். அது மிகவும் விசேஷ மானது, சம்பிரதாயமாக அல்ல, இருதயத்தின் ஆழத்தி லிருந்து என்னை அவள் 'அப்பா' என்று கூப்பிட்டாள்.

சகோதரர் எர்னஸ்ட்டும் சகோதரி எனிட்டும் ரைவின்டி என்னும் இடத்தில் ஒரு புதிய வீட்டைக் கட்டிக் குடியேறி இருந்தபடியால் 1988 டிசம்பர் மாதம் ரைவின்டி யில் கிறிஸ்மஸுக்குப் பிறகு பாம்பி பிங்கி திருமண நிச்சயம் நடந்தது. அந்த நிச்சயம் எனது சகோதரர்களால் சர்ச் ஆஃப் பாகிஸ்தானின் பிரதிநிதி பிஷப் சம்மி சரையா மற்றும் இரட்சண்ய சேனை பிரதிநிதி அருமை சகோதரர் ஃபர்மான் மஸிஹ் ஆகியோர் முன்னிலையில் நடத்தப்



பட்டது. பல்வேறு சபைகளிலிருந்து வந்த இந்த தலைவர் களுடன் அன்பான ஒரு கூடி வரவு அங்கு உண்டானது. நாங்கள் மகிழ்வுடன் திரும்பினோம். ஆனால் பாம்பி என்னிடம் 'அப்பா கொரியாவில் இருக்கும் அண்ணன் இந்த நிச்சயத்துக்கு வரமுடியாது என்று தெரிந்திருந்தால் நான் நிச்சயத்துக்கு சம்மதித்திருக்க மாட்டேன், உண்மையில் அண்ணன் வரமுடியாதது எனக்கு வருத்த மளிக்கிறது' என்றான்.

அதன் பிறகு திருமண தேதி 1990 நவம்பர் 15 என தீர்மானிக்கப்பட்டது. சாமுவேல் அதற்குள் படிப்பை முடித்து கொரியாவிலிருந்து வந்திருப்பார். இடைப்பட்ட காலத்தில் பொருட்கள் வாங்கப்பட்டன, செய்யப்பட்டன, வைக்கப்பட்டன. பிங்கியைப் பார்ப்பது இன்பமாயிருந்தது. ஒரு மகிமையான சமயத்துக்காக, தனது திருமண வாழ்க் கையைத் துவங்கவும், எமது குடும்பத்தோடு நெருக்கமாகி தனது வயதான அன்பு அப்பாவுக்கு அன்பையும், கரிசனையையும் சேவையையும் தருவதற்கும் ஆயத்த மாகிக் கொண்டிருதாள். நாங்கள் மிக்க மகிழ்சசியாயி ருந்தோம்.

ஆனால் அந்த சமயம் வரவேயில்லை. மகிழ்ச்சி யைப் பகிர்ந்து கொள்வது போல், நாங்கள் பயங்களோடும் கலக்கங்களோடும் வாழ்ந்தோம். அவற்றை தேவனிடத்தி லும் கொண்டுவந்தோம். 1985ல் ஒரு அச்சுறுத்தும் நிகழ்வு உண்டாயிற்று. கலவர காலத்தில் மெக்காவிலுள்ள காபா தாக்கப்பட்டபோது, இமாம் கொமெய்னி அமெரிக்காவைக்

குற்றம சாட்டினார். எங்களுடைய ஆலயம் ஒரு கலவரக் கும்பலால் தாக்கப்பட்டது, ஓபேத் என்னை அழைத்தார், அவர் அப்போது வீட்டிலிருந்தார், 'நாங்கள் வாசல் கதவண்டை நின்றோம். என் மகன் ஓபேத் சத்தமாக நாங்கள் உயிரோடிருக்குமட்டும் இந்த தேவனுடைய வீட்டிற்கு யாரும் தீங்கிழைக்க முடியாது. நாங்கள் தாழ்மை யுள்ள தேவ ஊழியர்கள், இந்தக் கட்டடத்தை சேதப்படுத்த ஒருவரையும் நாங்கள் அனுமதியோம்' என்றார். தன் கையில் ஒரு ஆயுதத்தோடு அங்கே நின்றார், அப்பொழுது அக்கும்பல் கலைந்து திரும்பிச்சென்றது.

கொரியாவுக்கும் போவதற்கு முன்பு சாமுவேல் கேம்ப்ஸ் குருசேட் அமைப்பில் பணியிலமர்ந்து ஓபேத் மற்றும் சில உள்ளூர் கிறிஸ்தவர்கள் உதவியோடு சுக்கூரில் கிறிஸ்தவ இலக்கியங்கள் விநியோகத்தை நடப் பித்தார். நகரம் எங்கிலும் சுவரொட்டிகள் ஓட்டப்பட்டன, ஒரு வார முழுவதும் கிறிஸ்தவ விசுவாசத்தைக் குறித்து அல்லாது வேறு ஒன்றைக் குறித்தும் சுக்கூர் பேசவில்லை. எனது மகன்கள் இருவரும் ஓ எம் புத்தக நிறுவன பையன் களுடன் சேர்ந்து கிறிஸ்தவ புத்தகங்களை விநியோகித்தனர். இதினிமித்தம நான் பலமுறை காவல் நிலையம் செல்லவேண்டியதாய் இருந்தது. இந்தக் கிறிஸ்தவர்கள் இந்தச் செயல்பாடுகளை நிறுத்தும்படி செய்ய வேண்டும என்று 37 முஸ்லிம் மதத்தலைவர்கள் காவல் துறைத் தலைவரிடம் கூறியிருந்தனர். நான் அழைக்கப்பட்டபோது அந்த மதத் தலைவர்களுடன்



பேசும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. நான் அவர்களிடம் 'அன்பு நண்பர்களே நீங்கள் ஏன் பயப்படுகிறீர்கள்? இந்த மதம் அதாவது இஸ்லாம் தேவனிடமிருந்து வந்ததென்றால் இறைவனே அதைப் பாதுகாக்கும்படி ஏன் அனுமதிக்கிறதில்லை நீங்கள்? ஏன் மிகவும் எதிர்ப்பும் விரோதமும் காட்டுகிறீர்கள்? இறைவன் அதைப் பாதுகாக்கட்டும். மக்களால் பாதுகாக்கப்பட வேண்டிய மார்க்கம் ஒன்று இருக்குமென்றால் அது இறைவனிடமிருந்து வந்ததில்லை அல்லது அந்த மதம் மக்களுக்கு ஒன்றும் தரமுடியாது.

அது உடைந்து போகாதபடி பத்திரமாய் வைக்கப்பட வேண்டிய களிமண் பொம்மைபோலிருக்கிறது. நாம் இப்போது இஸ்லாத்தை நாள் முழுவதும் கேட்கிறோம் அது கட்டாயமாக்கப்பட்டுள்ளது: நமது பிள்ளைகள் பள்ளி களிலும் கல்லூரிகளிலும் அதைப் படிக்கிறார்கள். வானொலி, செய்தித்தாள், பாடநூல்கள் ஆகியவற்றின் மூலம் இஸ்லாம் நமக்குள் புகுத்தப்படுகிறது. நாங்கள் ஒருபோதும் அதை எதிர்த்துப் போராடவில்லை, கிறிஸ்தவ மார்க்கம் ஆபத்திலிருக்கிறது என்று எண்ணவில்லை. இருப்பினும் நாங்கள் நற்செய்தி அறிவிக்க வெளியே சென்றால், நம்பிக்கையின் செய்தியை மக்களுக்குத் தர முயன்றால் நீங்கள் எதிர்த்துக் கல்லெறிய வருகிறீர்கள். இது என்ன? தயவுசெய்து இதை நிறுத்துங்கள். ஏனென்றால் நீங்கள் இறைவனை அவமதிக்கிறீர்கள்' என்றேன். அவர்கள் இதை பொருட்படுத்தவில்லை,

உண்மையில் இது அவர்கள் கோபத்தை அதிகரித்தது.

1986ல் எனக்கு பயமுறுத்தும் கடிதங்கள் வந்தது. அதில் ஒரு கடிதத்தின் மொழிபெயர்ப்பைக் கீழே தருகிறேன்.

போதகர் நாமான் சாஹிப், வந்தனங்கள், உங்களுடைய வாழ்க்கை முறை உங்களை மரணத்துக்கு நேராய்க் கொண்டு செல்கிறது என்று உங்களுக்கு இதன் மூலம் தெரிவிக்கிறேன். எனவே இந்த கடைசி எச்சரிக் கையை உங்களுக்கு விடுக்கிறேன். உங்கள் வாழ்க்கை முறையை மாற்றிக் கொள்ளுங்கள். போதகர் சாஹிப், உங்கள் மகள் எங்கள் மனிதர்களின் கட்டுப் பாட்டிற் குள்தான் இருக்கிறாள், உங்கள் வாழ்க்கை முறை அவள் உயிருக்கு ஆபத்தையே உண்டாக்கக் கூடும். ஆகவே கடைசி எச்சரிப்பை உங்களுக்கு விடுக்கிறேன். மனிதனாக நடந்து கொள்ளுங்கள். இல்லாவிட்டால் உங்கள் மகளையும மகனையும் இழந்து போவீர்கள். உங்கள் மகன் எப்போதும் எங்கள் துப்பாக்கியின் முன்னால் இருக்கிறான். அவனை எங்கேயும் உங்களால் ஒளித்து வைக்கவோ எங்கள் கைக்குத் தப்புவிக்கவோ முடியாது. உங்கள் உயிரும் உங்கள் பிள்ளைகள் உயிரும் உங்களுக்கு முக்கியம் என்றால் 50,000 ரூபாயை எடுத்துக்கொண்டு ரோஹ்ரி சிமெண்ட் தொழிற்சாலையின் மூலையில் 30ம் தேதி மாலை 6 மணிக்கு வாருங்கள். உங்களுக்கு தெரியாத ஒரு நீலப்படம், உங்கள் மகள் சம்பந்தப்பட்ட ஒளிப்படம் நாங்கள் வைத்துள்ளோம்.



உங்கள் பிள்ளைகளைக் காப்பாற்றுங்கள் என்று போதகர் சாஹிப்புக்கு மறுபடியும் சொல்லுகிறேன். உங்கள் பிள்ளைகளின் உயிரைக் காப்பாற்ற இது ஒரு சிறு விலைக்கிரயம் தான். நீங்கள் ஏதாவது தந்திரம் செய்தால், அதன் விளைவுகள் மோசமாயிருக்கும். எங்கள் ஆட்கள் உங்கள் வீட்டைக் கவனித்துக் கொண்டுள்ளனர். நீங்கள் ஒரு தவறான அடி எடுத்துவைத்தால் உங்கள் முழு குடும்பத்தையும் அழித்து விடுவோம். உங்கள் பிள்ளை களுக்காக, நீலப்படத்துக்காக ஒரு சிறிய விலையை நியமித்துள்ளோம். எங்கள் கோரிக்கைகளை நிறைவேற் றுவீர்கள் என்று நம்புகிறோம். காவல்நிலையத்துக்கு அறிவித்தால் உங்கள் பிள்ளைகள் ஒருவருடைய உடல் உங்கள் வீட்டிலே கொண்டுவந்து போடப்படும். உங்கள் மகளை நவாப்ஷா மருத்துவமனையில் வேலைக்குச் சேர்த்ததால் எங்களுக்கு எளிதாகிவிட்டது. உலகத்தின் எந்த மூலையில் உங்கள் பிள்ளைகளை ஒளித்து வைத்தாலும் உங்களால் அவர்களைக் காப்பாற்ற முடியாது. அவ்வளவுதான் வணக்கம்.

ஜனவரி 30ம்தேதி மாலை 6 மணி மறக்க வேண்டாம். நாங்கள் உங்களுக்காகக் காத்திருப்போம். நீங்கள் வராவிட்டால் எங்களை அவமதிக்கிறீர்கள், அதற்காக நாங்கள் பழி வாங்குவோம்.

**உங்கள் நண்பனிடமிருந்து**

அந்த சமயத்தில் எங்கள் குடும்பத்தின் பாதுகாப்

புக்காக தம்மை நம்பும்படி தேவன் எங்களைத் தெளிவாக வழிநடத்தினார். இதற்கு நாங்கள் ஒப்புக்கொண்டோம. என்னிடத்தில் பணமில்லை. நண்பர்களிடத்தில் கேட்டால் எனக்கு உதவி செய்வார்கள் என்றாலும் ஈட்டுப் பணம் கொடுப்பது தீய வல்லமைக்கு அடிபணிந்ததாக ஆகிவிடும் என்று நான் எனக்குள் தீர்மானித்தேன். அது ஒரு கிறிஸ்தவன் செய்யக்கூடிய செயல் அல்ல என்று நான் உணர்ந்தேன். ஆனாலும் மாலை 6 மணிக்கு நான் அந்த இடத்துக்குச் சென்றேன். அங்கு யாராவது இருப்பார்ளா னால் அவர்களிடம் பேசலாம் என்று எண்ணிதான் சென்றேன். அங்கு யாருமே இல்லை.

நான் போலீஸ் யாரையும் கூட்டிப் போகவில்லை. நான் எவ்வித ஆயுதமும் அதைப் போன்ற எதையும் கொண்டு போகவில்லை. அங்கு யாரையாவது சந்தித்தால், பணம் கொடுக்கும்படி அல்ல அவர்கள் செய்வது சரியல்ல என்று சொல்லும்படி சென்றேன். நாங்கள் யாரையும் புண்படுத்தவில்லை. நாங்கள் எங்களுக்குள்ள உரிமைகளுக்குள்தான் செயல்பட்டோம். ஆனால் அங்கு யாருமில்லை. அதன் பின்பு மூன்று ஆண்டுகள் கடந்தன.

நான் 1990ம் ஆண்டு மே மாதம் மீண்டும் சிறு நீரகக் கற்களால் எனக்கு வலி ஏற்பட்டது. அதனால் கராச்சியில் சிகிச்சை பெற சென்றேன். நான் திரும்ப சுக்கூருக்கு வந்தபோது குல்டா வேலையிடத்தில் அனுமதி



பெற்று என்னுடன் வந்தாள். அந்த மாதத்தில் அரசியல் கலவரங்களும் வன்முறையும் சிந்துவில் ஏற்பட்டன. பிரயாணம் மேற்கொள்வது பாதுகாப்பாற்றதாயிற்று ஜுன் மாதம் 2ம் தேதி இரவு குல்டா எங்களுடன் வீட்டில் இருந்தாள். ஆகவே நாங்கள் நான்குபேரும் வீட்டிலிருந் தோம். இரவு 10.25 ஆயிற்று. குல்டா அடுத்த நாள் 3ம் தேதி வேலையில் இருக்கமுடியாது என்று அவளது அலுவலகத்துக்கு அறிவிக்கும்படியாக ஓபெத் சபை வளாகத்திலிருந்து வெளியே சென்றார். தபால் மற்றும் தொலைதொடர்பு துறை அலுவலகத்துக்குச் சென்று கொண்டிருந்தார். சடுதியாய் துப்பாக்கி வெடிக்கும் சத்தம் கேட்டது குல்டாவும் நானும் வெளியே ஓடினோம். யாரோ நுழைவுக் கதவைத் தட்டி, ‘அங்கிள் கதவைத் திறவுங்கள் ஓபேத் சுடப்பபட்டார்’ என்று சத்தமிட்டதைக் கேட்டேன்.

நாங்கள் அவரிடம் ஓடினோம். அவர் சாலையில் விழுந்து கிடந்தார், இரத்தம் ஒழுகிக் கிடந்தது, தன்னுடைய இரத்தத்தில் விழுந்துகிடந்தார். நான் நாடியைப் பிடித்துப் பார்த்தேன். அவர் உலகத்தை விட்டுப் போய்விட்டார். நான் அவர் நெற்றியில் முத்தமிட்டேன். குல்டா கூக்குரலிடு வதைக் கேட்டேன், மயக்கமானேன்.

பாம்பியின் மரணச் செய்தி பிங்கியின் வீட்டிற்குத் துரிதமாய்ச் சென்றடைந்தது. அவர்கள் தொடர்வண்டி பிடித்து சுக்கூருக்கு விரைந்து வந்து அடக்க ஆராதனை யில் கலந்துகொண்டனர். பிங்கி மிகுந்த அதிர்ச்சி யடைந்தாள். துக்கம் நிறைந்த கண்களுடன் என்னைப்

பார்த்து ‘அப்பா, என்னுடைய பாம்பி எங்கே, என்னுடைய பாம்பி எங்கே? என்று கேட்டாள். நான் ஊமையானேன். என் இருதயம் அவளுக்காக வேதனையடைந்தது. நவம்பர் மாதம் வந்தால் ஓபேதைத் திருமணம் செய்திருப்பாள். நாங்கள் சாமுவேல் கொரியாவிலிருந்து வரும்படிதான் காத்திருந்தோம்.

ஆகவே கர்த்தர் கொடுத்திருந்ததை அவருக்கே கொடுத்துவிட்டோம். ஓபேத் என்ற உருவில் ஒரு இன்பமான பரிசு. அவர் எங்களோடு 26 ஆண்டுகள் இருந்ததற்காக கர்த்தருக்கு நன்றி செலுத்துகிறோம். அவர் விட்டு சென்ற சுகந்தமான நினைவுகளுக்காக நன்றி செலுத்துகிறோம். அடக்க ஆராதனையின் போது நகர மக்கள் கட்டுப்படுத்த இயலாமல் அழுததைக் கண்டேன். தன் சக கிறிஸ்தவர்களால் மட்டுமல்ல தனது முஸ்லிம் நண்பர்களாலும் எவ்வளவு அதிகமாக ஓபேத் நேசிக்கப்பட்டார் என்று உணர்ந்து கொண்டேன். எமக்கு வந்த ஏராளமான ஆறுதல் கடிதங்களில் எனது தகப்பனாருடைய சகோதரர் மகனும் மிர்புர்காசில் வழக்கறிஞருமாகிய சௌத்ரி நஸீர் அஹ்மெத் அவர்களிடமிருந்து வந்த கடிதம் இதோ:

அன்பு சகோதரர் நாமான்,

உங்களுடைய மகன் பயங்கரவாதிகளால் சுடப் பட்டு சடுதியாய் அகால மரணமடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தேன். உங்கள் இழப்பை என் மனைவியும் நானும் பகிர்ந்து கொள்கிறோம். உங்கள் துக்கத்தை வார்த்தைகளால் ஆற்றமுடியாது. மனிதகுலத்துக்காகவே



உங்கள் மகன் மரித்திருக்கிறார். மற்றவர்கள் பிழைக்கும் படியாக அவர் மரித்திருக்கிறார். உண்மையில் அது ஒரு இரத்தசாட்சியின் மரணம். நீங்கள் இந்த இழப்பை விடாமுயற்சியுடன் தாங்கும்படி இறைவன் உங்களுககு சித்தத்தையும் பெலனையும் தரும்படி ஜெபிக்கிறோம். மரித்த ஆன்மா பரலோகத்தில் நித்திய சமாதானத்தில் இளைப்பாறுவதாக! ஆமென். தயவு செய்து எமது ஆறுதலை ஏற்றுக் கொள்ளுங்கள். உங்கள் அருமை மகனுடைய துக்ககரமான மறைவுக்கு எனது மனைவியும் நானும் அனுப்பும் இரங்கல் செய்தியை ஏற்றுக் கொள்ளுங்கள்.

உங்கள் உண்மையுள்ள,

என்.ஏ.சௌத்ரி.

அநேக கடிதங்களும், ஜெபங்களும், அடையாள உதவிகளும் எங்கள் துக்கத்தில் எமக்கு ஆதரவா யிருந்தன. என் மகன் சாமுவேல் இன்னமும் கொரியா வில்தான் இருந்தார். ஓபேத் தன் கைப்பட எழுதியிருந்த சாட்சியை எனக்கு அனுப்பியிருந்தார். அதை பிற்சேர்க் கையாகக் கொடுத்துள்ளேன். எனக்கு மிகுந்த ஆறுதலா யிருந்தது. எனது மகனை சுக்கூரில் முன்தினம் அடக்கம் செய்த பிறகு ஜுன் 4ம் தேதி என்று நினைக்கிறேன். நான் தியானித்துக் கொண்டிருக்கும்போது தேவவசனம் எனக்கு வந்தது:

‘‘நான் உன்னைக் கைவிடுவதுமில்லை விட்டு

விலகுவதுமில்லை, நான் உன்னைக் கவனித்துக் கொள்வேன்'. அது எனக்குப் போதுமானதாய் இருந்தது. அவர் என்னை விட்டுவிடுகிறதில்லை. அவர் என்னைக் கவனித்துக் கொள்வார். அவர் என்னையும் எனது குடும்பத்தையும் கவனித்துக் கொள்வார். ஆம், நான் அவருக்கு, இந்தக் கசப்பைக் கட்டளையிட்டதற்காக ஸ்தோத்திரம் கூட செலுத்தினேன். அநேக மக்கள் கிறிஸ்தவ உலகத்திலே பெரும்பாமையானவர்கள் ஆசீர் வாதம், செழிப்பு, வேதனைகளிலிருந்து விடுதலை வேண்டுமென்று கேட்கிறார்கள். ஆனால் வெகு சிலர் மட்டுமே கர்த்தருடைய பாடுகளைப் பகிர்ந்து கொள்ள அவருக்குக் கிடைக்கிறார்கள். ஏனெனில் அவருடைய கசப்பின் பாத்திரத்தை, பாடுகளின் பாத்திரத்தைப் பகிர்ந்து கொள்ள யாராவது அவருக்குத் தேவைப்படுகிறார்கள். தனது துக்கங்களைப் பகிர்ந்து கொள்ள என்னைத் தகுதியுள்ளவனாக அவர் கண்டபடியால் அவருக்கு நன்றி செலுத்துகிறேன். அவருடைய பாடுகளைப் பகிர்ந்து கொள்ள தங்களை தகுதியாக்கும்படி தேவ ஜனங்கள் அவரைக் கேட்க வேண்டுமென்று வெளிப்படையான அழைப்பு விடுக்கிறேன்.

அவருக்கு இது தேவை. நாசரேத்தூர் இயேசு, மரியாளின் மைந்தன் தனிமையாயிருக்கிறார். அவர் நேசிக்கப்படவேண்டும். அவர் நம்முடைய சிநேகிதராய் மாறி இருக்கிறார்; அவர் சிநேகிதரைத் தேடுகிறார். அவர் நம்மைச் சந்தித்திருக்கிறார். அவருக்குச் சமீபமாய்



இருக்க அன்பையும் வாஞ்சையையும் உடையவர்களை அவர் நாடுகிறார். அவர் என்னைத் தனியே விடவில்லை, அதுபோல உங்களையும் அவர் தனியே விடமாட்டார்.

## அத்தியாயம் 10

## நீங்கள் கட்டுவது எப்படி என்று கவனமாயிருங்கள்

என் துக்கத்தைக் கூறும் இந்நூலுக்கு உடனடி முடிவு கிடையாது. ஸ்காட்லாந்திலிருக்கும் எனது புதிய கூட்டில் எவ்வளவு காலம் இருக்கவேண்டும் என்று எனக்குத் தெரியவில்லை. அது இலண்டனில் உள்ள உள்துறை அலுவலகத்தைப் பொறுத்தது, பண வசதியைப் பொறுத்தது, என் குடும்பத்தைப் பொறுத்தது. குல்டா கராச்சியில் மயக்க மருந்தியல் தேர்வை எழுதி முடிக்க வேண்டியிருந்தது, சாமுவேல் மேற்படிப்புக்கும் இயேசுவுக் குச் சாட்சி கொடுக்கும்படியாகவும் அமெரிக்காவுக்குச் செல்ல வேண்டியிருந்தது.

இவ்வளவு ஆண்டுகளாக பல பாடுகளைப் பட்டு என்னுடன் ஆதரவாக நின்ற என் மனைவி டெய்ஸி வெகு தூரத்தில் பாகிஸ்தானில் இருக்கிறார். அவர் எப்போதுமே தனது இளைய மகனோடு மிக நெருக்கமாக இருந்தார். கடந்த காலத்திலே அசைக்க முடியாத தைரியமுடைய வராயிருந்தார். கடுமையான சோதனைகளில் என்னோடு பாடு அனுபவித்தார். எல்லா கஷ்டங்களையும் இழப்பு களையும் தாங்கிக் கொள்ளக் கூடியவராயிருந்தார். ஒரு

பெண்ணாக அவர் மிக பெலமானவர். தொழில் ரீதியாக மிகவும் மதிக்கப்பட்டவர், ஒரு ஆவிக்குரிய வழிகாட்டியாயும் மிகவும் மதிக்கப்பட்டவர். தனது இளைய மகனோடு மிகவும் பாசமாக இருந்தபடியால், அவரை இழந்தது தற்காலத்துக்கு மேற்கொள்ள முடியாத ஒன்றாயிருந்தது. அவருடைய இழப்புக்கு நான்தான் காரணம் என்ற உண்மையான குற்றச்சாட்டை நான் சந்திக்க வேண்டியிருந்தது. "நீங்கள் மட்டும் அந்த 50,000 ரூபாய்களைக் கொடுத்திருந்தால் ஓபேத் இன்னும் நம்மோடு இருந்திருப்பான்" என்று இன்னும் அவர் சொல்லிக் கொண்டிருக்கிறார். நாம் நம் மகனை வெளியே கொண்டு போயிருந்தால்... நாம் அந்த மருத்துவமனைக்குச் சென்றிருந்தால்... நாம் அந்த வழக்கறிஞரை அமர்த்தியிருந்தால் நாம் இதைச் செய்திருந்தால் அப்படிச் செய்திருந்தால்... என்றெல்லாம் ஓபேதைப் பற்றிய தனது துக்கத்தை வெளிப்படுத்திக் கொண்டு அவரை தேவனுக்கு விட்டுவிட மனதில்லாதிருந்தார். அது புரிந்துகொள்ளக் கூடியதே அதே வேளையில் மிகவும் வேதனையுள்ளதும், அலைக்கழிப்பதுமாகவே அந்தப் பிரிவுடன் அந்த இடைவெளியுடன் வாழும் அனுபவம் காணப்பட்டது.

காரியங்கள் சரியான ஒழுங்குக்கு வர சமயம் எடுத்துக் கொள்கின்றன. ஆனால் கர்த்தர் இருக்கிறார். என்னை அவர் தேற்றிக்கொண்டே இருக்கிறார். இத்தனை ஆண்டுகள் என்னை அவர் கவனித்து வந்திருக்கிறார். சில இரவுகளுக்கு முன்பு அவர் எனக்கு மிகுந்த தேறுதலைக்



கொண்டு வந்தார். எனக்கு ஒரு கனவு வந்தது, அதில் ஓபேத் என் அருகே வந்தார். அவர் என்னிடம், "அப்பா கவலைப்படாதீர்கள், நான் உயிரோடிருக்கிறேன், நான் உங்களுக்கு உதவி செய்கிறேன். நான் உங்களுக்கு சேவை செய்கிறேன், நான் இன்னும் உங்களுடன் இருக்கிறேன், கவலைப்படாதீர்கள்' என்றார். அவர் என்னருகே இருப்பதாகவே உணருகிறேன். அதன் பிறகு என்ன நிகழ்ந்தது என்று கூறுகிறேன். டிசம்பர் மாதம் 18ம் தேதி மாலையில் நான் நாட்டிங் ஹாம் புனித யோவான் கல்லூரியில் இறையியல் படித்து வந்த சைலஸ் சாமுவேலைச் சந்திக்க அங்கு பயணப்பட்டேன். நான் வந்தபோது என்னை வண்டி நிலையத்தில் என்னை அந்தப் பையன் தவறவிட்டார். அங்கு நான் வேண்டப்படாத குழந்தைபோல, என்ன செய்வது, எங்கு போவது என்று அறியாதவனாய் நின்றிருந்தேன். அந்த இளைஞன் சைலஸுக்காக காத்துக் கொண்டு ஏதாவது செய்ய நினைத்து நேஷனல் எக்ஸ்பிரஸின் பயணச்சீட்டு அலுவலகத்துக்குச் சென்றபோது அங்கு ஒரு இளைஞன் உட்கார்ந்திருப்பதைக் கண்டேன், நான் அந்த இளைஞனிடம் சாலிஸ்பரி செல்ல ஒரு பயணச்சீட்டு கொடுக்கும்படி கேட்டேன். அவன் என்னை உற்றுப் பார்த்து 'நீங்கள் ஒரு அந்நியர் போலத் தெரிகிறீர்கள்' என்றான். ஆம் என்றேன். நீங்கள் எங்கு செல்கிறீர்கள்? என்றான். நான் போகவேண்டிய இடம் எனக்குத் தெரியவில்லை' என்றேன். அப்பொழுது அவன் சைலஸின் தொலைபேசி

எண்ணைக் கேட்டு வாங்கி தொலைபேசியில் அழைத்தான். புனித யோவான் கல்லூரியிலிருந்து ஒரு பெண் பதில் பேசினாள் அந்தப் பெண்ணிடம் தான் என்னை பேருந்தில் ஏற்றி அங்கு அனுப்புவதாகவும், பஸ் நிலையத்தில் என்னைச் சந்திக்க ஒரு ஆளை அனுப்பு மாறும் அந்த இளைஞன் கூறினான்.

இது வழக்கத்துக்கு மாறான ஒன்று பிரிட்டிஷ் மக்கள் பெரும்பாலும் மற்றவர்களுடைய விவகாரங்களில் தலையிடுவதில்லை. இந்தப் பையன் அசாதாரணமான வன் அவன் என்னைப் பேருந்தில் ஏற்றி அனுப்பினான், அங்கே பேருந்து நிலையத்தில் அந்தக் குளிரில் சில்வியா எனக்காகக் காத்திருந்தாள். அவள் என்னை சைலசின் வீட்டிற்கு அழைத்துக் கொண்டுபோனாள், அங்கே சைலஸின் மனைவி நீலா வாசலிலேயே காத்து நின்றார். கையில் ஆறுவாரமான கைக்குழந்தை இருந்தது. எல்லாம் மிகச் சுலபமாக முடிந்தது. நான் செல்ல வேண்டிய இடத்திற்கு எவ்விதக் குழப்பமும் கஷ்டமும் இல்லாமல் சென்றடைய யாரோ உதவி செய்தது ஆவிக்குரிய தெய்வீக ஏற்பாடு என்றே நான் உணருகிறேன். தேவ மக்கள் மரிக்கிறதில்லை. ஆனால், கொஞ்சகாலம் தங்களுடைய அன்பானவர்களுக்குச் சேவையும் உதவியும் செய்கிறார்கள் என்று நான் நம்ப முடியும். உடல் ரீதியான பிரிவும் துக்கத்தின் காயமும் இருக்கின்றன. ஆனால் என்னுடைய பகுதியில் இந்த அடியை நன்றியுள்ள விதத்தில் நான் ஏற்றுக்கொண்டேன்.



ஓபேத் எங்களுடன் 26 ஆண்டுகள் இருக்கும்படி கர்த்தர் அனுமதித்தார்.

அவர் விட்டுச் சென்ற இனிய நினைவுகள் அவரை உயிரோடு வைக்கும். குற்றமற்ற கிறிஸ்தவ வாழ்க்கை எப்படியிருக்கும் என்று வாழ்ந்து காட்டிய அப்படியொரு அன்பான மகனை கர்த்தர் எனக்குத் தந்ததற்காக அவருக்கு நன்றியுள்ளவனாயிருக்கிறேன். அவரைக் குறித்து நான் பெருமை கொள்கிறேன். மகிழ்ச்சியுள்ள மெய் அர்ப்பணிப்புள்ள மூன்று கிறிஸ்தவ பிள்ளைகளை எனக்குத் தந்தபடியால் கர்த்தருக்கு நன்றியுள்ள வனாயிருக்கிறேன். சாமுவேலும் குல்டாவும் என்னுடன் இருக்கிறபடியால் தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன். அவர்களுடைய அன்பும் தைரியமூட்டுதலும் எனக்கு மிகப் பெரியதாகும்.

எடின்பர்க் நகரிலுள்ள ‘ஏசியன் கன்சொர்ன்’ அமைப்பிலுள்ள அன்பு நண்பர்கள் எனக்கு ஏற்கனவே ஆறுதலாயிருந்து வருகின்றனர். நான் எனது கூட்டினை அவர்கள் நடுவே உருவாக்க ஆயத்தமாயிருக்கிறேன். இந்த இடத்தில் எனது ஆண்டவருககுச் சாட்சி கொடுக்கவும் ஆயத்தமாயுள்ளேன். இந்த 40 ஆண்டு காலமும் ஆண்டவருக்காகச் சாட்சி கொடுப்பதே எனது வாழ்க்கை யாயிருக்கிறது. என்னுடைய மகன் ஓபேதின் முன்மாதிரி யைப் பின்பற்றி பாகிஸ்தானில் பகிரங்கமான சாட்சி கொடுக்க தீர்மானமான விருப்பத்தினால் நான் நிறையப்

பட்டுள்ளேன். செய்தியானது பகிரங்கமானது, அது சுற்றி வளைத்துப் பேசுகிறதில்லை என்று ஆரம்பமுதலே நான் புரிந்துகொண்டேன். சிலுவையின் உபதேசம் அங்கு ஒரு குற்றமாயிருக்கிறது. மக்கள் இடையே அது அதிகமாக அங்கீகரிக்கப்படுவதில்லை. கர்த்தராகிய இயேசு தாமே உறுதியாகவும் தீர்மானகவும் இருந்தார். தேவையுள்ளோர் பால் அவர் அன்பும் கரிசனையும் உள்ளவர், ஆனால் அவரை எதிர்த்தவர்கள்பால் நேரடியாக இடைபடுபவராக வும், வெளிப்படையாய் பேசுபவராகவும் இருந்தார்.

தேவனுக்காகக் கிரியை செய்யும் தரிசனமும் விருப்பமும் உடையவர்களாக மக்கள் இருப்பதை இங்கே பர்மிங்ஹாமிலும், சமீபத்தில் நான் மேற்கொண்ட ஸ்காட்லாந்து பயணத்தின்போதும் கண்டேன். ஆனால் இஸ்லாமிய ஒடுக்குதல் குறித்து அவர்கள் அதிகம் பயப்படுவதை நான் அறிந்தேன். அவர்களில் சிலர் மறை முகமான, மெதுவான அணுகுமுறை உள்ளவர்களாய் இருக்கின்றனர். யாரையும் காயப்படுத்தாதபடி யாருக்கும் இடையூறு செய்யாதபடி மிகவும் கவனமாயிருக்கிறார்கள். தேவனுடைய வார்த்தையுடன் ஜனங்களை நேரடியாகச் சந்திக்காமல், அவர்கள் நட்புறவையும ஐக்கியத்தையும் ஏற்படுத்த நினைக்கிறார்கள். ஆனால் அநேக விஷயங் களில் அவர்களுடைய உபசரிப்பு மற்றும நட்புறவை அவர் களது பலவீனத்தின் அடையாளம் என்று ஆசியாவி லிருந்து வந்த முஸ்லிம் நண்பர்கள் எடுத்துக் கொள்கின்றனர். இந்த மேற்கத்திய ஜனங்களுக்கு விட்டுக்



கொடுப்பது தவிர வேறொன்றும் தெரியாது என்று அவர்கள் நினைக்கிறார்கள். மெய்யாக இது மிகவும் தவறான தாகும். நாம் யாருக்கும் இடையூறு செய்ய விரும்ப வில்லை என்று இருந்துகொண்டான். மக்களுக்கு ஒருபோதும் சுவிசேஷத்தை அறிவிக்க முடியாது என்பதை கிறிஸ்தவர்களாகிய நாம் உணரவேண்டும். சிலுவையின் உபதேசம் மெய்யாகவே இடறல் உண்டாக்கும். பரிசுத்த பவுல் சொன்னது போல நாம் புத்தியீனரும் பயித்தியங் களும் போல இருக்கும்படி அது நம்மை அழைக்கிறது. நாம் மிகவும் யோசிக்கிறவர்களும் விட்டுக் கொடுத்துப் போகிறவர்களுமாய் இருக்கும்படி அல்ல.

இந்த நாட்டில் பல கல்விமான்களும் மெத்தப் படித்த ஆட்களும் இஸ்லாமிய ஆராய்ச்சியில் அதிகாரி களாக இருப்பதை நான் அறிவேன். ஆனால் நான் முஸ்லிமாக இருந்தேன் பின்பு பல ஆண்டுகள் இஸ்லாமிய எதிர்ப்பைச் சந்தித்துக்கொண்டு கிறிஸ்தவனாக பாகிஸ்தானில் வாழ்ந்துவந்திருக்கிறேன். நான் அறிந்த இஸ்லாம் ஒடுக்குதல், வன்முறை மற்றும் இச்சை ஆகியவற்றைத் தவிர வேறொன்றையும் அது மக்களுக்குக் கொடுக்க முடியாது என்பதை நான் சொல்லி யாகவேண்டும். அது அடிக்கடி கூட்டைக் கலைக்கிறது. இஸ்லாமிய சரித்திரத்தில் படித்துப் பார்த்தால் பலதார திருமணத்தை அது ஆரம்பமுதலே போதித்து வருகிறது என்பதைக் காணமுடியும். இஸ்லாத்தினால் அறிமுகப்

படுத்தப்படும் பரதீசு இச்சையே அன்றி வேறல்ல. இந்த வாழ்க்கையிலும் கூட நீங்கள் போதிய சொத்து வைத்திருப் பவரானால் நான்கு மனைவிகளை வைத்தக் கொள்ள உங்களுக்கு உரிமையுண்டு.

நீங்கள் உங்கள் மனைவிகளை மாற்ற விரும்பி னால் எந்த நேரத்திலும் மாற்றிக் கொள்ளலாம். இஸ்லாத்தில் பெண்கள் எதிர்த்துப் போராடவோ, நியாயத்தை எடுத்துச் சொல்லவோ கூட உரிமையில்லாத அளவுக்கு தாழ்ந்த நிலையில் வைக்கப்பட்டுள்ளனர் அவர்கள் ஒரு மனிதனால் அல்லது பல ஆண்களால் பாதிக்கப்படுகிறவர்களாகவோ இருக்கின்றனர். பலதார திருமணத்தினால் எவ்வளவு தீமைகள் ஏற்பட்டிருக்கின்றன என்று நான் கண்டிருக்கிறேன். மனைவிகளும் வாரிசு களும் ஒருவரையொருவர் எதிர்ப்பதை நான் கண்டிருக்கிறேன்.

எனக்கு ஒரு நிகழ்வு ஞாபகத்திற்கு வருகிறது. எனது நண்பன் ஒருவர் இரண்டு பெண்களைத் திருமணம் செய்திருந்தார். பின்பு தன்னுடன் விருந்துகளில் பங்கு பெறக்கூடிய, சமூகத்தில் தன்னுடன் பொருத்தமாக உடன் வரக்கூடிய மூன்றாவது மனைவியையும் கொண்டார். இந்தப் பெண்மூலம் அவருக்கு ஒரு மகளும் மகனும் இருந்தனர். நான் அவர் வீட்டுக்குச் சென்றிருந்த போது அந்தத் தாய் தனது மகனிடம், மகனே நீ உன் பங்காளி சகோதரர்கள் குறித்து மிகக் கவனமாயிருக்க வேண்டும். உன் அபபாவின் முழுச் சொத்தும் எனக்குக் கிடைக்கக்



கூடாது என்று அவர்கள் சதி செய்து உன்னைக் கொன்று போட நினைக்கிறார்கள் என்றாள். பின்னர் தன் மகனுக்காக 37,000 ரூபாய் கொடுத்து நேர்த்தியான நம்பகமான ரஷிய துப்பாக்கி ஒன்றை வாங்கினாள் என்று கேள்விப்பட்டேன். தன் பிள்ளைகளுக்கு அன்பையும், பொறுமையையும், கரிசனையையும். சகிப்புத் தன்மை யையும் கற்றுக் கொடுக்கவேண்டிய தாய் அதற்குப் பதிலாக வெறுப்பையும் பாதுகாப்பின்மையையும் தன் மகனுக்கு உண்டாக்குகிறாள். இதைப்போன்ற பல உதாரணங்களை நான் சொல்ல முடியும்.

தேசிய மற்றும் சர்வதேசிய மட்டத்திலும் இவ்வாறு தான் நிகழ்கிறது. சண்டைகள், கலவரங்கள், பிரிவினைகள் ஆகியவற்றைத் தவிர வேறு எதையும் அதிக மாக இஸ்லாம் இவ்வுலகிற்குத் தரவில்லை. இஸ்லாமிய உலகில் நிகழ்ந்தவைகள் மூலமாகவே நாம் இதை நமது சொந்தக் கண்களாலேயே கண்டிக்கிறோம். ஈரானுக்கும், ஈராக்குக்கும் இடையே நடந்த யுத்தத்தில் திறமை மிக்க இராணுவத்தளபதிகள் அநேகர் கொல்லப்பட்டனர். எண்ணற்ற பொதுமக்களும் உயிரிழந்தனர். அங்கு சமாதானம் கொண்டுவர உலகத் தலைவர்கள் முயற்சிக் கின்றனர். ஆனால் அங்கு இஸ்லாம் இருக்கும்வரை சமாதானம் ஏற்படமுடியாது. ஒரேயொரு சமாதானப் பிரபு மாத்திரமே இருக்கிறார். அவர் பெயர் இயேசு கிறிஸ்து அவர் மரித்தார் அதன் பிறகு வெற்றிவேந்தராக எழுந்தார்.

அவர் தாழ்மையுள்ளவரானபடியால் வெற்றியுள்ள வரானார். அவர் ஒருபோதும் வன்முறையைப் பயன்படுத் தியதில்லை. அவர் தமது சத்துருக்களுக்கு ஒருபோதும் தக்கபடி பதில் செய்ததில்லை. தேவனுடைய மேன்மை இயேசுவின் தாழ்மை மூலமாக வெளிப்படுத்தப்பட்டது என்று கிறிஸ்தவர்களாகிய நாங்கள் விசுவாசிக்கிறோம். இயேசு கிறிஸ்து தாமே தமது பிதாவுக்கு முழுவதும் கீழ்ப் படிந்தவராக இருந்தார். உலகத்திலே அதிகாரம் மற்றும் ஆக்கிரமிப்பு மூலமாக தாங்கள் பெரியவர்கள் எனக் காட்டிக்கொள்கின்றனர். ஆனால் அதனால் நன்மை ஒன்றும் வருகிறதில்லை. தேவனுக்கு தங்களை ஒப்புக் கொடுத்தவர்களும் இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றத் தங்களை அர்பணித்தவர்களுமாகிய மக்கள் இவ்வுலகத் தில் இருக்கிறபடியால் தேவனுக்கு நன்றி. இயேசு கிறிஸ்து வின் வழி பலத்தினாலும் பட்டயத்தினாலுமல்ல, அவருடைய கீழ்ப்படிதல், தியாகம், சிலுவையில் சிந்தின இரத்தம் மற்றும் சிலுவையின் மீது அன்புடன் "பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்ன தென்று அறியாமலிருக்கிறார்கள்." (லூக்கா 23:34) என்று செய்த ஜெபம் ஆகியவற்றின் மூலம் உண்டாயிருக்கிறது.

இயேசு கிறிஸ்து மனுக்குலத்தின் அறியாமையை அறிந்திருந்தார்; இன்னும் பெரும்பாலான மக்கள் தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாமல் இருக்கி றார்கள் என்று அறிந்திருக்கிறார். அவர் இன்னமும் தவறு செய்கிறவர்களை மன்னிக்கிறார், அவருக்கு முன்பாக



அவர்கள் தங்களை ஒப்புக்கொடுத்தால், என்னை அவர் புது சிருஷ்டியாய் மாற்றினதுபோல அவர்களையும் புது சிருஷ்டிகளாய் மாற்றுகிறார். நான் கர்த்தரை அறிந்து இருந்த படியால்தான் நான் பாடு அனுபவித்தது சாத்தியமாயிற்று. நான் அவரை அறிந்திருக்கிறேன். அவர் என்னை அறிந்திருக்கிறார். இந்த எல்லாப் பிரச்சனை களையும் மேற்கொள்ள எனக்குக் கிருபையையும் பெலனையும் போதிய அளவு அவரே கொடுக்கிறார். யோபு சொன்னார்: "நான் சோதிக்கப்பட்டபின்பு பொன்னாக விளங்குவேன்" (யோபு 23:10) சோதனைகள், பாடுகள், பரீட்சைகள், தேர்வுகள் மூலமாக மட்டுமே நாம் பொன்னாக மாறுகிறோம். அவருடைய பார்வையில் விலையேறப்பெற்றவர்களாக மாறுகிறோம். ஆகவே தேவன் என்னை நடத்திய எல்லாப் பாதைகளுக்காக அவருக்கு நன்றி சொல்லுகிறேன். அவருக்கு அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கையின் மூலமாக அவருடைய பெயர் முழு தைரியத்துடன் அறிவிக்கப்படவேண்டும்.

எங்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள் என்று உங்களைக் கேட்காமல் இதை நான் முடிக்க முடியாது. காயங்கள் ஆறுவதற்கு நேரம் தேவை. நீங்கள் துதி என்னும் தைலத்தை உருவாக்குவீர்களானால் எங்க ளுடைய உள்ளான காயங்கள் ஆறுவதற்கு அது உதவியா யிருக்கும் என்று விசுவாசிக்கிறேன். பிரிட்டனிலுள்ள எனது நண்பர்களுக்கு, அவர்களுடைய அன்பான ஆதரவு, ஜெபங்கள், தைரியமூட்டுதல் மற்றும் உபசரிப்புக்காக

நன்றி கூறுகிறேன். எனது நண்பர்கள் ஜாக் மற்றும் க்வெண்டி ஆண்டர்சன் ஆகியோருக்கு எனது நன்றிகள். அவர்கள் இந்த எழுத்துக்களை அச்சிட்டு ஒரு புத்தகமாக உருவாக்கித் தந்தனர் அவர்களுக்கு இருதயத்தின் ஆழத்திலிருந்து நன்றியுள்ளவனாயிருக்கிறேன். அவர்களை 30 ஆண்டுகளுக்கு முன்பாகத் தெரியும், இப்பொழுது அவர்களை சரீரப் பிரகாரமாகக் காண்கிறேன். பலவீனம் இருப்பினும் உள்ளே பெலனும் சமாதானமும் இருக்கிறது.

பர்மிங்ஹாமில் ஒரு நாள் சில மரங்களின் உச்சியில் சில பறவைகளின் கூடுகளை நான் கண்டேன். அவை கவிஞர் இக்பால் கழுகுகளைக் குறித்து எழுதின சில வரிகளை எனக்கு நினைப்பூட்டின:

"நீ ஒரு கழுகு உனது இடம் உயரத்திலிருக்கிறது எந்தத் தீமையும் அணுகமுடியாத உயரத்தில் அது இருக்கிறது.

உள்ளான சமாதானமும் பெலனும் எங்களுக்குத் தரப்படுகிறது. கர்த்தர் தந்துள்ள சமாதானத்தை ஒன்றும் தொடவோ எடுத்துப் போடவோ முடியாது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கூறினார்: "என்னுடைய சாமாதானத்தை நான் உங்களுக்குக் கொடுக்கிறேன்; அது இந்த உலகம் தரமுடியாத சமாதானம்." (யோவான் 14:27) உலகம் அந்தச் சமாதானத்தைத் திருடமுடியாது. கூட்டைச் சூறையாடு வதும், கலைப்பதும் கூட தேவனுடைய சமாதானத்தை அகற்றிவிட முடியாது. ஏனெனில் நாம் இயேசு கிறிஸ்து



வைப் பின்பற்றுகிறவர்களாயிருக்கிறோம். "கைகளால் செய்யப்படாத வேறொரு கூடு நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம்" (2 கொரிந்தியர் 5:1) இயேசு கிறிஸ்து வின் அன்பிலும் வல்லமையிலும் நாம் வாழ்கிற அளவுக்கு மனித வேதனை குறைக்கப்படுகிறது. நாம் இங்கே வேதனையால் முனகுகிறபோதும் பரலோக அன்பு அங்கே இருக்கிறது. ஆகவே நமது வேதனை குறைகிறது. அவருடைய பாடுகளோடு ஒன்றாக்கப்படுகிறது, கடைசியில் மரணமானது ஜீவனாலே விழுங்கப்படுகிறது.

"பிற்சேர்க்கை: தனது சொந்த வார்த்தைகளில் ஓபேதின் சாட்சி"

நான் ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தேன். எனது தகப்பனார் இஸ்லாத்திலிருந்து இரட்சிக்கப்பட்டவர். நான் எனது பெற்றோருக்கு இளைய (மூன்றாவது) மகன். எனக்கு ஒரு அண்ணனும் அக்காவும் உண்டு.

குழந்தைப் பருவத்திலிருந்தே நாங்கள் ஞாயிறு பள்ளியில் ஆர்வமாயிருந்தோம். குடும்ப ஜெபம் மற்றும் சபை ஆராதனை ஆகியவற்றில் ஒழுங்காகப் பங்கு பெற்றோம். இவை யாவற்றிலும் நான் பங்குபெற்றாலும் ஒரு பெயரளவு கிறிஸ்தவனைப் போல் ஞாயிறு பள்ளியில் என்ன கற்பிக்கிறார்கள், சபையில் என்ன பிரசங்கிக்கிறார் கள் என்றெல்லாம் புரியாதவனாக இருந்தேன். எனது இளம் வயதுகளில் கிறிஸ்தவர்கள் அல்லாத நண்பர்கள் பலர் எனக்கு இருந்தனர், அவர்கள் நல்ல பையன்கள் அல்ல, எனது நடைமுறை மற்றும் ஆவிக்குரிய வாழ்க்

கைக்கு அவர்கள் எவ்விதத்திலும் உதவியாயில்லை. என்னைச் சுற்றியிருந்த பிள்ளைகளிடம் கடுமையாக, அவர் களை அடிக்கிறவனாக, அவர்களுடன் சண்டை போடுப வனாக, அவர்களைத் துன்புறுத்துகிறவனாக, அவர்களை அற்பமாக நோக்குகிறவனாக இருந்தேன். மற்ற பிள்ளை களிடம் நான் தவறாக நடந்து கொள்வதைக் குறித்து அநேக முறையீடுகள் வருவதுண்டு. ஒவ்வொரு முறையும் நான் மற்றவர்களிடம் சாந்தமாக இருக்க வேண்டும் என்று அறிவுரை கூறப்பட்டது. நான் அந்த அறிவுரைகளை ஏற்க வில்லை, மீண்டும் பழையபடியே இருந்தேன்.

நான் பள்ளிப் படிப்பை முடித்து கல்லூரியில் சேரும் வரைக்கும் இது இப்படியே பல ஆண்டுகள் தொடர்ந்தது. எனது அண்ணன் சபையில் என் அப்பாவுக்கும் மற்றவர் களுக்கும் உதவிசெய்வதனால் நானும் உதவி செய்வேன், ஆனால் மனப்பூர்வமாக அல்ல. இருப்பினும் என் அண்ணன் விரும்பிய தாழ்மையுள்ள மற்றவர்களுக்கு உதவி செய்யும் வாழ்க்கையை நான் பாராட்டினேன். ஒரு நாள் என் அண்ணன் மிகவும் வற்புறுத்தியதால் ஒரு வாலிபர் கூட்டத்திற்குச் சென்றேன். எங்களுடைய பண்பாட் டின்படி நான் என் அண்ணனுக்கு மறுப்புச் சொல்லவோ கீழ்ப்படியாமை காட்டவோ கூடாது. அந்தக் கன்வென்ஷ னில் ஒரு பிரசங்கியார் வேதத்தில் 2 இராஜாக்கள் 7:9 லிருந்து செய்தி கொடுத்தார். அதிலே தொழுநோயாளிகள் விடுதலையின் செய்தியை அறிவிப்பது குறித்து சொல்லப் பட்டிருக்கிறது. அப்பொழுது நான் என்னைக் குறித்து



யோசித்தேன். நானே பல பாவங்களால் கட்டப்பட்டிருக் கும்போது மற்றவர்களுக்கு நற்செய்தியினைத் தருவது எப்படி? எனக்காக ஏறெடுக்கப்பட்ட தொடர்ச்சியான ஜெபங்கள், எனது அண்ணன் என்மீது காண்பித்த மிகுந்த ஆர்வம் காரணமாக இந்த வசனங்கள் என் மூளையிலும் இருதயத்திலும் ஒட்டிக்கொண்டன. இது தேவன் எனக்குக் குறித்த நேரம் என்று நினைக்கிறேன். நான் என் பாவங் கள் யாவற்றையும் சிலுவையில் அறையுண்ட என்னுடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவிடம் அறிக்கையிட்டேன். என் கடந்த கால வாழ்க்கையை அவர் முன் வைத்தேன். இனி நான் அவருடையவனாக இருக்கவும் வாழ்நாள் முழுவதும் அவருக்காகச் சேவை செய்யவும் ஏதுவாக அவர் தமது இரத்தத்தினால் என்னைச் சுத்தமாக்கி எனக்கு பரிசுத்த ஆவியின் வரத்தைத் தரும்படியாகக் கேட்டேன். என்னிலிருந்து பெரிய பாரம் விலகினதாக உணர்ந்தேன். நான் அளவற்ற சந்தோஷமடைந்தேன். அவருடைய கிருபையினாலே எனக்கு அளிக்கப்பட்ட இலவச ஈவாகிய இரட்சிப்புக்காக அவரை ஸ்தோத்திரிக்கிறேன்.

அப்பொழுது தேவன் பரிசுத்த ஆவியின் மூலமாக எனக்குத் தைரியத்தையும் ஞானத்தையும் தந்தருளினார். இயேசுவே எனது ஒரே இரட்சகர் என்று எனது நண்பர்களி டமும் என்னைச் சுற்றி இருந்தவர்களிடமும் சாட்சி கொடுக்க ஆரம்பித்தேன்.

அறிவியல் இளநிலைப் பட்டம் (B.Sc.,) பெற்ற பின்பு, பாகிஸ்தான் தொடர்வண்டித் துறையில் உயர்நிலை

கணக்காயராக பணியிலமர்ந்தேன். அந்த அலுவலகத்தில் முஸ்லிம்களுக்கு நமது இரட்சகரைக் குறித்துச் சாட்சிகூற நிறைய வாய்ப்புகள் இருந்தன. வேலையில் இருந்து கொண்டே முதுநிலை பொருளாதாரம் (MA Econ,) படிக்க இரவுக் கல்லூரியில் சேர்ந்தேன். அதன் பின் சட்டப்படிப் பில் (LLB) சேர்ந்து படித்தேன். இவைகளை முடித்துவிட்டு தற்பொழுது சர்வதேச உறவுகளில் முதுகலைப் பட்டம் பெற (MA IR,) படித்துக்கொண்டிருக்கிறேன்.

என்னுடைய படிப்பிலும் வேலையிலும் வெவ்வேறு உயர் கல்விமான்களைச் சந்தித்து இயேசு கிறிஸ்துவைக் குறித்து சாட்சிகொடுக்க தைரியமும் வாய்ப்புகளும் கிடைத்தன. ஆனால் எனக்கு ஆழமான தேவவசன அறிவு இல்லை என உணர்கிறேன். இயேசுவைக் குறித்து அதிகத் தெளிவாகவும் ஆவிக்குரிய ஞானத்தோடும் சொல்ல நான் இன்னும் அதிகமாய் தேவனுடைய வசனத்தைக் கற்றுக் கொள்ள அருள் செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொண்டேன். தேவன் தம்முடைய வசனத்தினால் முழுமை யாகவும் பலமாகவும் தரிப்பிக்கப் பட்டிருக்கவேண்டுமென் றும் அவருடைய திட்டங்களின்படி என் எதிர்கால வாழ்வை அவர் விரும்புகிற இடத்தில் அவர் விரும்புகிறபடி நான் வாழவேண்டும் என அவர் விரும்புகிறார் என்று நான் ஆழமாய் நிச்சயம் கொண்டிருக்கிறேன்.

நான் எனது சொந்த நாட்டிற்காக மட்டுமல்ல, கலவரப்பட்டுள்ள, இரட்சிப்பும் சமாதானமும் இல்லாதிரு க்கும் முழு உலகத்திற்காகவும் அதிகமான பாரம் கொண்டுள்ளேன். வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிற



இயேசுவில் மாத்திரமே இரட்சிப்பும் சமாதானமும் உண்டு. நான் அதிகமாக ஜெபிக்கிறேன். என்னுடைய வாழ்வில் தேவ சித்தத்தை அறியும்படி இந்நாட்களில் நாடுகிறேன்.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!

கிறிஸ்துக்குள் உங்கள் ஓபேத் நயோர் நாமான்.

## அறிவுத் திறன் கேள்விகள்

அன்புள்ள வாசகரே, இந்தப் புத்தகத்தை நீங்கள் வாசித்திருப்பீர்களெனில் பின்வரும் கேள்விகளுக்கு நீங்கள் பதிலளிக்கக் கூடியவர்களாய் இருப்பீர்கள். குறைந்தது 14 கேள்விக்குச் சரியாக பதில் அளிப்பவர் களுக்கு வேறொரு புத்தகம் அனுப்பப்படும்.

1. நாமான் குடும்பத்தின் கூட்டைச் சிதைத்த நிகழ்வு எது? அது எப்படி நிகழ்ந்தது?
2. நாமான் குடும்ப நண்பர்கள் அதற்கு எப்படி பதில் செய்தனர்?
3. சகோதரர் நாமான் கிறிஸ்துவை விசுவாசிக்கவும் தன் வாழ்வை மாற்றிக் கொள்ளவும் செய்த இரண்டு சம்பவங்களை விவரிக்கவும்.
4. கிறிஸ்தவத்துக்கு மாறின நாமான் குடும்பத்தின் பதில் கிரியை எப்படி இருந்தது?
5. போதகர் நாமான் தனது பயிற்சிக் காலத்தில் அவர் எப்படி போதக ஊழியத்தைச் செய்தார்? குஜெராக் களுடன் அவர் எப்படி உறவைக் கட்டியெழுப்பினார்?
6. சுக்கூரில் பரிசுத்த இரட்சகர் ஆலயத்தில் தாம்

சந்தித்த சவால்களைச் சரிசெய்ய நாமான் மேற்கொண்ட திட்டம் என்ன?

7. முழு சுவிசேஷ ஊழியத்தில் இடம் பெற்றிருந்த இரண்டு சேவை முறைகள் யாவை? சகோதரர் நாமான் இரண்டையும் எப்படி செயல்படுத்தினார்?

8. சகோதரர் நாமான் தனது ஆழமான நியாய உணர் வினிமித்தம் அவர் மேற்கொண்ட செயல்களில் ஒன்றை விவரிக்கவும்.

9. கூட்டினைப் பாதுகாக்கும் நிகழ்வுகள் முஸ்லிம் களிடையே சகோதரர் நாமானின் புகழ் குறிந்து நமக்குக் காண்பிப்பது என்ன?

10. ஆவிக்குரிய வளர்ச்சி கண்டிருக்க வேண்டிய பாகிஸ் தானிய சபைகள் அவை வளர்ச்சி அடையாத படி தடுக்கக் காரணமாய் அமைந்த செயல்பாடுகள் யாவை?

11. இராஜா ஏழை மனிதனுக்குக் கொடுத்த யானையின் கதை நமக்குப் போதிப்பது என்ன?

12. சகோதரர் நாமானுக்குத் தரப்பட்டதுபோல் ஒரு யானை உங்களுக்குத் தரப்பட்டால் என்ன செய்வீர்கள்?

13. தனது குடும்பம் சில நேரங்களில் கடினமான சூழ்நிலை களில் சென்றபோதும் சகோதரர் நாமான் கொடுத்த சாட்சி என்ன?

14. தங்கள் முதல் மகன் சாமுவேல் பிறந்த தருணத்தை



இயேசுவில் தாங்கள் கொண்டிருந்த விசுவாசத்திற்கு சாட்சி கூற டெய்ஸி அதை எப்படிப் பயன்படுத்தினார்?

15. சகோதரர் நாமானின் வாழ்க்கை மூலமாக கிறிஸ்தவம் குறித்து சகோதரர் நாமானின் சகோதரர் பெற்ற செய்தி என்ன?

16. ஓபேத் இயேசுவில் கொண்டிருந்த விசுவாசம் அவர் வாழ்க்கையில் என்ன தர்க்கத்தை ஏற்படுத்தியது?

17. ஓபேத் தனது சமூக வாழ்க்கை மற்றும் வேலையை தனது விசுவாசத்திற்குச் சாட்சி கொடுக்க எவ்வாறு பயன்படுத்தினார்?

18. சகோதரர் நாமான் நமது குடும்பத்துக்கு விடுக்கப் பட்ட மரண அச்சுறுத்தல்களுக்கு எப்படி பதிலளித்தார்?

19. சகோதரர் நாமான் தனது மகனுடைய மரணம் மூலமாக சகிக்க வேண்டியிருந்த பாடுகள் குறித்துக் கொண்டிருந்த அபிப்பாரயம் என்ன?

20. அநேக மேற்குலக கிறிஸ்தவர்கள் இஸ்லாத்துடன் மோதல் போக்கு இல்லாமிலிருக்கவேண்டும் என்ற மனப் பான்மையுடன் இருப்பது குறித்து சகோதரர் நாமான் அவர்களின் கருத்து என்ன?